# என்னுரை

பழம் தமிழ் நூல்களில் உள்ள செய்யுள்களும், இந்து சமய நூல்களில் உள்ள தத்துவங்களும் பாமர மக்களுக்கு விளங்க வேண்டும். கல்வியறிவு இல்லாமையால் தான் பலர் தீய செயல்களைச் செய்கிறார்கள். இப் பழந் தமிழ் நூல்கள் இயற்றப்பட்ட காலத்தில் இருந்து இன்றுவரை பல்வேறு விதமான உரைநூல்கள் வெளிவந்த போதும் அவற்றில் மாற்றம் எதுவும் இருக்கவில்லை.இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் அறிஞர்களால் எழுதப்பட்டவற்றையே சில சொல் மாற்றம் செய்து எழுகிறார்கள்.இதனால் தான் நான் கதைகள் எழுத ஆரம்பித்தேன்.உரைநூல்களை யாரும் வாசிப்பதில்லை.குறிப்பாக மாணவர்கள்.

முதுமொழிக்காஞ்சி என்ற நூல் மிகவும் அருமையானத.மிகவும் எளிமையான சொற்களைக் கொண்ட ஒரு வரிச் செய்யுள் நூல். ஔவையாரைப் போல ஒரு வரியில் அருமையான கருத்துக்களைக் கூறுகிறது. “ஓதலின் சிறத்தன்று ஒழுக்கம் உடைமை” மேலும் மேலும் கற்பதிலும் பார்க்க ஒழுக்கமாக வாழ்வது தான் சிறந்தது என்று கூறப்படுவதன் மூலம் இன்று வரை கற்றவர்களின் நிலை பற்றிக் கூறப்படுகிறது.பொதுவாகக் கற்றவர்களே ஒழுக்கமில்லாதவர்களாக வாழ்கிறார்கள்.

முதுமொழி என்பது முன்பு வாழ்ந்த பெரியவர்களது வார்த்தைகள். காஞ்சி என்பது பெண்கள் இடையில் அணியும் ஆபரணம். பல்வேறு வகையான மணிகளால் ஆனது காஞ்சி.அது போல பல்வேறு முதுமொழிகளால் ஆனது முதுமொழிக் காஞ்சி. இதன் ஆசிரியர் மதுரைக் கூடலூர்க் கிளார்.உலகில் வாழும் மக்களுக்காக நூறு முதுமொழிகளைக் கூறியுள்ளார். இவை இரண்டாயிரம் வருடங்களாகத் தத்துவங்களாகவே இருந்தன. நான் அவற்றை முதன் முதலாகக் கதைகளாக்கியுள்ளேன். அருமையான முதுமொழிகளை அறிந்து கொள்ளுங்கள். இதைக் கணணி மயப்படுத்தி தந்த திருமதி. தபஷ்வினி சந்திரகாந்தன் அவர்களுக்கும், அழகான அட்டைப் படத்தை வடிவமைத்துத் தந்த ப.யாழினிக்கும் நன்றி கூறிக் கொள்கிறேன்.

நன்றி

கே.வி.குணசேகரம்
குணம் பதிப்பகம்,
கோப்பாய் மத்தி,
ஸ்ரீலங்கா.

## முதுமொழிக் காஞ்சி

சிறந்த பத்து

1. **ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
   **ஓதலின் சிறந்தன்று ஒழுக்கம் உடைமை**

"கல்வி கற்று அறிவாளியாவதை விட ஒழுக்கமாக வாழ்வது தான் மேலானது.ஒழுக்கம் தான் மனிதனை உயர்த்தும்".

ஆரூரன் அந்த நிறுவனத்தின் உயர் அதிகாரி. மதிப்பு மிக்கவன்,ஒழுக்கமானவன், உயர்கல்வி கற்றவன், உள்ளூரிலும் வெளியூரிலும் மதிப்பு மரியாதை உடையவன். கந்தசேகரம் அவனது ஆசிரியர் பண்டிதர். ஆனால் ஒழுக்கமில்லாதவர், அவரை ஊரவர் யாருக்கும் பிடிக்காது. அவர் மது அருந்தும் இடங்களிலும், சூதாடும் இடங்களிலும் ஆரூரன் தனது மாணவன் என்பார். ஆரூரனது குடும்பம் மிகவும் வறியது. ஆரூரனின் தந்தை கூலி வேலை செய்து தான் ஆரூரனைக் கற்பித்தார். அவனைக் கற்பிப்பதற்காக அவர் தனது இன்பங்கள் பலவற்றை இழந்தார்.அதை ஆரூரன் உணர்ந்து கற்றவன்.அதனால் தனது குடும்பத்தைத் தனது உயிரைப் போல நேசிப்பவன்.

அன்று கந்தசேகரன் சிவன் கோவில் மடத்தில் இருந்து சொன்னார், "ஆரூரன் இப்போ பெரிய பதவியில் இருக்கலாம். அவனைப் படிப்பித்தது நான். அவன் படிக்கும் போது

கெட்டிக்காரனல்ல. அடித்து அடித்துத் தான் படிப்பித்தேன். அதிட்டம் தான் அவனை உயர்த்தியதே தவிர கல்வி உயர்த்தவில்லை. ஊரில் நான் தான் அறிவாளி"

அருகில் இருந்த மாதவன் சொன்னான், "ஊரில் மாடு மேய்க்கும் சீராளனும் ,உங்களுடன் சேர்ந்து கள்ளுக் குடிக்கும் சிவராசாவும்,நாகேந்திரனும் உங்களிடம் தான் படித்தனர். உங்களிடம் ஆரூரன் தரம் இரண்டிலும், ஐந்திலும் படித்தவன். அதனாலா அறிவு பெற்றவன். அவனின் முயற்சியும் ,அவனது தந்தையின் அர்ப்பணிப்பும் தான் அவனது முன்னேற்றத்துக்குக் காரணம். படிப்பில் எதுவும் இல்லை. கற்றவர்கள் கற்றபடி வாழ்வது தான் பெருமை. அறிவு, மதிப்பு .நீங்கள் பெரிதாகக் கற்றதாகக் கூறுகிறீர்கள். உங்களை ஊரில் யார் மதிக்கிறார்கள். பாடசாலைக்கே செல்லாத மணியம் ஒழுக்கமாக வாழ்வதாலும் முயற்சியுடன் பணத்தைத் தேடியதாலும் அவரை மக்கள் மதிக்கின்றனர். நேற்றுப் பாடசாலையில் புதிய வகுப்பறை கட்ட அத்திபாரம் வெட்டினார்கள். ஆரூரனும், மணியமும், தேவராசாவும் தான் விருந்தினர்களாகக் கலந்து கொண்டவை. தேவராசா பெரிதாகப் படிக்கவில்லை. அனால் ஒழுக்கசீலா், உங்களையும் உங்கள் படிப்பையும் யார் மதிக்கிறார்கள்?" என்றான்.கூடியிருந்தோர் பலமாகச் சிரித்தனர்.

## 2. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்

**காதலின் சிறந்தனறு கண்அஞ்சப் படுதல்.**

ஒருவர் மீது அன்பு கொள்வதை விட அவரின் துன்பத்தைக் கண்டு இரங்கி உதவுதலே சிறப்பானதாகும்.

ஊர்ப் பாடசாலையில் கல்வி கற்பவன் அங்கஜன். அங்கஜனது தகப்பன் ஊமை. தாய் தான் உழைத்து அங்கஜனைக் கற்பித்தாள். வீடுகளில் கூலி வேலை செய்வது அவளது தொழில்.பாடசாலையில் கெட்டிக்காரனான அங்கஜனைப் பற்றி அறிந்த தேவராசா அவனது வீட்டுக்குச் சென்றார். அது ஒரு குடிசை .வாய் பேச முடியாத சின்னையா, தேவராசாவைக் கண்டதும் எழுந்து நின்று வணங்கினான். அவனது மனைவி ஈஸ்வரி பரபரப்புடன் வெளியே வந்தாள். அவரால் பேச முடியவில்லை.

“ஈஸ்வரி,, நீ எமது வீட்டில் வேலை செய்யும் போது ஏன் உனது மகனைப் பற்றி என்னிடம் கூறவில்லை. எனது மனைவி உன்மீது அன்பு கொண்டு உதவுவானே தவிர உங்களின் துன்பத்தை நீக்க வேண்டுமென அவள் நினைக்கவில்லை. இனி அங்கஜன் எனது மகன். அவனது எல்லாத் தேவைகளையும் நான் இனி நிறைவேற்றுகிறேன். அவனைப் பட்டணத்தில் உள்ள பாடசாலையில் சேர்த்துக் கற்பிக்கப் போகிறேன்” என்றார் தேவராசா.ஈஸ்வரியும் சின்னையாவும் அவரது கால்களைப் பற்றிப் பிடித்து அழுதனர்.

3. **ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
   **மேதையின் சிறந்தன்று கற்றது மறவாமை.**

“கற்றதை மறவாது இருப்பதும் ,அதன்படி நடப்பதும் மேலும் கற்று மேதையாவதை விடச் சிறப்பானது”

கந்த சேகரம் மேலும் கற்க விரும்பிப் பல்கலைக்கழகப் பேராசிரியரான பொன்னம்பலத்திடம் சென்றார்.பேராசிரியர் அந்த ஊரவர்.கந்தசேகரத்துடன் பண்டிதர் வகுப்பில் கற்றவர். அதனால் அவர் கந்தசேகரத்தின் விருப்பத்தை அறிந்த பின் சொன்னார், “மக்களில் பெரும்பான்மையானோர் கற்பது தம் வாழ்விற்காக. ஒரு சிலர் மட்டும் இதற்கு விதி விலக்கு. கற்றவர்கள் கற்றபடி வாழ்ந்தால் அவர்கள் மேதைகளாகி விடுவார்கள். ஏனென்றால் ஒழுக்கம் தான் சிறந்த கல்வி. புலால் உண்ணக்கூடாது, பொய் பேசக் கூடாது, மது அருந்தக் கூடாது, சூதாடக் கூடாது என்றெல்லாம் கற்று விட்டு அவற்றைச் செய்பவர்களை எப்படிக் கற்றவர்கள் என்று கூற முடியும். கற்றவன் செய்வதையே மற்றவர்களும் பார்த்துச் செய்வர். அறிவுக்குக் கற்றல் வேண்டும். சாதாரணமாகக் கற்றவர்களும் நல்ல குடியிற் பிறந்த கற்காதவர்களும் ஒழுக்கமுள்ளவர்களாக வாழ்ந்தாலே அவர்களைப் பெரும் அறிஞர்கள் என்று சொல்லலாம்.பல்கலைக்கழகங்களில் பல துறைகளில் கற்று விட்டுப் பாமரர்களை விடக் கேவலமாக நடப்பவர்களின் கல்வியால் எந்த நன்மையும் வராது” என்றார். கந்தசேகரம் எதுவும் பேசவில்லை.

## 4. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்

**வண்மையின் சிறந்தன்று வாய்மை உடைமை.**

"சொல்லிலும், செயலிலும் மாறுபாடு இல்லாது வாழ்வது தருமம் செய்வதை விட மேலானது"

தேவராசாவைச் சந்தித்த பேராசிரியர் கூறினார், "நீங்கள் அங்கஜனுக்கு உதவி செய்வதாகக் கூறி அடிக்கடி அவனின் வீட்டுக்குச் செல்வதாகப் பலர் கூறுகின்றனர். சொல்லிலும் செயலிலும் நேர்மையோடு வாழ்வது, கொடுக்கும் குணத்தைக் கொண்டிருப்பதை விடமேலானது. உங்களுக்கு உதவி செய்ய விருப்பமாக இருந்தால் அதைத் தடை செய்ய நான் விரும்பவில்லை.கொடுப்பதை அங்கஜனிடம் கொடுங்கள். இல்லாவிட்டால் உங்களது மனைவியிடம் கொடுத்து அனுப்புங்கள். அதுவும் விருப்பமில்லாவிட்டால் பாடசாலை அதிபரிடம் கொடுங்கள் அவர் கொடுப்பார். இதை விட்டு விட்டு ஒருவரின் வீட்டுக்குக் கொடுப்பதற்காகக் கூட அடிக்கடி செல்வது கூடாது. தருமத்தை விட வாய்மை மேலானது. அத்துடன் ஒருவரின் நடத்தையால், பேச்சால், செயலால் இன்னொருவர் பாதிக்கப்படுவது பாவம் மட்டுமல்ல பழியுமாகும்"என்றார் பேராசிரியர்.

5. **ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**இளமையில் சிறந்தன்று மெய்ப்பிணி இன்மை.**

“நோயில்லாத வாழ்வே இளமையில் செல்வத்தை விட இன்பமானது, மேலானது”

தேவராசாவுக்கு முப்பத்தைந்து வயது. அவருக்கு இருபது வயதில் இருந்து இரத்த அழுத்தம் இருந்தது. அதனால் அவர் பெரும் வேதனைப்பட்டார். அவர் அவ்வூரில் ஆச்சிரமமைத்து சிவப் பணி செய்து வரும் நமசிவாயம் சுவாமிகளின் ஆச்சிரத்திற்குத் தினமும் வருவார். சுவாமிகள் சித்த வைத்தியர். அதனால் அவ்வூரவர்கள் அவரிடம் சென்று தமது நோய்களைக் கூறி மருந்து பெறுவர்.

அன்று ஆச்சிரமத்திற்குத் தனது மனைவி சகுந்தலாவுடன் தேவராசா வந்திருந்தார்.

“சுவாமி, எனக்கு இளவயதிலிருந்தே நோய் தாக்கிக் கொண்டுள்ளதால் என்னால் நிம்மதியாக வாழ முடியவில்லை. நல்ல உணவுகளை உண்ண முடியவில்லை. மற்றவர்களுடன் சந்தோசமாகப் பேச முடியவில்லை. இளமைக்காலத்திலேயே இந்நோய் ஏன் வந்தது” என்று அழுதார் தேவராசா.

“கர்ம வினை தான் நோயாக வருவது. இளமையில் நோயாளியாக இருப்பவன் பெரும்பாவி.அவனால் இன்பமாகவோ, நிம்மதியாகவோ வாழ முடியாது. அதற்காக வாழ்க்கையை வெறுக்கக் கூடாது. இறைவனை நம்பிக்கையுடன் வணங்கினால் நோய் தீரும். கர்ம வினை இறை வழிபாட்டால் தான் அகலும். வேறு எந்தப் பொருளாலும் அகலாது. எனவே இறைவனது

பாதங்களை நம்பிக்கையுடன் இறுக்கமாகப் பற்றிப் பிடியுங்கள்" என்றார் சுவாமியார்.

## 6. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் நலன்உடைமையின் நாணுச் சிறந்தது.

"தீயவற்றைச் செய்யவும், தீயவற்றை எண்ணவும், அஞ்சி வாழ்வோரது வாழ்வே வளங்களைக் கொண்ட வாழ்வை விடச் சிறந்த வாழ்வாகும்"

ஆரூரன், பேராசிரியர் பொன்னம்பலத்தின் வீட்டுக்கு வந்த போது அவரைச் சந்திப்பதற்கென்று பல பிரமுகர்கள் வந்திருந்தனர். அவர்களுடன் மகிழ்வோடு உரையாடிக் கொண்டிருந்த பேராசிரியர் பொன்னம்பலம் ஆரூரனைக் கண்டதும் எழுந்து அவனைத் தழுவி வரவேற்றார். பின் சொன்னார், "இவர் எனது மாணவன் ஆரூரன், படிக்கும் காலத்தில் இருந்தே தீய செயல்களைச் செய்யாதவன். அத்துடன் தீய எண்ணங்கள் கூட அவனது மனதில் வருவதில்லை. எப்பொழுதும் இனிய சொல் பேசுவான், முக மலர்ச்சியுடன் தன்னிடம் வருவோரை வரவேற்பான். தனக்குக் கீழ் பணிபுரிவோர்களை மதித்து நடப்பான்" என்று பேராசிரியர் கூறிக் கொண்டிருக்கும் போது நாகராசா என்ற பெரியவர் சொன்னார், "ஆரூரனை எனக்குத் தெரியும்.தீய எண்ணங்களை எண்ணாமலும், தீய செயல்கள் எதுவும் செய்யாமலும் வாழ்வோரின் உள்ளத்தில் கடவுள் மகிழ்வுடன் வீற்றிருப்பார். அதனால் அவர்களது வாழ்வில்

எந்தக் குறையும் வராது.இப்போது ஆரூரனுக்கு ஒரு பெரும் பதவி உயர்வு கிடைத்துள்ளது. அதைச் சொல்லத் தான் வந்திருப்பான்

மகிழ்வுடன் சிரித்தார் பொன்னம்பலம், "பல நாட்களாக எதிர்பார்த்த ஒன்று தான் அது. நல்லவர்களின் மனதில் இருக்கும். கடவுள் நல்லதையே செய்வார், செய்விப்பார்" என்றார் பொன்னம்பலம்.

**7. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**குலன் உடைமையின் கற்புச் சிறந்தன்று.**

"நற்குடியில் பிறந்தவர்கள் என்ற பெருமையைப் பெற்றிருப்பதை விட,பெரியோர் காட்டிய நன்நெறியில் நின்று வாழ்வதே கற்புடைய வாழ்க்கையாகும்"

"பேராசிரியர் ஐயா, நல்ல குடியிர் பிறந்தோம் என்று பழம் பெருமை பேசுவதை விட நன்நெறியில் வாழ்ந்து தன் குடிக்குப் பெருமை சேர்ப்பதோடு தன்னைப் பின்பற்றி வாழும் மக்களையும் நற்பிரசையாக்குவது தான் மேலானது.நீங்கள் அப்படி வாழ்ந்து காட்டியமையால் தான் உங்கள் மாணவர்கள் ஒழுக்கத்துடன் வாழ்கிறார்கள். அத்துடன் உங்களோடு பழகுபவர்களும் ஒழுக்கம் மிக்கவர்களாக வாழ்கின்றனர். நான் உங்களின் மாணவன். பாடசாலையில் படிக்கும் போது கந்த சேகரம் ஆசிரியரோடு சேர்ந்து தீய செயல்களைச் செய்தேன்.

பின்பு பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான பின் உங்களின் நடை, உடை, பாவணை என்பன எனது தீய செயல்களை அகற்றி விட்டன. நற்குடியில் பிறந்தவர்கள் நல்லவர்களாக வாழ்ந்தால் தான் மற்றவர்கள் அவர்களைப் பார்த்துத் திருந்துவர். பன்றியோடு சேர்ந்த பசுவும் மலம் தின்னும் என்பார்கள். அது உண்மை. இன்று உங்களிடம் வரும் தீயவர்கள் கூட உங்களின் நடத்தைக்கேற்றவாறே வருகின்றனர்" செந்தூரன் என்ற மாணவன் .பொன்னம்பலம் எதுவும் பேசாது சிரித்தார். அச் சிரிப்பில் தெய்வீக ஒளி வீசியது.

## 8. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் கற்றலின் கற்றாரை வழிபடுதல் சிறந்தன்று.

"கற்றவர்களைப் போற்றி அவர் வழி நடப்பது கற்பதை விட மேன்மையான அறிவைத் தரும்"

"இளமையில் நோய் காரணமாக நான் பெரிதாகப் படிக்கவில்லை. ஆனால் பொன்னம்பலம் ஐயா கோவில்களிலும் பாடசாலைகளிலும், சனசமூக நிலையங்களிலும் உரையாற்றுவதைக் கேட்டு அவரின் மீது பக்தி கொண்டேன்.அதனால் நேரமுள்ள வேளைகளிலெல்லாம் ஐயாவைச் சந்திக்க வருவேன். ஐயா, மாணவர்களுக்கென வகுப்புக்கள் நடத்துவார். அவை பெரும்பாலும் எல்லோரும் கேட்டு அறியக்கூடியதாக இருக்கும். அத்துடன் தெரியாதவற்றை

யார் திருப்பித் திருப்பிக் கேட்டாலும் ஐயா சலிக்காது மீண்டும் மீண்டும் சொல்வார். எமது முகத்தைப் பார்த்துத் தான் சொன்னவை யார் யாருக்கு விளங்கவில்லை என்று தெரிந்து அதை விளக்கமாகக் கூறுவார்.அவரின் வீட்டுக்கு வந்தால் சுவையான உணவும் கிடைக்கும். இப்போ நான் மேடையில் பேசக் கூடிய அறிவையும், சான்றோரின் உரையை விளங்கிக் கொள்ளும் அறிவையும், உலகைப் புரிந்து வாழும் தன்மையையும் பெற்றுள்ளேன். இது நான் கற்றுள்ளதை விடப் பயனாக இருக்கிறது."என்றார் தேவராசா

சந்தன மரத்திற்கு அருகே நிற்கும் மரங்கள் சந்தன வாசத்தைப் பெறுமாம். அதுபோலக் கற்றவர்களின் அறிவு நோயாளரின் அருகில் இருப்பவர்களுக்கு நோய் தொற்றுவதைப் போலத் தொற்றிக் கொள்ளும்" என்றான் செந்தூரன்.

**9. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**செற்றாரைச் செலுத்தலின் தன் செய்கை சிறந்தன்று.**

"குற்றம் செய்தார்களென்று பகைவர்களைத் தண்டிப்பதை விட அக் குற்றங்கள் ஏற்படாமல் தம்மைக் காத்துக் கொள்வது சிறப்பானது"

"உலகில் வாழ்பவர்கள் எல்லோரும், எல்லோருக்கும் நல்லவர்களாக வாழ முடியாது. அத்துடன் தான் குற்றங்களைச் செய்யாது வாழ வேண்டுமே தவிர மற்றவர்களின்

குற்றங்களைக் கண்டு கோபங் கொண்டு அவர்களைத் திருத்த முடியாது என்று நீங்கள் சொல்வீர்கள். அதன்படி தான் நான் வாழ்கிறேன். எனது ஆசிரியர் கந்தசேகரம் .அவரிடம் நான் சிறுவயதில் படித்தேன். அப்படியிருந்தும் அவரை எனது ஆசிரியராக எண்ணி மதிக்கிறேன். ஆனால் அவர் தன்னிடம் தான் நான் முழுக் கல்வியையும் பெற்றதாக எண்ணி என்னையும் எனது குலத்தையும் அவமதிக்கிறார். இதற்கு நான் கோபிக்கவில்லை. ஓரிரு நாளென்றாலும் அவரிடம் நான் கற்றேன். கற்றவர்கள் கற்றபடி வாழ வேண்டும் என்று நினைக்காது தமது நன்மைக்காகத் தமது மனம் போனபடி வாழ்வதை எப்படித் திருத்த முடியும்.அதனால் அவரைத் திருத்துவதை விட நான் திருந்த வேண்டுமென்று நினைக்கிறேன். கற்றவர்கள் கற்றபடி நடக்கவில்லையானால் அவர்கள் கற்காதவர்களை விடக் கீழானவர்கள் என்று நினைத்து வாழ்கிறேன்.இருப்பினும் சில சமயங்களில் மனம் வலிக்கிறது" என்று ஆரூரன் கலங்கினான்.அதைக் கேட்ட பொன்னம்பலத்திற்குத் துக்கமாக இருந்தது.

## 10. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்
## முற்பெரு கலின் ,பின் சிறுகாமை சிறந்தன்று

"இளமையில் வளமாக வாழ்வதை விட முதுமையில் தளர்வில்லாமல் வாழ்வதே சிறப்பானது"

ஆரூரனும் பொன்னம்பலமும் அவ்வூர்ப் பிரமுகர்கள் சிலரும் அவ்வூரில் இயங்கும் முதியோர் இல்லத்திற்கு வந்தனர். ஆரூரன் தனது வருமனத்தின் ஒரு பகுதியை முதியோர் இல்லத்திற்கு ஒதுக்கியிருந்தான். பிள்ளைகள் இல்லாத, வெளிநாட்டில் உள்ள பிள்ளைகளால் கவனிக்கப்படாத பெற்றோர்கள் அவ் இல்லத்தில் இருந்தனர்.அவர்களை அரூரன் தனது பெற்றோரைப் போல அன்பு செலுத்திக் கவனித்து வந்தான். அந்த முதியோர் இல்லத்தில் தங்கியிருக்கும் வயோதிபர் ஒருவர் ஆரூரனைக் கண்டதும் மெய்மறந்து போனார், "ஐயா, ஒருவன் இளமையில் பொருள் தேட வேண்டும்.அதைப் பிள்ளைகள் உற்றார், உறவினர்களின் நல் வாழ்விற்காகச் செலவு செய்தல் வேண்டும். அப்படிச் செலவு செய்யும் போது தனது பிற்கால வாழ்விற்கென ஒரு தொகைப் பணத்தைச் சேமித்தல் வேண்டும். நான் பெரும் வணிகன். தான தர்மங்கள் செய்தேன். பிள்ளைகளின் நல் வாழ்விற்காகச் செலவு செய்தேன். உற்றார், உறவினர்களின் மேம்பாட்டிற்காகப் பாடுபட்டேன். ஆனால் பிற்காலத்திற்கெனச் சேமிக்கவில்லை. பிள்ளைகளெல்லாம் வெளிநாடுகளில் இருக்கிறார்கள். சகோதரர்கள், உறவினர்கள் எல்லாம் செல்வந்தராக இருக்கிறார்கள். இருந்தாலும் எனக்கு உதவி செய்வார் யாரும் இல்லை. எனது பிற்காலத்திற்கெனச் சேமித்து வைத்திருந்தால் நான் இன்று இந்த முகாமில் தங்கியிருக்கத் தேவையில்லை. நீங்கள் கடவுளைப் போல உதவி செய்கிறீர்கள் .அவை எதுவும் பிற்காலத்திற்கு உதவாது. அதனால் சேமியுங்கள் "என்றார் அந்த மடத்தில் இருந்த வயோதிபர்.

**அறிவுப் பத்து**

**11. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**பேர்இல் பிறந்தமை ஈரத்தின் அறிப.**

"ஒருவரின் இரங்கும் மனத்தில் இருந்தே அவரது குடிப் பெருமையை அறியலாம்"

"மகனே, நீ இரங்கி உதவுவதால் தான் இம் மடத்தில் உள்ள வயோதிபர்கள் உண்டு உறங்குகிறார்கள்.ஒருவன் பெரும் உத்தியோகத்தனாக இருக்கலாம். உயர்ந்த குடியில் பிறந்தவனாக இருக்கலாம், பெரும் தனவந்தனாக இருக்கலாம்.இவையெல்லாம் இருந்தும் உள்ளத்தில் இரக்கமில்லாதவர்களால் உலக மக்களுக்கு எந்தப் பிரயோசனமும் இல்லை. ஏழையானாலும் தனக்குக் கிடைக்கும் உணவின் ஒரு பகுதியை இரப்பவனுக்குக் கொடுப்பானேயானால் அவன் தான் பெரும் கொடையாளி. தனவந்தன். பொருள் எளியவர்களிடமும் சேரும். கீழ் மக்களிடமும் சேரும். அதனால் எந்தப் பயனும் ஏற்படாது. மனதில் ஈரமுள்ளவனிடம் சேரும் பொருள் தான் இரப்பவர்களின் வயிற்றை நிரப்பும். வறுமையை விடக் கொடுமையானது வறுமை தான். வறியவன் உண்ண உணவின்றி வயிறு எரிந்து புண்ணாகும் போது ஒரு பிடி அன்னத்தைக் கொடுத்தவனைக்

கடவுள் என்றே நினைப்பான். நான் அப்படித் தான் நினைக்கிறேன். இந்த இல்லத்தை நம்பி வாழும் வயோதிபர்களுக்கு நீ தான் கடவுள். கடவுளைப் போல எல்லாவற்றையும் கொடுக்கும் நீ சகல சௌபாக்கியங்களும் பெற்று, நீடுழி வாழ வேண்டும். நீ, வாழ்ந்தால் தான் ஏழைகளான நாம் வயிறாற உண்போம்" என்றார் ஒரு வயோதிபர்.

## 12. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் ஈரம் உடைமை ஈகையின் அறிப.

"ஒருவரின் இரக்கப் பண்பை அவரது பரிவு காட்டும்"

ஐயா, நான் எனது பிள்ளையை உயிரைக் கொடுத்து வளர்த்தேன். கூலி வேலை செய்து அவனைக் கற்பித்தேன். அவன் பொறியியலாளராக வந்து விட்டான். அதற்காக நான் எனது உயிரைப் பிழிந்தேன். அவன் பல்கலைக்கழகத்தில் கற்கும் போது ஒரு பெரும் தனவந்தனின் மகளை விரும்பி மணந்தான். அவன் நாம் கூலிக்காரராம். தமது தகுதிக்கும் தராதத்திற்கும் பொருந்தாதவர்களாம். எம்முடன் உறவு கொண்டால் தமது மானம் மரியாதை எல்லாம் பாழாகி விடுமாம். அதனால் எனது மகனையும் எம்மோடு உறவாட விடுவதில்லை. உறவாடா விட்டாலும் பரவாயில்லை. உதவியாவது செய்யலாம். ஆனால் எனது மகன் தனது மனைவிக்கு அஞ்சி எமக்கு உதவியும் செய்வதில்லை.

ஆதரவற்ற எம் மீது அளவற்ற அன்பைச் சொரிந்து எமது தேவையெல்லாம் பூர்த்தி செய்யும் உன்னை நாம் எல்லோரும் கடவுளை விட உயர்ந்தவராகக் கருதுகின்றோம். இரக்கப் பண்பு இல்லாதவர்கள் அரக்கர்கள். நீ இரக்கமுள்ளவன். என்பதை இம்மடத்திற்குச் செய்யும் உதவிகள் மூலம் அறிகிறோம். நீ புண்ணியவான், உனது பெற்றோர் புண்ணியவான்கள். உனது குடியும் புண்ணியம் செய்தது." என்று கலங்கினார் ஒரு வயோதிபர்.

**13. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**சோரா நல்நட்பு உதவியின் அறிப.**

"நல்ல நண்பரை ஆபத்து வந்த போது அறிந்து கொள்ளலாம்."

பேராசிரியர் பொன்னம்பலம் தனது உயிர் நண்பனான சுந்தரமூர்த்தியிடம் வந்தார்.இருவரும் ஒன்றாகக் கற்றவர்கள். கற்கும் காலத்திலிருந்தே நல்ல நண்பர்கள். சுந்தரமூர்த்தி பாடசாலைக் கல்வியை நிறுத்தி விட்டுத் தனது தந்தையாரின் வர்ததகத்தைக் கவனித்தான். அவனது தந்தையார் பெரும் வர்த்தகர். பெரும் தனவந்தர். அவர் தனது மகனான சுந்தரமூர்த்திக்குத் தனது நண்பனான பேரம்பலத்தின் மகளைத் திருமணம் செய்து கொடுத்தார்.பேரம்பலம் பெரும் வர்த்தகன். பொன்னம்பலம் பெரும் கல்விமான். ஊரவரும்,பிற ஊரவரும் அவரைக் கடவுளாக மதித்தமையால் தனது நலனுக்காகச் சுந்தரமூர்த்தி பொன்னம்பலத்துடன் நட்பு வைத்திருந்தான்.

பொன்னம்பலம் பெரும் கல்விமானே தவிரப் பணக்காரர் அல்ல. அவர் பட்டணத்தில் வாடகை வீட்டிலேயே குடியிருந்தார். அவர் குடியிருந்த வீட்டை அதன் சொந்தக்காரன் தனது மகளின் திருமணத்திற்காக விற்க விரும்பினான். அதை அவன் பொன்னம்பலத்திற்குச் சொல்லியிருந்தான். அதனால் பொன்னம்பலம் சுந்தரமூர்த்திக்குச் சொன்னார், “சுந்தரா, நான் குடியிருக்கும் வீடு விற்பனைக்கு வந்துள்ளது. அதன் உரிமையாளர் அதை விற்றுத் தனது மகளுக்குத் திருமணம் செய்ய விரும்புகிறார்.அதற்கு நான் தடையாக இருக்கக் கூடாது. இப்போது என்னிடம் பணம் இல்லை. வங்கியில் கடன் வாங்க விண்ணப்பித்துள்ளேன். ஆனால் வீட்டுக்காரர் அவசரப்படுத்துகிறார். அதனால் பத்து இலட்ச ரூபா தா. வங்கியிலிருந்து நாலைந்து தினங்களில் பணம் வந்து விடும். வந்ததும் தருகிறேன்.”

“பொன்னம்பலம், இவ்வளவு பெரும் தொகைப் பணம் என்னிடம் தற்பொழுது இல்லை.ஒரு மாதம் பொறுத்துக் கொள்.”என்றார்.

“அடுத்தவாரம் திருமணம். பணம் தராவிட்டால் திருமணம் நடைபெறாதென்று மாப்பிள்ளை பகுதியினர் சொன்னதாக வீட்டுக்காரர் சொல்கிறார்.என்னால் திருமணம் தடைப்படக் கூடாது”என்று கலங்கினார் பொன்னம்பலம்.

நான் மாப்பிள்ளையின் தகப்பனுக்குக் கூறுகிறேன்” என்றார் சுந்தரமூர்த்தி.

அதை நம்பிய பொன்னம்பலம் நம்பிக்கையுடன் வீட்டுக்கு வந்தார். அங்கே வீட்டுக்காரரும் ஆரூரனும் இருந்தனர்.

வீட்டுக்காரர் பொன்னம்பலத்தைக் கண்டதும் சொன்னார், "ஐயா, சுந்தரமூர்த்தியை நம்பாதீர்கள். அவன் வீட்டைத் தனக்குத் தருமாறு கேட்கிறான்."என்றார். பொன்னம்பலம் திகைத்துப் போனார்.அப்போது ஆரூரன் சொன்னான், எனக்கு எல்லாம் தெரியும். அதனால் தான் பணத்துடன் வந்தேன். காசைக் கொடுத்து வீட்டை வாங்குங்கள். பின்பு பேசலாம்" என்ற ஆரூரன் பணத்தைக் கொடுத்தான்.

"ஆபத்தான வேளையில் தான் நண்பரைப் பற்றி அறியலாம். மிகவும் நன்றி" என்று கலங்கினார் பொன்னம்பலம்.

## 14. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் கற்றது உடைமை காட்சியின் அறிப.

"ஒருவர் கற்ற கல்வியின் தகுதியினை அவரின் செயல்கள் உணர்த்தும்"

"மகனே, நீ எனது மாணவன். மாணவரிடம் உதவி கோருவது ஆசிரியருக்கு அழகல்ல என்பதை நினைத்தே நான் உன்னிடம் உதவி கோரவில்லை.எப்பொழுதும் ஆசிரியர் மாணவனுக்கு உதவுபவராகவும், முன்னுதாரணமாகவும் விளங்க

வேண்டுமென்று நினைத்தேன். அதுதான் பெரியவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட முடிவு. அதனால் தான் நான் எனது உயிர் நண்பனாக நினைத்து வாழ்ந்த சுந்தரமூர்த்தியிடம் உதவி கோரினேன். முகம் மலரும்படியாக பழகுவது நட்பாகாது மனமும் மலரும்படியாக உள்ளன்பு கொண்டு பழகுவதே உண்மையான நட்பென்றும், அழிவு வரும் போது அதைத் தடுத்து நல்ல வழியில் நடக்கும்படி செய்து, அழிவு நேரும் என்றாலும் கூட உடனிருந்து துன்பப்படுவதே தூய நட்பென்று நினைத்துப் பழகினேன். ஆனால் என்னை ஏமாற்றி விட்டான். தான் எனது வீட்டை வாங்குவதற்காகத் தன்னால் இயன்றளவு துன்பத்தைக் கொடுத்தான். அதிலும் ஒரு நன்மை இருக்கத் தான் செய்கிறது.கேடு நண்பர்களின் குணங்களை அறிந்து கொள்ளும் வாய்ப்பை உண்டாக்கிக் கொடுக்கிறது.நீ என்னிடம் கற்றவன். என்னை விடவும் கற்றவன் என்பதைக் காட்டி விட்டாய். நன்றி. நன்றி. இந்த வீடு விற்பனை செய்யப்பட்டால் நான் பெரும் துன்பத்துக்குள்ளாகியிருப்பேன். உனது கல்வி அந்தத் துன்பங்களைப் போக்கி விட்டது" தழுதழுத்தார் பொன்னம்பலம்.

## 15. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்
## ஏற்றம் உடைமை எதிர்கோளின் அறிப.

"ஒருவரின் மனத் துணிவையும் உயர்ந்த செயல்களையும் அவர் எதிர் கொள்ளும் நன்மை தீமைகளின் மூலம் அறிந்து கொள்ளலாம்"

“ஐயா, ஒருவர் எப்போதும் இன்பங்களை அனுபவிக்க முடியாது. அது போல எப்போதும் துன்பங்களையும் அனுபவிக்க முடியாது. இன்பங்களும் துன்பங்களும் வரும் போது அவர்கள் செயற்படும் முறைகளிலிருந்தே அவர்களின் குணங்களையும் குடிப்பிறப்பையும் அறிந்து கொள்ளலாம். சிலர் இன்பங்கள் வரும் போது தலை கால் புரியாது ஆட்டம் ஆடுவார்கள். அடுத்தவர்களை மதிக்க மாட்டார்கள்.அது போலத் துன்பங்கள் வரும் போது சிலர் அதை நீக்கத் தீய வழிகளை நாடுவார்கள். நீங்கள் கற்றவர், உத்தமர், ஒழுக்கமாக வாழ்பவர். அதனால் நல்ல நண்பன் என்று நினைத்த சுந்தரமூர்த்தியிடம் சென்றீர்கள். அவன் உங்களை நண்பனாகக் கருதாது தனது நலத்தையே செயலாக்க நினைத்தான். நல்லவர்கள் உயிர் போவதாக இருந்தாலும் கூட மற்றவர்களுக்குக் கடமைப்பட மாட்டார்கள். தீயவர்கள் தமது தேவைக்காகத் தம்மையே விலை பேசி விற்பர். இது தெரிந்து தான் நான் உங்களுக்கு உதவ முன் வந்தேன். உயிர் நண்பர்கள் குற்றம் செய்தால் அதைப் பொறுப்பது நமது கடமை என்று நினைப்பார்கள்.அதனால் நீங்கள் வீட்டைச் சுந்தரமூர்த்திக்கு விட்டும் கொடுத்து விடுவீர்கள் என்று நினைத்தேன்” என்றான் ஆரூரன்.

“ஒருவரின் செயல்கள் தான் அவர்களுக்குப் புகழைத் தருவது. நீ நான் கேட்காமலே உதவி செய்துள்ளாய்.அது உனது குலப் பண்பு மட்டுமல்ல நீ கற்ற கல்வியின் தகுதியும் ஆகும்” என்றார் பொன்னம்பலம்.

## 16. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் சிற்றில் பிறந்தமை பெருமிதத்தின் அறிப.

“ஒருவரின் குடிப்பிறப்பை அவரின் நடத்தையில் இருந்து அறிந்து கொள்ளலாம்.”

அன்று மாலை நேரம் சுந்தரமூர்த்தி ஆரூரனது வீட்டுக்கு வந்தார். ஆரூரனின் தந்தையான கந்தவனம் எழுந்து சென்று அவரை வரவேற்றார். வீட்டின் உள்ளே இருந்த ஆரூரன் சுந்தரமூர்த்தி வந்த செய்தியறிந்து வெளியே வந்தான்.

“நீங்களெல்லாம் புதுப் பணக்காரர். பொன்னம்பலம் குடியிருக்கும் வீடு எனது மனைவியின் சகோதரனுடையது. அது முறைப்படி எனக்குச் சேர வேண்டியது. நீ பணம் கொடுத்தமையால் பொன்னம்பலம் நீதிமன்றத்தில் பணத்தைச் செலுத்தி வீட்டின் உரிமையைப் பெற்று விட்டார். எனது உடைமை என்று தெரிந்தும் நீ பணம் கொடுத்தமையை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. வீட்டை வாங்க வேண்டாமென்று பொன்னம்பலத்திற்குக் கூறு. இல்லாவிட்டால் மிகுதிப் பணத்தைக் கொடுக்காதே” என்றார் சுந்தரமூர்த்தி.

“ஐயா, அது உங்களின் மனைவியின் சகோதரனின் வீடென்றாலும் ,உங்கள் மனைவியின் சகோதரன் அதை உங்களுக்கு விற்க விரும்பவில்லை.தற்போதுள்ள கஷ்டத்திற்காக விற்கிறேன்.என்னிடம் பணம் வந்தால்

பொன்னம்பலம் அதைத் திருப்பித் தருவார். ஆனால் சுந்தரமூர்த்தி தரான். அவன் வியாபாரி. கொஞ்சப் பணம் கூடுதலாக கொடுத்தால் சாதி சமயம் பாராது விற்று விடுவான் என்று கூறித் தான் பொன்னம்பலத்திற்கு விற்றவர்" எ்னறான் ஆரூரன்.

"ம்..அவருக்கும் பாடம் படிப்பிப்பன்"என்று கறுவியபடி எழுந்து சென்றான் சுந்தரமூர்த்தி.

"தம்பி, நீ எதைப் பற்றியும் யோசியாதை, சுந்தரமூர்த்தியின் பரம்பரையே கெட்டது. நயவஞ்சகமானது. அதனால் ஊரில் யாரும் அவர்களை மதிப்பதில்லை. ஏனோ தெரியவில்லை.பொன்னம்பலம் ஐயா அவர்களை நம்பி விட்டார். இன்ப துன்பங்கள் வந்தால் தான் ஒருவரைப் பற்றி அறியலாம்.பொன்னம்பலம் ஐயா தெரியாமல் சுந்தரமூர்த்தியோடு நட்புக் கொண்டு விட்டேன்" என்று கவலைப்பட்டார். நல்ல குடியில் பிறந்தவன் மனதால் கூடத் துரோகம் செய்ய மாட்டான்" என்றார் கந்தவனம்.

## 17. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் சூத்திரம் செய்தலின் கள்வன் ஆதல் அறிப.

"ஒருவனின் செயலைக் கொண்டே அவன் நல்லவனா அல்லது தீயவனா என்று தீர்மானிக்கலாம்.

“தேவராசா பொன்னம்பலத்தின் உறவினன். அவன் பொன்னம்பலத்தின் வீட்டுக்கு வந்து சொன்னான். “நீங்கள் எனது இரத்த உறவினன். சுந்தரமூர்த்தி நீங்கள் தனது மச்சானின் வீட்டை ஏமாற்றி வாங்கியதாகக் கூறிக் கொண்டு திரிகிறான். ஊரில் விற்பனைக்கென்று பல வீடுகள் உண்டு. அதை விட உங்களிடம் நிலம் இருக்கிறது.நீங்கள் விரும்பியபடி அதில் ஒரு புதிய வீட்டைக் கட்டலாம். இல்லாவிட்டால் சின்னத்துரை தனது வீட்டை விற்கப் போகிறாராம்.அவரது பிள்ளைகளெல்லாம் வெளிநாட்டில் இருக்கிறார்கள்.அவர்களுக்கு ஊரில் மூன்று வீடுகள் உண்டு. அதில் ஒன்றை வாங்குங்கோ அல்லது அங்கு வாடகைக்கு குடியிருந்து கொண்டு உங்களது காணியில் வீட்டைக் கட்டுங்கோ. துட்டர்கள் எப்போதும் துட்டத் தனமான செயல்களைத் தான் செய்வார்கள். அது நல்லவர்களுக்குப் பொருந்தாது.அத்துடன் தீயவர்கள் நல்லதையும் தீதெனத் தான் கொள்வர்” என்றார்.

“சரி தேவராசா, நீ சொல்வதைப் போல செய்கிறேன். சுந்தரமூர்த்திக்குச் சொல்லி ஆவண செய்” என்றார் பொன்னம்பலம்.

“தேவராசா சிறிது நேரத்தில் திரும்பி வந்து சொன்னான், “சுந்தரமூர்த்தி சொன்ன சொற்படி நடப்பவன் அல்ல. இப்ப அவன் வீட்டை வாங்கிய விலையிலும் பார்க்கக் குறைவாகக் கேட்கிறான். அவன் எதையும் சூதாகவும், சூழ்ச்சியாகவும் செய்பவன்.நேரத்திற்குத் தகுந்தபடி கதைப்பவன். அதனால்,

பொன்னம்பலம் ஐயா தனது நிலத்தில் வீடு கட்ட விரும்புகிறார். உனக்கு வீடு தேவையானால் அவர் கொடுத்த பணத்தைக் கொடுத்து வீட்டை வாங்கு" என்று சொல்லி விட்டு வந்தேன். அவன் குழப்பக்காரன். வந்தால் கொடுக்கலாம்" என்றார் தேவராசா.

"ஒருவனின் செயல்கள் தான் அவனது குணத்தைத் தீர்மானிப்பது" என்றார் பொன்னம்பலம்.

## 18. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்
## சொல்சோர்வு உடைமையின் எச்சோர்வும் அறிப

"பேசவும் சோம்பற் பட்டு ஒதுங்கியிருப்பவன் எந்தச் செயலையும் உற்சாகமாகச் செய்ய மாட்டான்.

ஆரூரனது முதலாளி ரகுநாதன் ஆரூரனின் அறைக்கு வந்து அவன் முன் அமர்ந்து வெகுநேரமாகப் பேசாதிருந்தார். ஆரூரன் அவராகப் பேசட்டும் என்று காத்திருந்தான். அந்த நிறுவனத்தில் ஆயிரத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்தனர். வருடா வருடம் கோடிக் கணக்கில் வருமானம் வந்து கொண்டிருந்தது.

"ஆருரா, எனக்கு வயது சென்று கொண்டிருக்கிறது. எனது தொழிற்சாலையின் நிர்வாகத்தை மகனிடம் கொடுக்கலாம் என்று நினைத்தால், அவன் சோம்பேறியாக இருக்கிறான். நேற்று வெளிநாட்டில் இருந்து வந்த பிரமுகர்களுடன் வர்த்தகம்

சம்பந்தமாகக் கதைக்குமாறு கூறினேன். அவன் மறுத்து விட்டான். அதைவிட அவர்களுடன் நான் பேசுகிறேன் நீ என்னுடன் கூட இரு என்றேன். அதற்கும் அவன் மறுத்து விட்டான். பேசச் சோம்பற்படுகிறான். அதைவிடப் பேசுவதைக் கேட்கவும் அவனுக்கு விருப்பமில்லை. அப்படியானவனிடம் தொழிற்சாலையின் நிர்வாகத்தைக் கொடுத்தால் எப்படி இருக்கும்.பேசுவதற்கே சோம்பற்படும் ஒருவன் எப்படி ஏனைய செயல்களைச் செய்வான். அவனிடம் தொழிற்சாலையை ஒப்படைத்தால் தொழிலாளர்கள் அழிந்து விடுவார்கள்" கலங்கினார் ரகுநாதன்.

**19. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**அறிவு சோர்வு உடைமையின் பிறிது சோர்பும் அறிப.**

"தனது அறிவையும் ஆற்றலையும் சரியாகப் பயன்படுத்தாதவன், தனக்குக் கிடைக்கும் வாய்ப்புக்கள் அனைத்தையும் வீணாக்கி விடுவான்.

வெகுநேரம் பேசாதிருந்த ரகுநாதன் மீண்டும் பேசத் தொடங்கினார், "இவனை நான் இலண்டனில் உள்ள பிரபுக்கள் கற்கும் பல்கலைக் கழகத்தில் சேர்த்துப் படிப்பித்தேன். தன்னுடைய அறிவையும் ஆற்றலையும் வீணாக்கும் இவனை நம்பி எப்படி எனது தொழிற்சாலையை ஒப்படைப்பது.வேலையாட்கள் எவ்வளவு திறமையானவர்களாக இருந்தாலும் செய்விப்பவன் சோம்பேறியாக இருந்தால்

அறிவுள்ளவர்கள் செய்யும் செயல்களும் நட்டத்தையே தரும்.மூளையுள்ளவன் தனது ஆற்றலால் தொழிற்சாலையின் இலாபத்தைக் கவர்ந்து சென்று விடுவான். இதையெல்லாம் பலமுறை எடுத்துச் சொல்லியும் அவனுக்குப் புரிகிறதில்லை. என்ன செய்வது.நான் செய்த பாவம் என்னைச் சூழ்ந்து விட்டது போலத் தெரிகிறது. அதனால் நான் ஒரு முடிவுக்கு வந்து விட்டேன்" என்று கூறிவிட்டு ஆரூரனைப் பார்த்தார் ரகுநாதன்.ஆரூரனுக்கு அவர் கூறுவதில் உள்ள நியாயம் சரி என்று தோன்றியது. ரகுநாதனின் மகன் பணத்தின் அருமை தெரியாது வாழ்பவன்.அவனுக்கு எதைச் சொன்னாலும் கேட்க மாட்டான். அடிக்கடிப் பணத்தைப் பெற்று நண்பர்களுடன் வெளிநாட்டுக்குச் செல்வான். எதைச் சொன்னாலும் நின்று கேட்க மாட்டான்.அப்படியானவனிடம் தொழிற்சாலையின் நிர்வாகத்தை ஒப்படைத்தால் எப்படி இருக்கும் என்று நினைத்துப் பார்த்தான். அவனின் அறிவுக்கு எவ்வளவோ முன்னேற்றங்களைச் செய்யலாம்.தேடி வரும் அரிய வாய்ப்புக்களையும் உதாசீனம் செய்து வருவதை ஆரூரனால் சில சமயங்களில் பொறுத்துக் கொள்ள முடிவதில்லை.

## 20. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்
## சீருடை ஆண்மை செய்கையின் அறிப.

"ஒரு செயலைச் செய்யும் தன்மையைக் கொண்டு அச் செயலின் விளைவினையும், செய்பவனின் ஆளுமையையும் அறியலாம்."

“ஆரூரா, என்று அழைத்து விட்டுச் சிறிது நேரம் பேசாமல் இருந்த ரகுநாதன் இருமித் தொண்டையைச் சீர் செய்து விட்டுச் சொன்னார், “விளையும் பயிரை முளையில் தெரியும் என்பார்கள். விளைவால் விதையின் தன்மையையும் அறியலாம் என்பார்கள். ஒருவனைது செயலைக் கொண்டே அவனது செயற்றிறனையும், ஆளுமையையும் அறிந்து கொள்ளலாம். நீ பொறியியலாளன். மிகத் திறமையானவன். எனது தொழிற்சாலையில் சேர்ந்த நாள் முதல் உன்னை நான் அவதானித்து வருகிறேன். நீ ஒழுக்கமான குடியிற் பிறந்தவன், ஒழுக்க சீலன்,கடமையுணர்வுள்ளவன், மற்றவர்களின் நலனில் அக்கறையுள்ளவன்,சமூக சேவகன், உறவுகளை மதிப்பவன். அதனால் எனது ஒரே ஒரு மகளான ரேவதியை உனக்குத் திருமணம் செய்து தர விரும்புகிறேன். உன்னை விட உயர்ந்த மாப்பிள்ளை இவ்வுலகில் யாரும் இல்லை. உன்னை எனது வீட்டு மாப்பிள்ளையாக்கினால் எனது குடும்பமும் தொழிற்சாலையும் சிறக்கும். உனது முடிவைக் கூறினால் நான் மேற்க்கொண்டு நடவடிக்கை எடுப்பேன்” என்றவாறு அவனின் வலது கையைப் பற்றினார் ரகுநாதன்.

ஆருரன் திகைத்துத் திகிலடைந்து போனான். அவனால் சிந்திக்க முடியவில்லை. ஆசனத்தால் எழுந்தான். அவனது கண்கள் கலங்கின.

“ஆரூரா, உனது திறமையில் நம்பிக்கை வைத்ததால் தான் இப்படிக் கேட்டேன். தவறானால்....”என்று ரகுநாதன் கூறும்

போது ஆரூரன் குறுக்கிட்டுச் சொன்னான்., “திருமணத்தை நிட்சயம் செய்வது பெற்றோர்.அப்பாவுடன் கதையுங்கள்”

ரகுநாதன் பூரித்துப் போனார்.”இன்றே உனது வீட்டுக்கு வருகிறேன்.” என்று கூறிவிட்டு மகிழ்வுடன் எழுந்து சென்றார் ரகுநாதன்.

**பழியாப் பத்து**

**21. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**யாப்பு இல்லோரை இயல்புகுணம் பழியார்.**

“ஆரவாரமான உலகில் ,எவ்விதப் பற்றுக்களும் இல்லாமல் வாழும் உண்மையான துறவிகளை யாரும் இகழ்ந்து பேச மாட்டார்கள்”

அவ்வூரவர்கள் நமசிவாயம் சுவாமிகளிடம் கேட்காமல் எதையும் செய்ய மாட்டார்கள். யாரையும் மேலானவராக மதிக்காதவர், அன்பாகப் பேசுபவர், மக்களின் குறை நிறைகளைத் தீர்ப்பவர், ரகுநாதன், பொன்னம்பலம், தேவராசா போன்ற ஊர்ப் பிரமுகர்கள் சுவாமியாரின் ஆசியின்றி எக் கருமத்தையும் செய்ய மாட்டார்கள்.

ரகுநாதன் ஆரூரனுடன் திருமண விடயம் பற்றிப் பேசுமுன்பே சுவாமிகளிடம் அதைக் கூறியிருந்தார். சுவாமியார் அத் திருமணத்தைச் செய்யுமாறு கூறியிருந்தார்.

அன்று காலை ரகுநாதனும் மனைவியும் கந்தவனத்தின் வீட்டுக்குச் சென்று ஆரூரனைத் தமது மகளுக்குத் திருமணம் செய்து தரும்படி கேட்டதால் கந்தவனம் சுவாமியாரிடம் வந்திருந்தார்.அன்று வெள்ளிக்கிழமை.அதனால் மக்கள் அதிகமாக இருந்தனர். கந்தவனத்தைக் கண்ட சுவாமியார் அவரைத் தன்னருகே அழைத்துச் சொன்னார், “மகனே, ஒருவர் பெற வேண்டிய செல்வங்களுள் ,அறிய வேண்டியவற்றை அறியக் கூடிய மக்களைப் பெறுவதே மிக உயர்ந்த செல்வமாகும். நீ உயர்ந்த மகனைப் பெற்றிருக்கிறாய். ரகுநாதன் மேன்மையானவர். உனது குடும்பத்திற்கு ஏற்றவர். அதனால் தாமதியாது அவர்களின் திருமணத்தைச் செய்து வை.எல்லா நலன்களும் பெற்று அவர்கள் வளமுடன் வாழ்வார்கள்” என்றார்.

கந்தவனம் மகிழ்ச்சியின் உச்சியில் இருந்தார். கூலி வேலை செய்த தான் குபேரனுக்குச் சம்பந்தியாவதை எண்ண மூச்சே நின்று விடும் போல இருந்தது.,”சுவாமியார், நீங்கள் தான் இந்த ஊரவர்க்குத் தந்தை ,வழிகாட்டி எல்லாமே. உங்கள் ஆசியால் ஊரவர்கள் எல்லோரும் மிகவும் சிறப்பாகவும் மகிழ்வாகவும் வாழ்கிறோம்.”என்று கண்களால் கண்ணீர் பெருகச் சுவாமியாரின் பாதங்களைப் பிடித்துக் கலங்கினார் கந்தவனம்.

**22. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**மீப்பு இ(ல்) ல்லோரை மீக்குணம் பழியார்.**

“தான் என்ற ஆணவம் தகுதியில்லாதவர்களிடம் இருந்தால் பெரியவர்கள் அதைக் குறையாகக் கருத மாட்டார்கள்”

சுந்தரமூர்த்தியின் மகன் கயேந்திரன் வைத்தியன். அத்துடன் சுந்தரமூர்த்தி பெரும் தனவந்தன். பிச்சைக்காரனான கந்தவனத்தின் மகனுக்குப் பெரும் இடத்தில் தன்னை விட ஆயிரம் மடங்கு பொருளுள்ளவரான ரகுநாதனின் மகளுக்குத் திருமணம் நடைபெறுவதைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அதனால் ஊரில் கந்தவனத்தைப் பற்றியும், ஆரூரனைப் பற்றியும் மிகவும் தரக்குறைவாகப் பேசித் திரிந்தான். அது கந்தவனத்திற்கும் ரகுநாதனுக்கும் வேதனையைக் கொடுத்தது.அதனால் ரகுநாதன் பொன்னம்பலத்திடம் வந்து அதைப் பற்றிக் கூறிக் கவலைப்பட்டார். அதற்குப் பொன்னம்பலம் சொன்னார், “ஐயா, தானே உயர்ந்தவன்,தனக்கே எல்லாம் தெரியும் என்னும் ஆணவக் குணம் ,உயர்ந்த குணங்கள் இல்லாதவரிடம் இருக்குமேயானால் அதைப் பெரியோர் குறையாக நினைக்க மாட்டார்கள். சுந்தரமூர்த்தியின் இயல்பு அது. அதை யாராலும் மாற்ற முடியாது. அத்துடன் எடுத்துரைத்தாலும் புரியாது. அதனால் பெரியவர்கள் எவரும் அவரின் கதையைக் காது கொடுத்துக் கேட்பதில்லை. தீயவர்கள் எதையும் நாக்கூசாது பேசுவார்கள். அதைப் பெரிதாக எடுத்து விளக்கம் கேட்கப் போனால் தான் அது விபரீதமாகும். நீங்கள் கவலைப்படாதீர்கள். யாரும் ஏழைகளாகப் பிறப்பது குற்றமும்

அல்ல. குறையும் அல்ல .தீயவர்களாக மாறிப் பயனில்லாத சொற்களைப் பேசுவது தான் குற்றம். அதனால் இவற்றைக் கேட்காதீர்கள்" என்றார் பொன்னம்பலம்.

**23. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**பெருமை உடையதன் அருமை பழியார்.**

"பெருமைக்குரிய உயர்ந்த பொருளை மிகத் துன்பப்பட்டுத் தான் பெற முடியும். அப்படித் துன்பப்படும் போது ஏற்படும் குறை நிறைகளைப் பெரியோர் தாழ்த்திப் பேச மாட்டார்கள்.

ரகுநாதன் ஆரூரனது திருமண விடயமாக பொன்னம்பலத்திடம் வந்த போது பொன்னம்பலம் சொன்னார்,

"வறியவர் ஒருவர் தம் பிள்ளைகளை முன்னேற்றப் பல நல்ல வழிகளை நாடலாம். ஆனால் தீய வழிகளை நாடுவது தான் குற்றம். கந்தவனம் ஆரூரனைக் கற்பிக்கப் பெரும் கஷ்டப்பட்டவர். கூலி வேலைகளைச் சிரமத்தைப் பாராது இரவு பகலாகச் செய்தவரே தவிரப் பிச்சை எடுக்கவில்லை. இரக்கவில்லை,களவு எடுக்கவில்லை.உடலை வருத்தி விடாமுயற்சியுடனும் மன வலிமையுடனும் போராடியவர். நேர்மையாகக் கூலி வேலை செய்த அவரை ஊரவர்கள் எல்லோரும் மதித்தனர். அவரைக் கொண்டே வேலைகளைச் செய்ய விரும்பினர். அதற்காகக் காத்திருந்தனர். உள் வீட்டுப் பிள்ளை போலவே அவரை மக்கள் நடத்தினர். அத்துடன்

படிக்கும் போது ஆரூரன் தந்தையுடன் தோட்டங்களில் கூலி வேலை செய்தவன். இவை யாவும் இழுக்கென்று நீங்கள் கருதினால் திருமணத்தை நிறுத்துங்கள்" என்றார் பொன்னம்பலம்.

"நதி மூலம், ரிஷி மூலம் ஆராயக் கூடாது என்று சொல்வார்கள். எனக்கு அவர்களது பூர்வீகம் முழுவதும் தெரியும். தெரிந்த பின்பு தான் முடிவெடுத்தேன்.எனது தந்தையார் ஆரம்பத்தில் பழைய இரும்புப் பொருட்களைவ வீடு வீடாகச் சென்று வாங்கித் தான் முன்னேறியவர். முன்னேற்றம் என்பது ஒருவனது முயற்சி. அந்த முயற்சியில் கேவலமான செயல்கள் நடைபெற்றாலும் அது முன்னேற்றமடைந்தால் அதைப் பற்றிப் பெரியவர்கள் வாய் திறந்து பேச மாட்டார்கள். இவன் மானமிழந்து, மதிகெட்டுப் பேசுவதை உங்களுக்குச் சொல்லி ஆறுதலடையவே வந்தேன்,இப்போ அது தேவையில்லை என்றாகி விட்டது" என்று எழுந்தார் ரகுநாதன்.

## 24. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் அருமை உடையதன் பெருமை பழியார்.

"உயர்ந்த பொருளைத் துன்பப்பட்டு விடாது முயன்றால் தான் பெறலாம் என்று தெரிந்த பெரியோர் பெருமைக்குரிய பொருளைப் பழித்துப் பேசார்.

தன்னைப் பற்றியும் தன் மகனைப் பற்றியும் மிகவும் தரக் குறைவாகப் பேசிய சுந்தரமூர்த்தியைத் தான் முன்பு விறகு வெட்டப் பயன்படுத்திய கோடரியால் கொத்திக் கொலை செய்து விட்டுச் சிறைக்குச் சென்றாலும் பரவாயில்லை என்று நினைத்தார் கந்தவனம் .தான் முன்பு கூலி வேலை செய்த காலங்களில் தன்னைக் கொண்டு கடுமையான வேலையைச் செய்வித்து விட்டுப் பணம் கொடுக்காது அலைக்கழிந்த சுந்தரமூர்த்தி மீது முன்பு வராத கோபம் இப்போது வந்தது.தனக்கும் தன் குடும்பத்திற்கும் உணவளித்த அந்த கோடரியை எடுத்துப் பார்த்தார் கந்தவனம். அவர் அதைத் தனது கடவுளாகக் கருதி இப்பொழுதும் வணங்கி வந்தார். தனது மனத் தாங்கலை அவர் பொன்னம்பலத்திற்குச் சொன்ன போது அவர் சொன்னார், “ஐயா, கல்வி என்பது மூலதனம்.பிச்சை எடுத்தாவது கல்வி கல் என்று எமது சான்றோர் கூறியுள்ளனர்.பிச்சை எடுப்பது இழிவானது. மனம் கோணாமல் மகிழ்வுடன் தருபவர்களிடமும் இரக்கக் கூடாதென்று கூறிய பெரியவர்கள் இளமைக் காலத்தில் பிச்சை எடுத்தாவது கல்வி கற்று உயர்ந்த பதவி வகி.அதனால் பெருமையே தவிரச் சிறுமை வராது என்று கூறியுள்ளனர். மாணிக்கக் கல்லில் அழுக்கப் படியாதது போல இரந்து பெற்ற பணத்தின் மூலம் கற்ற கல்விக்கும் இழுக்கு வராது.நீ உனது மகனைப் பிச்சை எடுத்துக் கற்பிக்கவில்லையே. உழைத்துத் தானே கற்பித்தாய். நாம் வணங்கும் தெய்வங்களை எடுத்துப் பார்த்தாலும் அவை இரந்துண்டிருக்கின்றன. செய்யக் கூடாத செயல்களையெல்லாம்

செய்திருக்கின்றன. சிவனும் விறகு வெட்டி விற்றவர் தானே. இதில் என்ன இழுக்கு இருக்கு. ஒருவன் உயர் கல்வியைக் கற்று மேதாவியானால் அதன் பெருமையைப் பேசுவார்களே தவிர அதைப் பெறப்பட்ட சிறுமைகளை யாரும் எண்ண மாட்டார்கள். அறிவில்லாத தீயவர்கள் தான் தம் குலப் பெருமையைப் பெருமையாகக் கூறுவர். நீ துக்கப்படுவதிலோ, ஆத்திரப்படுவதிலோ பயனில்லை. உனது மகனின் கல்வியை நினைத்துப் பெருமைப்படு" என்றார்.

**25. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**நிறையச் செய்யாக் குறைவினை பழியார்.**

"முழுமையாக ஒரு செயலைச் செய்து முடிக்காவிட்டால் அதைப் பெரியவர்கள் குற்றமாக நினைக்க மாட்டார்கள்"

ரகுநாதனின் தொழிற்சாலையில் புதிதாக வாங்கிய நவீன இயந்திரம் ஒன்று திடீரென்று பழுதடைந்தமையால் ரகுநாதனுக்குத் துயரமுண்டானது. அவ் இயந்திரத்தின் பெறுமதி பல கோடி ரூபா .ஐந்து வருடங்களுக்கு அது பழுது படாமல் இயங்கும் என்று கூறியே அந்த இயந்திரத்தைச் செய்த நிறுவனம் அவர்களுக்குக் கொடுத்தது.அது பழுதடைந்து பத்துத் தினங்கள் கழிந்தும் அது திருத்தப்படவில்லை. அதனால் வேதனைப்பட்ட ரகுநாதன் ,தனது வேதனையை ஆரூரனிடம் வெளிப்படுத்தினார். அதற்கு ஆரூரன் சொன்னான், "இவ் இயந்திரம் நவீனமானது.இது

போன்ற இயந்திரங்கள் இப்படிப் பழுதாவதில்லை. அப்படிப் பழுதானாலும் இயந்திரத்தை எமக்கு விற்ற நிறுவனம் புதியதோர் இயந்திரத்தைத் தரும். நீங்கள் ஒரு செயலை இத்தனை நாட்களுக்குள் இவ்வாறு செய்து முடிக்கலாமென்று திட்டமிடுவது ஒரு பாதுகாப்புக்காகவே தவிர முடியும் என்பதற்காக அல்ல.குறிப்பிட்ட தினத்திற்கு முன்பும் முடியும்.அதனால் வேலை செய்பவர்களைக் குறை கூறக் கூடாது.எமக்குப் புரியாத ஒரு தவறு நடந்து விட்டது."என்று ஆரூரன் கூறிக் கொண்டிருக்கும் போது இயந்திரத்தை விற்ற நிறுவனத்தின் மேலாளர் வந்து , "இயந்திரத்தைத் திருத்தி விட்டோம் ஆபத்து வேளைகளில் மட்டும் பாவிக்க வேண்டிய ஒரு விசையைத் தொழிலாளி ஒருவன் அறியாது பாவித்து விட்டான். அதை இப்போது தான் கண்டு பிடித்தோம்'' என்றார்.

## 26. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் முறையில் அரசர் நாட்டிருந்து பழியார்.

"குறையாகச் சொல்வதாலோ,பழிப்பதாலோ பாதகம் வராது என்று வீரர்களுக்குத் தெரியும்.

"நான் சுந்தரமூர்த்தியின் விடயத்தில் மனம் குழம்பியதால் தான் இவ்வாறு கதைத்தேன்.அதுவும் உங்களுடன், நல்ல வேளை அந்த நிறுவனத்தினரை ஏச வேண்டுமென்று தோன்றியதால் தான் உங்களிடம் வந்தேன். பழிப்பதாலோ,குறை கூறுவதாலோ

காரியம் நடைபெறாது. செயலால் தான் காரியம் நடைபெறும் என்பதை உணரத் தவறி விட்டேன்.உண்மையான வீரர்கள் தமது அரசன் கொடியவனாக இருந்தாலும் பழிக்க மாட்டார்களாம். அதுபோலக் கல்வியியலாளர் எதற்கும் அஞ்ச மாட்டார்களாம். இதைப் பெரியவர்கள் கூறியுள்ளார்கள்.அதை அறிந்தும் மனக் குழப்பத்தால் மாறுபாடடைந்து விட்டேன்'' என்று துக்கப்பட்டார் ரகுநாதன்.

"மனக் குழப்பம் ஏற்பட்டால் பேசாமல் மௌனமாக இருப்பது தான் சிறந்தது. மனக் குழப்பமுள்ளவர்களின் அறிவு தேய்ந்து விடும்.அதனால் கோபமடைந்து உண்மை நிலையை ஆராயாது பேசுவார்கள். அது செயலைச் செய்பவனுக்கு வெறுப்பையும் சினத்தையும் உண்டாக்கும். நீங்கள் தேவையில்லாதவற்றை எண்ணி வேதனைப்படுகிறீர்கள்.இது தேவை தானா? அப்பாவும் உங்களைப் போல எண்ணி ஆத்திரப்படுகிறார். தீயவர்களுக்கு எமது சினம் வாய்ப்பாக இருக்கும். அதனால் எதைப் பற்றியும் யோசிக்காது மகிழ்வுடன் இருங்கள்'' என்றான் ஆரூரன்.

## 27. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்
## செய்தக்க நற்கேளிர் செய்யாமை பழியார்.

"எப்போதும் செய்யக் கூடிய உதவிகளைச் செய்பவர்களுக்கு உதவி செய்ய முடியாத நிலை ஏற்பட்டால் நன்றியுள்ளவர் அவரைப் பழித்துப் பேச மாட்டார்.

அன்று ஆரூரனுக்குத் திருமண நிட்சயதார்த்தம் நடைபெற்றது. உறவினர்கள், நண்பர்கள் ,அயலவர்கள் ,ஊரவர்களர் எனப் பலர் கந்தவனத்தின் வீட்டில் கூடியிருந்தனர். கந்தவன்ததின் மனைவி கழுத்து நிறை நகைகளை அணிந்து கந்தவனத்தின் அருகே வந்து நின்றாள். நகை விற்பனை செய்யும் செல்வராசாவும் அங்கு வந்திருந்தான். மனைவியையும் செல்வராசாவையும் பார்த்த கந்தவனத்தின் கண்கள் கலங்கின. பத்து வருடங்களுக்கு முன்பு நடந்த ஒரு சம்பவம் அவருக்கு ஞாபகம் வந்தது.

அன்று ஆரூரனின் இறுதியாண்டுப் பரீட்சைக்கான கட்டணத்தைக் கட்டும் இறுதி நாள். முதல் நாள் இரவு அவர் பொன்னம்பலத்திடம் சென்று பரீட்டைச் கட்டணத்தைக் கடனாகக் கேட்டார். பொன்னம்பலம் கந்தவனம் கேட்கும் போதெல்லாம் மகிழ்வுடன் பணம் கொடுப்பார். சொன்ன தவணையில் பணத்தைத் திருப்பிக் கந்தவனம் கொடுத்து விடுவார்.அன்று காலை கந்தவனம் பொன்னம்பலத்தின் வீட்டுக்குச் சென்ற போது அவர் அங்கு இருக்கவில்லை. அப்படியான சந்தர்ப்பங்களில் அவர் மனைவியிடம் பணத்தைக் கொடுத்து விட்டுச் செல்வார். ஆனால் அன்று கொடுக்கவில்லை. கந்தவனம் தடுமாறிப் போனார். பொன்னம்பலம் வரலாமெனப் பல மணி நேரம் காத்திருந்தார். அவர் வரவில்லை. அதனால் அவர் செல்வராசாவின் நகைக் கடைக்குச் சென்று சொன்னார், “முதலாளி, எனது உயிர் போற விஷயம். இன்று ஆரூரனின் இறுதிப் பரீட்சைக்குப்

பணம் கட்டும் நாள். பொன்னம்பலம் ஐயா தாறதென்டவர். ஆனால் வீட்டில் இல்லை. நான் கேட்கும் போதெல்லாம் பணம் தரும் அவர் இக்கட்டான இந் நேரத்தில் தராமல் விட்டதை எண்ணி நான் துயரப்படவில்லை.வீட்டில் ஆரூரன் பணத்திற்காகக் காத்து இருக்கிறான். நான் வெறுங்கையோடு போனால் சகுனம் சரியில்லை என்று நினைத்து விடுவான். நீ எனக்கு மூவாயிரம் ரூபா தா. நான் கொண்டு சென்று கொடுத்து விட்டு எனது மனைவியின் தாலியைக் கொண்டு வந்து தருகிறேன்."கண்ணீர் விட்டார் கந்தவனம்.

"இதென்னண்ணை பேச்சு.நான் காசு தாறன் கொண்டு போ.ஆறுதலாகக் காசைத் தா தாலி வேண்டாம்" என்றான் செல்வராசா.அந்த வார்த்தைகள் கந்தவனத்தின் காதில் ஒலித்தன.

## 28. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் அறியாத் தேசத்து ஆசாரம் பழியார்.

ஒரு சமூகத்தவரின் கலாச்சாரத்தைப் பெரியோர்கள் பழிக்க மாட்டார்கள்.

ஆரூரனின் திருமண நிட்சயதார்த்த விழாவுக்கு அவனது தொழிற்சாலை நண்பர்கள் பலர் வந்திருந்தனர். பல வெள்ளைக்காரப் பெண்களும் வந்திருந்தனர். அவர்கள் தம் அங்கங்கள் தெரிய உடை அணிந்திருந்தனர். வெள்ளைக்காரப்

பெண்கள் ஆரூரனை இறுகக் கட்டி அணைத்துத் தமது வாழ்த்துக்களைக் கூறினர். அங்கு வந்திருந்த யாரும் அதைப் பெரிதாக எடுக்கவில்லை.ஆண்கள் ஆரூரனின் மனைவியின் கையைப் பிடித்துக் குலுக்கி வாழ்த்தினர். பின்பு உணவு உண்ணும் போது கரண்டியால் அவர்கள் உணவை உண்டனர். ரகுநாதன் அங்கு வந்தவர்களின் கலாச்சாரத்திற்கேற்பவே உணவு வகைகளைத் தயாரித்து வைத்திருந்தார். ஊரவர்கள் நிலத்தில் அமர்ந்திருந்து வாழை இலையில் உண்டதை அங்கு வந்த வெள்ளைக்காரர்கள் வேடிக்கை பார்க்கவில்லை. சிலர் தாமும் ஊரவர்களுடனும் ஆரூரனுடனும் நிலத்தில் அமர்ந்திருந்து வாழை இலையில் உணவு உண்டனர்.

**29. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**வறியோன் வள்ளியன் அன்மை பழியார்.**

“ஏழைகள் பெரும் வைபவங்களில் அதன் தராதத்திற்கு ஏற்றவாறு அன்பளிப்புகளை வழங்காவிட்டாலும் பெரியவர்கள் அதைக் குறையாகக் கொள்ளார்.

ஊர்ச் சிவன் கோவிலின் தெற்கு வாசலுக்கு ஒரு கோபுரம் கட்டுவதற்கான கூட்டம் கோவில் மண்டபத்தில் நடைபெற்றது.கோவிலின் தலைவர் பொன்னம்பலம். பலர் கூட்டத்திற்கு வரவில்லை. அதனால் வீடு வீடாகச் சென்று பணம் கேட்பதென்று முடிவு செய்யப்பட்டது.

அன்று மாலை தேவராசாவும் பொன்னம்பலமும் ஊரவர்கள் சிலரும் வீடுகளுக்குச் சென்றனர். தெற்கு வாசலுக்கு ஏன் கோபுரம் என்று கேட்டவர்கள் பெரும் பிரமுகர்களைக் கண்டதும் தாம் கூறியதை மறந்து மகிழ்வுடன் அவர்களை வரவேற்றுப் பணம் கொடுத்தனர்.

சிங்காரம் கூலித் தொழில் செய்பவன். அடுத்ததாக அவனின் வீட்டுக்குத் தான் செல்ல வேண்டும்."சிங்காரம் சாப்பிடவே வழியில்லாமல் இருக்கிறான். அவன்ரை வீட்டுக்குப் போகத் தேவையில்லை" என்றார் ஊரவர் ஒருவர்.

"நாம் யாரையும் பழித்துப் பேசக் கூடாது. சிங்காரமும் ஒரு மனிதன். ஊரவன் .அவனை ஒதுக்கி வைத்தால் அவன் துக்கப்படுவான். அவன் தருவதைத் தரட்டும்.இல்லாவிட்டால் விடட்டும்.முன்பு ஊரில் ஏழைகளாக இருந்தவர்கள் தான் இப்போ பணக்காரர்களாக இருக்கிறார்கள். அது போலச் சிங்காரமும் ஒரு காலத்தில் தனவந்தனாகலாம். ஒருவரை அவரது ஏழ்மையைக் காரணம் காட்டி பழிப்பது கூடாது. வாருங்கள் செல்வோம்" என்றார் பொன்னம்பலம். சிங்காரத்தின் வீட்டுக்குச் செல்ல வேண்டாம் என்றவன் சற்றுத் தயங்கினான். அவன் பெரும் பணக்காரன்.தான் அங்கு செல்வது தனக்கு மானக்கேடு எனக் கருதினான்.அதைக் கவனித்த பொன்னம்பலம் அவன் பேசத் தொடங்கு முன் சிங்காரத்தின்

வீட்டு ஓலைப் படலையைத் திறந்து கொண்டு செல்ல அவரின் பின்னால் ஊரவர்களும் சென்றனர்.

**30. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**சிறியோர் ஒழுக்கம் சிறந்தோரும் பழியார்.**

"உயர்ந்த சான்றோர் அறிவில்லாதலர்களின் நடத்தைக் குறைபாடுகளைப் பழிக்க மாட்டார்கள்"

சிங்காரம் பொன்னம்பலத்தினதும் ,தேவராசாவினதும் பாதங்களைத் தன் இரு கைகளாலும் பற்றிப் பிடித்து அழுதான், "நீ எதுவும் தர வேண்டாம். நாம் உன்னை ஏழை என்பதற்காக மதிக்காமல் விட்டு விட்டோம் என்று எண்ணக் கூடாது என்பதற்காக வந்தோம்." என்றார் பொன்னம்பலம்.

அவர்கள் சிங்காரத்தின் வீட்டை விட்டு வெளியே வந்ததும் முன்பு கதைத்த அந்த ஊரவன் சொன்னான், "உதைச் சொல்லத்தான் எங்களையும் அழைத்துக் கொண்டு சென்றீர்களா,எனக்கு எவ்வளவு வேலை இருக்கு.அப்படியிருக்கக் கடவுளின் காரியம் என்று வந்தேன்.இப்பட்டிப்பட்வர்களின் வீடுகளுக்கு இனியும் செல்வதானால் நான் வரவில்லை. நடன சபாபதி நூறு ரூபா தாறான். இப்படியானவர்களிடம் வாங்கும் பணத்தை நான் தருகிறேன்" என்றான் அவன் அளவுக்கு மீறிய கோபத்துடன்

"உண்மை தான் .நாம் பணக்காரர்கள். பொதுத் தொண்டிற்குச் சென்றாலும் திறக்கக் கூடாத படலைகளைத் திறக்கக் கூடாது.

அடுத்த கூட்டத்தில் இன்னாரின் வீடுகளுக்குத் தான் செல்ல வேண்டும் என்று தீர்மானம் எடுத்தல் வேண்டும்." என்றான் இன்னொருவன்.

பொன்னம்பலம் எதுவும் பேசவில்லை, "அறிவில்லாதவர்களின் பேச்சுக்கு விடை கூறினால் அசிங்கத்தை மிதிப்பதை விடக் கேவலமான நிலை தோன்றும்" என்று நினைத்தார் .அதையே தேவராசாவும் நினைத்தார்.

**துவ்வாப் பத்து**

**31. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**பழியோர் செல்வம் வறுமையின் துவ்வாது.**

"தீய வழியில் சேர்க்கப்பட்ட செல்வம், வறுமையை விடக் கொடுமையான தீமைகளைத் தரும்.

சுந்தரமூர்த்தி கள்வர், களவெடுக்கும் பொருட்களைக் குறைந்த விலையில் வாங்குவதாக அவ்வூரில் வாழும் ஒருவன் இரகசியமாகப் புகாரிட்டிந்தான். அவனது வீட்டில் அண்மையில் பெருந் தொகையான தங்க நகைகள் திருடப்பட்டன. சுந்தரமூர்த்தி தீயவர்களுடன் சேர்ந்து திரிபவனென்றும், தீயவர்களுக்கு ஆதரவளிப்பவன் என்றும் ஊரவர்களுக்குத் தெரியும். ஊரில் நடைபெறும் சிறு சிறு களவுகள் பிடிபடுமே தவிரப் பெருங்களவுகள் பிடிபடுவதில்லை. அதனால் களவு கொடுத்தோர் எதுவும் செய்யத் தோன்றாது இருந்தனர். அன்று

திருடப்பட்ட வீட்டுககாரன் தனது பெயரை வெளியிட வேண்டாமென்று கூறிப் புகாரிட்டிருந்தான். காவல் துறையினரும் திருட்டுக்களால் பெரும் துன்பப்பட்டனர். மேலதிகாரிகள் அவர்களை எந்நேரமும் ஏசியபடியும் எச்சரித்த படியும் இருந்தனர். அதனால் காவல் துறை அதிகாரி சுந்தரமூர்த்தியின் வீட்டைத் திடீரெனச் சோதனை செய்தார்.அப்போது புகாரிட்டவனின் வீட்டில் திருடப்பட்ட ஆபரணங்கள் இருந்தன. சுந்தரமூர்த்தி அவ்வாபரணங்களைத் தனது வீட்டின் பின் பக்கத்தில் புதைக்கப்பட்டது தனக்குத் தெரியாதென வாதிட்டான். இருந்த போதும், திருடியோர் அதை ஒப்புக் கொண்டமையாலும் சுந்தரமூர்த்திக்குத் தெரிந்து தான் திருட்டு நடைபெற்றது என்பதை நிரூபிக்காமையாலும் சுந்தரமூர்த்தியை வழக்கு முடியும் வரை சிறையில் அடைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். ஆறு மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்த சுந்தரமூர்த்தி பிணையில் விடுவிக்கப்பட்டான்.

**32. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**கழி, தறு கண்மை பேடியின் துவ்வாது.**

“எல்லை மீறிய வீரம் பேடியின் கோழைத் தனத்தை விட இழிவானது.பலவீனர்களிடம் வீரம் காட்டுவது வெறுக்கத் தக்கது.

பிணையில் வந்த சுந்தரமூர்த்தியை ஊரவர்கள் வெறுத்தனர். உறவினர்கள் கூட அவரை இனத்தவன் என்று கூற

வெட்கப்பட்டனர். சுந்தரமூர்த்தியின் சகோதரன் சதாசிவ மூர்த்தி.அவனது மகளுக்குப் பெரிய இடத்தில் திருமணம் முற்றாகியிருந்தது. இருப்பினும் தனது சகோதரனின் நடத்தையால் தனது மகளின் திருமணம் குழம்பி விடுமோ எனப் பயப்பட்டார் சதாசிவமூர்த்தி. அதனால் சுந்தரமூர்த்திக்கு தனது மகளின் திருமணத்திற்கு அழைப்பிதழ் கொடுப்பதில்லை என்று தீர்மானித்தார். திருமணத்தன்ற சுந்தரமூர்த்தி. சதாசிவமூர்த்தியின் வீட்டுக்கு வந்து குழப்பம் விளைவித்தான். சதாசிவமூர்த்தியின் மகன் திருமாறன் அமைதியானவன் ,ஒழுக்கமானவன் .சதாசிவமூர்த்தி ,சுந்தரமூர்த்தி வந்து கலகம் செய்ததால் தனக்கு அவமானம் என நினைத்து பின்பக்கம் சென்றார். திருமாறன் பந்தலில் இருந்து எழுந்து வந்தான். சுந்தரமூர்த்தி கொண்டு வந்த பொல்லால் திருமாறனின் தலையில் தாக்கினான். தலையில் பெரிய காயம் உண்டாகி இரத்தம் வழிந்தது. இருப்பினும் திருமாறனோ சதாசிவமூர்த்தியோ எதுவும் பேசவில்லை. மாப்பிள்ளையின் தகப்பன் வந்து சொன்னார். “மரியாதையாகச் சொல்கிறேன். இந்த இடத்தை விட்டுப் போ .இல்லா விட்டால்…” என்று அவர் கூறும் போது , “என்ன செய்வாய்?” என்று கேட்டவாறு முன்னே வந்தான் சுந்தரமூர்த்தி. மாப்பிள்ளையின் தகப்பன் சுந்தரமூர்த்தியை இழுத்துச் சென்று வெளியே விட்டு விட்டுச் சொன்னார், ‘‘இவனைக் கட்டி வையுங்கள்’’ என்று மாப்பிள்ளையின் இனத்தவர்கள் சுந்தரமூர்த்தியைப் பிடித்து

இழுத்துச் சென்றனர், "பேடிகள் தான் பலவீனர்களைத் தாக்குவார்கள். நீ ஒரு பேடி .வலு இருந்தால் எம்மில் ஒருவருக்கு அடி பார்ப்போம்'' என்றான் ஒருவன். அதைக் கேட்ட சுந்தரமூர்த்திக்கும் பயமாக இருந்தது.

**33. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**நாண்இல் வாழ்க்கை பசித்தலின் துவ்வாது.**

அறமில்லாத வழியில் வந்த பொருளை உண்டு வாழ்வது பசியால் வருந்துவதை விடக் கொடியது.

சுந்தரமூர்த்தியை இழுத்துச் சென்றவன் தெருவோரத்தில் நின்ற அரச மரத்தில் கட்டி விட்டுச் சொன்னான், "சதாசிவ மூர்த்தியின் சகோதரனா நீ .எனது முதலாளிக்கு சதாசிவமூர்த்தியை இருபது வருடங்களாகத் தெரியும். அவர் மீதுள்ள அன்பின் காரணமாகத் தான் அவர் தனது மகனைச் சதாசிவமூர்த்தியின் மகளுக்குத் திருமணம் செய்து கொடுக்கிறார். நீ குழப்பினால் திருமணம் நின்ற விடுமா? மனிதன் ஒழுக்கமாக வாழ வேண்டும். திருடித் தின்பதும் ,விபச்சாரம் செய்து உண்பதும் ஒன்று தான். ஒழுக்கமானவர்கள் உயிர் போவதாக இருந்தாலும் கூட இரந்துண்ண மாட்டார்கள். மற்றவர்களின் பொருளைத் திருடி உண்பதை விட உண்ணாமல் இருந்து சாவது மேலானது. அறமில்லாத வழிகளால் வந்த பொருளை உண்டு வாழ்வது,

பசியால் வருந்தும் வறுமையிலும் பார்க்கக் கொடியது. அப்படியான கொடிய வாழ்வு வாழும் நீ உத்தமரான சதாசிவமூர்த்தியின் சகோதரன் என்று கூற எனக்கே அவமானமாக இருக்கிறது.உன்னைப் பந்தலில் வைத்து இழுத்து வந்த போது ஊரவர்கள் எவரும் உனக்காகக் கதைக்கவில்லை.அதன் பின்பும் நீ உயிர் வாழ வேண்டுமா என்று சிந்தித்துப் பார்" என்றான் அவன்.

## 34. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் பேணில் ஈகை மாற்றலின் துவ்வாது.

"விருப்பமில்லாமல் கொடுப்பது, கஞ்சத்தனத்தை விடக் கேவலமானது"

பொன்னம்பலமும் ஆரூரனும் ,மாப்பிள்ளையின் தந்தையும் சுந்தரமூர்த்தியைக் கட்டியிருந்த அரச மரத்தடிக்கு வந்தனர். மாப்பிள்ளையின் தந்தையுடன் வந்தவன் சுந்தரமூர்த்தியை அவிழ்த்து விட்டான்.

"மனதில் ஈரமுள்ள சதாசிவமூர்த்தி பொன்னம்பலம் ஐயாவிடம் கேட்டதற்காக உன்னை மன்னித்து அவிழ்த்து விட்டேன். இனியாவது மனிதனாக வாழ்" என்றார் மாப்பிள்ளையின் தந்தை

"பொன்னம்பலம் ஐயா,நீங்கள் சிவன் கோவில் கோபுரம் கட்டுவதற்காக நிதி கேட்டு எனது வீட்டுக்கு வந்த போது தரக்குறைவாகப் பேசிப் பணம் தராது அனுப்பி விட்டேன்.அது

பிழையென்று இப்போது தான் புரிகிறது.நான் பத்தாயிரம் ரூபா தருகிறேன்" என்றான் சுந்தரமூர்த்தி.

"வேண்டாம். உனக்குத் தர விருப்பமில்லை என்பதற்குப் பல காரணங்களை அன்று கூறினாய். பொது விஷயங்களுக்கு மனம் விரும்பிக் கொடுத்தல் வேண்டும்.மனம் விரும்பிக் கொடாது கரைச்சலுக்காகவும்,முகஸ்துதிக்காகவும் கொடுக்கப்படும் பொருள், கொடுக்க மறுக்கும் கஞ்சத்தனத்தை விட வெறுக்கத்தக்கது எனப் பெரியவர்கள் சொல்வார்கள்.அன்றன்று உண்ண வழியின்றிச் சிரமப்படும் சிங்காரம் மனமகிழ்வுடன் நூறு ரூபா தந்தான். அது இலட்ச ரூபாவை விடப் பெறுமதி கூடியது" என்றார் பொன்னம்பலம்.

## 35. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் செய்யாமை மேற்கொள் சிதடியின் துவ்வாது

"தன்னால் செய்ய இயலாத ஒரு செயலைச் செய்ய முயற்சிப்பது அறிவில்லாத் துன்பம் தரும் நிகழ்வாகும்"

ஆரூரன் பொறியியலாளன். மிகுந்த செயல் வீரன் .நுட்பமான அறிவுள்ளவன். அதனால் கோவில் வேலைகளுக்கான பொறுப்புக்களை ஏற்குமாறு தேவராசா கேட்டுக் கொண்டார்.

"ஐயா, நான் பொறியியலாளன் தான். கட்டடங்களைக் கட்டுவது தான் எனது முதன்மையான பணி. ஆனால் கோவில் கோபுரம்

ஆகம முறைப்படி கட்டுதல் வேண்டும். அதில் திறமையுள்ள பலர் இவ்வூரில் இருக்கின்றனர். கோபுரத்தின் அளவுகள் தெரிதல் வேண்டும். ஒவ்வோர் அளவிற்கும் பலன் உண்டு.அளவு பிழைத்தால் ஊருக்குக் கேடு வந்து விடும். கோபுரத்திற்குச் சிற்பவேலைகள் செய்தல் வேண்டும்.அதைச் சிற்பிகள் தான் செய்வார்கள். அத்துடன் ஒவ்வொரு வேலைகளையும் ஆரம்பிக்கும் போதும் பூசை செய்தல் வேண்டும். இவையெல்லாம் வழக்கமாகச் செய்பவர்களுக்குத் தான் தெரியும்.சிற்பிகள் இப் பூசையைத் தினமும் செய்வார்கள்.இப்படி ஏராளமான விடயங்கள் கோபுர வேலையில் உண்டு. இவையெல்லாம் எனக்குத் தெரியாது.தெரியாத செயலைச் செய்வது அறிவீனம்.அது பல துன்பங்களைத் தோற்றுவிக்கும். நான் தொழிலை ஆரம்பித்து விட்டு யாரிடமும் ஆலோசனைகள் கேட்க முடியாது.ஏனெனில் நிபுணத்துவமுள்ளோர் குறைவான அறிவுடையோர்க்கு ஆலோசனைகள் வழங்கார்.தற்செயலாகக் குறைகள் ஏற்பட்டாலும் திருத்தித் தரார்.அது எனக்கும் ஊருக்கும் நல்லதல்ல" என்றான் ஆரூரன்.

## 36. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் பொய் வேளாண்மை புலைமையின் துவ்வாது

"உதவி செய்யாது உதவி செய்வது போல நடிப்பது கேவலமானது மட்டுமல்ல, பெருந் துன்பத்தைத் தருவது"

சுந்தரமூர்த்தியின் தீய செயல்களுக்கு உடந்தையாக இருப்பவன் நல்லைநாதன். சுந்தரமூர்த்தி ஏவும் தீய செயல்களைச் செய்வதற்காக வேவு பார்ப்பதும் அவனது தொழில் .அவன் வந்து கூறிய விடயங்களை வைத்துத் திட்டம் தீட்டுவான் சுந்தரமூர்த்தி .பின் தனது கையாட்களை அழைத்து தனது திட்டப்படி நடக்கச் சொல்வான். அதன்படி அவர்கள் நடப்பார்கள். அவர்களுக்குச் சிறிதளவு கூலி கொடுப்பான். அவர்கள் திருடிக் கொண்டு வரும் பொருட்களை மிகவும் மலிவு விலையில் வாங்குவான். அவர்கள் கூடுதலாகக் கேட்டால் பொருட்களை வேண்டாம் என்று கூறி விடுவான். வேறு வழியின்றி அவர்கள் சுந்தரமூர்த்தி கேட்கும் விலைக்கே பொருட்களைக் கொடுத்து விடுவார்கள்.

நல்லைநாதனின் மனைவி செல்லம்மா. அவளுக்குச் சத்திரசிகிச்சை செய்ய வேண்டியிருந்தது. அதற்கு இருபத்தையாயிரம் ரூபா தேவைப்பட்டது. நல்லைநாதன் சுந்தரமூர்த்தியைக் கேட்டான். சுந்தரமூர்த்தி பணம் தருவதாக ஒப்புக் கொண்டானே தவிரக் கொடுக்கவில்லை.பலமுறை நல்லைநாதன் கேட்டு அலுத்து விட்டான். வைத்தியர் உடனே சத்திரசிகிச்சை செய்ய வேண்டுமென்றார்.

அன்று சுந்தரமூர்த்தியைச் சந்தித்த நல்லைநாதன் சொன்னான், “உங்களை இப்போ பிணையில் தான் விட்டிருக்கிறார்கள். உங்களைப் பற்றிய விபரங்கள் தெரிந்தால் சிறைக்குத் தான் போவீர்கள்,உங்களைப் பற்றிய விடயமெல்லாம் எனக்குத் தெரியும்.சொல்லப் போகிறேன்”

“சொல்லாதை ,நான் நீ கேட்ட காசைத் தாறன்” என்றான் சுந்தரமூர்த்தி.

‘‘இப்போ எனக்கு ஓர் இலட்ச ரூபா வேணும்’’ என்றான் நல்லைநாதன்.

‘‘ஒரு இலட்சமோ..’’ வாயைப் பிளந்தான் சுந்தரமூர்த்தி.

‘‘ஓம்.. நான் கேட்ட போது தந்திருந்தால் நான் முன்பு கேட்டதை வாங்கியிருப்பன்.இனியும் தாமதித்தால் இரண்டு லட்சம் கேட்பன்’’ என்றான் நல்லைநாதன்.

‘‘நான் ஓர் இலட்சம் தாறன் என்ற சுந்தரமூர்த்தி உள்ளே சென்று ஓர் இலட்ச ரூபா பணம் கொண்டு வந்து கொடுத்தான்.

## 37. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் கொண்டு கண்மாறல் கொடுமையின் துவ்வாது

“அன்பு கொண்டவர் போல உறவாடிப் புறங் கூறுபவர்களது நட்பு பகைவரின் கொடுமையை விடக் கொடியது.

பொன்னம்பலத்தைத் தனது உயிர் நண்பன் என்று கூறிக் கொள்பவன் ஏகாம்பரம். இருவரும் ஒன்றாகப் படித்தவர்கள். பொன்னம்பலம் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான போது

ஏகாம்பரம் ஆசிரியத் தொழில் கிடைத்துச் சென்றவர். பொன்னம்பலத்திற்கு நேர்மாறான குணவியல்புகளை உடையவர் ஏகாம்பரம். தனிமையில் இருவரும் சந்தித்தால் ஏகாம்பரம் உயிர் நண்பரைப் போல தன்னைக் காட்டிக் கொள்வார். அவர் இல்லாத இடங்களில் பொன்னம்பலத்தின் அறிவை விட தனது அறிவு மேம்பட்டதென்று கூறுவார். அத்துடன் பொன்னம்பலத்தின் மாமன் செல்வாக்கு மிகுந்தவர். அவரின் செல்வாக்கால் தான் பொன்னம்பலத்தைப் பலரும் மதிக்கிறார்கள் என்று கூறுவார்.

அன்று வந்த ஏகாம்பரம் பொன்னம்பலத்தைப் புகழ்ந்தார். அதற்குப் பொன்னம்பலம் சொன்னார், “இல்லாதவற்றையெல்லாம் கூறாதே. ஒருவரைப் புகழ்வது அழகல்ல. அதுவும் நேரில் புகழ்வது அவமானம். நல்ல நண்பன் என்பவன் நேரிலும் புகழக் கூடாது.அவர் இல்லாத இடங்களிலும் புகழக் கூடாது.நண்பர்கள் உரிமை காரணமாகப் பழகுபவர்களே தவிரக் காரணத்திற்காகப் பழகுபவர்கள் அல்ல. அப்படிப் பார்த்தால் சுந்தரமூர்த்திக்கும் உனக்கும் வித்தியாசமில்லை. சுந்தரமூர்த்தி அன்பு மிகுந்தவன் போல நேரில் கதைப்பான். ஆள் இல்லாத இடங்களில் புறங் கூறுவான். இது பகைவர்கள் செய்யும் தீமையை விடக் கொடியது. ஏனென்றால் பகைவர்கள் கொடுமை செய்வார்களென்று முன்பே தெரியும். நண்பராக நடிப்போர் எப்போ எப்படித் தீமை செய்வார்கள் என்று தெரியாது” என்றார் பொன்னம்பலம்.

## 38. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்
## அறிவிலி துணைப்பாடு தனிமையின் துவ்வாது

“அறிவுள்ளவரின் துணையை விட்டு விட்டு அறிவில்லாதவரின் துணையைப் பெறுவது தனித்திருப்பதை விடக் கொடுமையானது”

பொன்னம்பலம் அவ்வாறு சொன்னமையால் கோபப்பட்ட ஏகாம்பரம் சுந்தரமூர்த்தியின் வீட்டுக்கு வந்தார்.

“பொன்னம்பலத்திற்குத் தான் பெரிய அறிவாளியென்ற எண்ணம். ஊரவர்களும் அவர் பெரிய மனிதனென்று தூக்கித் தலையில் வைத்திருக்கிறார்கள். அதனால் அவருக்கு திமிர் அதிகரித்துக் கொண்டு செல்கிறது’’ என்றார் ஏகாம்பரம்.

‘‘பொன்னம்பலம் தான் உன்னுடைய உற்ற நண்பனென்றாய். இப்ப இப்படிச் சொல்கிறாய்’’ என்றான் சுந்தரமூர்த்தி.

‘‘எல்லோரும் நடிக்கிறார்கள்’’ என்று சொன்ன ஏகாம்பரம் பொன்னம்பலத்தையும் தேவராசாவையும் ஆரூரனையும் குறையாகச் சொல்லி விட்டுச் சென்றார்.அதன் பின் அவர்களைச் சந்திக்க விரும்பாத ஏகாம்பரம் தனிமையில் இருந்தார்.தனிமை அவரை வாட்டியதால் அடிக்கடி சுந்தரமூர்த்தியின் வீட்டுக்குச் சென்றார். அதை அவதானித்த

காவல்துறையினர் அவரின் வீட்டுக்குச் சென்று சந்தேகத்தின் பேரில் அவரைக் கைது செய்தனர்''

''அவரைப் பிணையெடுக்கச் சென்ற அவரது சகோதரன் சொன்னான், ''அறிவானவர்களை விலக்கி விட்டு அறிவீனர்களுடன் நட்புக் கொண்டால் மானம் மரியாதை மட்டுமல்ல உயிரும் போய் விடும்.இப்போ உன்னால் எமக்கும் மானக் கேடு''

தனிமை வாட்டுகிறதென்று சுந்தரமூர்த்தியின் வீட்டுக்குச் சென்றால், அது தனிமையை விடக் கொடியதாக இருக்கிறது'' என்று நினைத்தார் ஏகாம்பரம்.

**39. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**இழிவுடை மூப்புக் கதத்தின் துவ்வாது.**

"தீய செயல்களைச் செய்பவர்களின் முதுமைப் பருவம்,சின மிகுதியால் தீமைகளைச் செய்யும் இளமைப் பருவத்தை விடத் துன்பம் தரும்"

"இளமையில் இரத்த மிடுக்கால் செய்யும் தீய செயல்கள் இளமைப் பருவத்தில் பெரும் துன்பத்தைத் தராவிட்டாலும், அது முதுமைப் பருவத்தில் வந்து சேர்ந்து பெரும் துன்பங்கள் பலவற்றைத் தரும் என்று படித்த உங்களுக்குத் தெரியாதா? அத்துடன் இளமைப் பருவத்தில் செய்யும் தீமைகளைப் பற்றி யாரும் ஆராய்வதில்லை.ஆனால்

முதுமைப் பருவத்தில் ஆராய்வார்கள்.உங்களின் பெண் பிள்ளைகளுக்குத் திருமணம் பேசும் போது நீங்கள் இளமைப் பருவத்தில் ஆணவ மிகுதியால் செய்த செயல்களாற் பாதிக்கப்பட்டவர்கள் அத் திருமணத்தைக் குழப்புவார்கள்.அதனால் உங்கள் பிள்ளைகளுக்கு நல்லவர்களின் வீட்டில் மாப்பிள்ளை எடுக்க முடியாமற் போகும். சுந்தரமூர்த்தியை அவரது சகோதரர்களே விலத்தி வைத்திருக்கும் போது நீங்கள் ஏன் அங்கு செல்கிறீர்கள்.படித்தும் உங்களுக்குப் புத்தி இல்லையா? என்று ஏகாம்பரத்தை அவனது சகோதரன் கேட்டான். ஏகாம்பரம் எதுவும் பேசாது மௌமாக இருந்தார். அவன் சொன்னதை நினைக்க அவருக்குப் பயமாக இருந்தது.

**40. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**தான்ஓர் இன்புறல் தனிமையின் துவ்வாது.**

“தான் தேடிய செல்வத்தை தான் மட்டும் உண்டு களிப்பது வறுமையை விடத் துன்பமானது.

“அக்காவும் பிள்ளைகளும் எவ்வளவு கஷ்ரப்படுகிறார்கள். அத்தான் இறந்த பின்பு நீ அக்காவுக்கு ஏதாவது உதவி செய்தாயா? நீ ஆசிரியராகக் கடமை புரிகிறாய். தோட்டம் செய்கிறாய். அதன் மூலம் நல்ல வருமானம் கிடைக்கிறது.அக்காவின் பிள்ளைகள் சிறுவர்கள். வருமானம் இல்லாதவர்கள். மூன்று பிள்ளைகளும் படிக்கிறார்கள்.

அதற்கான செலவு எவ்வளவு என்பது உனக்குத் தெரியும். இருந்தும் நீ ஒரு சதம் கூட உதவுவதில்லை.நீயே உழைத்து ,நீயே சாப்பிடுகிறாய்.ஏழை எளியவர்கள் உண்கிறார்களா என்று நினைத்துப் பார்க்கிறாயா? தானே உழைத்துத் தானே உண்பது வறுமையை விடக் கேவலமானது என்று கற்ற உனக்குப் புரியாதா?அக்காவின் பிள்ளைகள் உன்னுடைய பிள்ளைகளைப் போன்றவர்கள் தானே. நானும் தம்பியும் உதவி செய்கிறோம். தம்பி அக்காவின் நல்வாழ்வுக்காகத் தான் திருமணம் செய்யாது இருக்கிறான். நீ என்ன செய்கிறாய்? உனக்கு இரக்கமில்லையா? என்று ஏகாம்பரத்தைப் பார்த்துக் கேட்டான் அவரது சகோதரன். ஏகாம்பரம் எதுவும் பேசாது இருந்தார்.

**அல்ல பத்து**

**41. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**நீர்அறிந்து ஒழுகாதாள் தாரம் அல்லள்.**

“நல்ல குணங்களில்லாத பெண் மனைவி என்னும் தகுதியைப் பெற்றவன் அல்லள்

கந்தவனத்தின் திருமண நாள் அன்று. அவரும் அவரது மனைவியான பார்வதியும் அன்ற காலை கோவிலுக்குச் சென்று வந்தனர். அவர் திருமணப் பதிவு கூடச் செய்யவில்லை. கந்தவனத்தின் தகப்பனின் சகோதரியின் மகள் அவள். கந்தவனத்தின் குடும்பத்தைப் போன்ற ஏழைக் குடும்பம். தகப்பன் நல்ல நாள் ஒன்றில் கந்தவனத்தைக்

கோவிலுக்கு அழைத்து வந்தார். அதுபோல பார்வதியின் தகப்பனும் பார்வதியைக் கோவிலுக்கு அழைத்து வந்தார். குருக்கள் கொடுத்த மஞ்சள் கயிற்றைக் கந்தவனம் அவளது கழுத்தில் கட்டினார். பின்பு அவளை வீட்டுக்கு அழைத்து வந்தார். தாய் சமைத்திருந்தாள். அதைப் பார்வதி எடுத்து வந்து கந்தவனத்திற்குப் பரிமாறினாள். உணவு உண்ட பின் கந்தவனம் வேலைக்குச் சென்று விட்டார். இரவு அவரது தகப்பன் இருவருக்கும் சொன்னார், “பார்வதி ,உனக்கு ஏழ்மையைப் பற்றி நான் கூறத் தேவையில்லை. கணவனின் வருவாயை அறிந்து செலவு செய். துறவிகள் ,ஏழைகள், அனாதைகள் உதவி கோரி வந்தால் இல்லை என்று சொல்லாது உள்ளதைக் கொடு. பிதிர்கள், தெய்வம், விருந்தினர், சுற்றத்தவர், தான் என்ற ஐவரையும் போற்று. அறவழியில் தான் கந்தவனம் பொருள் தேடுவான். தீய வழியில் அவனைப் பொருள் தேட அனுமதிக்காதே. எப்பொழுதும் எல்லோரையும் நேசி. கடின வார்த்தைகளைப் பேசாதே. இவ்வாறு வாழ்ந்தால் தேவர்கள் உன்னைப் போற்றுவார்கள். அறம் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது இல்லறம் ஒன்று தான் என்றார். அதன்படி இன்றும் அவள் வாழ்ந்து வருகிறாள். அவளின் அருகில் வந்த கந்தவனம் சொன்னார், “ ஒருவனது வாழ்வு சிறப்பது மனைவியின் நற்குணங்களால் தான். உனது நற்குணத்தால் தான் இன்று நாம் பெருவாழ்வு வாழ்கிறோம்” கண் கலங்கினார் கந்தவனம்.

## 42. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்

**தாரம் மாணதது வாழ்க்கை அன்று.**

சகல செல்வங்கள் இருந்தாலும் மனைவி மாண்பில்லாதவளாக இருந்தால் அவளோடு வாழும் வாழ்க்கை சிறக்காது

“மனைவி மாண்புடையவளாக இருந்தால் குடும்பத்தில் இல்லாதது என எதுவும் இல்லை. அவள் மாண்பு இல்லாதவளானால் குடும்பத்தில் உள்ளது என்று எதுவும் இல்லை” என்று அப்பா சொல்வார். அது உண்மை. நான் கூலி வேலை செய்யுங் காலத்தில் பெறும் கூலிப் பணத்தை உன்னிடம் தருவேன். அப் பணத்தில் மிச்சம் பிடித்து ஆரூரனை கற்பித்தாய். உற்றார் உறவினர்களுக்கும், பெற்றோருக்கும் செய்ய வேண்டிய எல்லாவற்றையும் செய்தாய். அத்துடன் என்னைத் தீய வழியிற் செல்லாமற் பாதுகாத்தாய். கூலி வேலை செய்யும் காலத்தில் நான் எதற்கும் கஷ்டப்படவில்லை. ஊரவர்கள் உன்னைப் போற்றிப் புகழ்ந்தனர். ஒருவன் வாழ்வதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே என்பார்கள். அது உண்மை, சுந்தரமூர்த்தியிடம் எல்லா வகையான செல்வங்களும் உண்டு. ஆனால் அவனது மனைவி மாண்பில்லாதவளாக இருப்பதால் தான் அவன் தீய செயல்களைச் செய்கிறான். அவனது செயல்களை அவள் ஊக்குவிக்கிறாள். அருமைநாதன் தீயவன். குடிகாரன் .அவனது மனைவி மகாலட்சுமி போன்றவள். ஊரவர்கள் அவள் பெரும் துன்பப்படப் போகிறாள் என்றனர். அவள்

தனது மாண்பால் அவனைத் திருத்தி விட்டாள். இப்போ அருமைநாதன் பெயருக்கேற்ப வாழ்கிறான். வாழ்க்கை இனிக்கிறது என்கிறான். எல்லாம் மனைவியின் மாண்பின் மகத்துவம்" என்றார் கந்தவனம்.

## 43. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் ஈரம் இல்லாதது கிளைநட்பு அன்று.

அன்பில்லாத உறவு உறவாகாது .அது போல அன்பில்லாத நட்பும் நட்பாகாது.

கந்தவனத்தோடு சேர்ந்து கூலி வேலை செய்பவர் இராமநாதன் . அவரும் மிகுந்த ஏழை . இருப்பினும் ஒழுக்கமானவர். கந்தவனம் இராமநாதன் மீது மிகுந்த அன்பு வைத்திருந்தான். அதுபோல இராமநாதனும் கந்தவனத்தின் மீது அளவில்லாத அன்பு வைத்திருந்தான். இருவரும் சேர்ந்தே உழைப்பார்கள். சேர்ந்தே திரிவார்கள். ஒருவரை விட்டு இன்னொருவர் பிரிய மாட்டார்.கந்தவனம் சுகவீனம் காரணமாக வேலைக்குச் செல்லாவிட்டால் இராமநாதனும் செல்ல மாட்டார். இராமநாதனுக்குச் சுகவீனம் என்றால் கந்தவனமும் செல்ல மாட்டார். இராமநாதன் துடுக்கானவர். பிரச்சனைகளுக்குப் போயும் விடுவார்.ஆரம்பத்தில் மதுவும் குடித்தார். அதைக் கண்ட கந்தவனம் அவரைக் கண்டித்துத் திருத்தினார். கந்தவனம் சில நேரங்களில் இராமநாதனுக்கு அடித்தும் விடுவார்.

அன்று கந்தவனத்தின் திருமண நாள் என்று இராமநாதனுக்குத் தெரியும். அவர் தனது மனைவி பிள்ளைகளை அழைத்துக் கொண்டு முதல் நாளே கந்தவனத்தின் வீட்டுக்கு வந்து விட்டார். இராமநாதன் அன்பின் மிகுதியால் கடன்பட்டு பட்டு வேட்டியும், சால்வையும், சேலையும் வாங்கி வந்திருந்தார். சொன்னாலும் கேட்க மாட்டார் என்று தெரிந்த கந்தவனம் தனது திருமணப் பரிசென்று கூறிப் பட்டு வேட்டி ,சேலை முதலியவற்றோடு தங்கச் சங்கிலி ஒன்றையும் இராமநாதனுக்குப் பரிசாகக் கொடுத்தார், "இராமா, இறைவன் உன்னை எனக்குப் பரிசாகத் தந்துள்ளான், உனது உதவிகள் தான் என்னை வாழ வைத்தது. அன்பில்லாத உறவும் ,நட்பும் உயர்வைத் தராது. உனது அன்பால் தான் நான் உயர்ந்தேன் என்று கண் கலங்கினார் கந்தவனம். அதைக் கேட்ட இராமநாதனுக்கு உணர்ச்சி பொங்கியது. கண்கள் கலங்கின.தொண்டை அடைத்தது.

## 44. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் சோராக் கையன் சொன்மலை அல்லன்

"சோர்வில்லாது உழைக்கும் கைகளைக் கொண்டவன் வெறும் பேச்சுப் பேசுபவனாகவும் , நகராத மலை போன்றவனாகவும் இருக்க மாட்டான்.

ரகுநாதனும் மனைவியும் மகளும் கந்தவனத்தின் திருமண நாளன்று வாழ்த்துக் கூற வந்தனர். கந்தவனத்திற்கு ஆடம்பரம் பிடிக்காது. அவர் தனது மனைவியைப் பெருமைப்படுத்துவதற்காகவே திருமண நாளைக் கொண்டாட ஒப்புக் கொண்டார். வழமையாக இராமநாதனின் குடும்பத்துடனும் தனது சகோதரர்களுடனும் தான் திருமண விழாவைக் கொண்டாடுவார். இம்முறை மேலதிகமாக ரகுநாதனின் குடும்பத்தையும் அழைத்திருந்தார்.

“ஐயா, உழைப்பால் உயர்ந்தவர் நீங்கள். உங்கள் கரங்கள் ஒரு போதும் ஓய்ந்ததில்லை. சலிக்காது முயற்சிப்பவன் மலையையும் அசைத்து விடுவான் என்று பெரியவர்கள் சொல்வார்கள். முயற்சியில்லாதவர்கள் தான் வெற்றுப் பேச்சில் காலம் கழிப்பார்கள். இவர்கள் நகராத மலையைப் போல அசைவின்றி இருப்பர். எனது தந்தையாரும் சலியாது உழைத்தமையால் தான் இந்த நிலையை அடைந்தார். இன்றும் மகிழ்வாகவும் இளமையாகவும் இருக்கும் நீங்கள் பல்லாண்டு காலம் இன்பமாக வாழ வேண்டும்” என்று வாழ்த்தினார் ரகுநாதன்.

## 45. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்
## நேரா நெஞ்சத்தோன் நட்டோன் அல்லன்.

மனம் ஒன்றாமல் பழகுவோர் நல்ல நண்பர்களாக மாட்டார்கள்.

கந்தவனம் எனது உயிர் நண்பன் என்று சொல்லிக் கொள்பவன் ஆறுமுகநாதன். அவன் கந்தவனத்தின் குணத்திற்கு நேர் மாறானவன். மது அருந்துபவன், மது அருந்தினால் கந்தவனத்தைச் சந்திக்க மாட்டான். அதற்குப் போலிக் காரணங்களைச் சொல்வான்.தனது மனைவி ,பிள்ளைகளை அடித்துத் தொந்தரவு செய்வான்.அதனால் கந்தவனம் அவனை உறவினன் என்று நினைப்பாரே தவிர நண்பன் என நினைக்க மாட்டார். காணும் போது முகம் மலர சிரித்துப் பேசுவான். பின் மாறுபாடாக நடந்து கொள்வான். அதனால் அவன் பேசுபவற்றைக் கந்தவனம் காது கொடுத்துக் கேட்பதில்லை. இருப்பினும் வலிய வந்து பழகுபவர்களின் முகம் வாடப் பேசக் கூடாது என்ற நல்லெண்ணத்தால் கந்தவனம் பேசாமல் இருப்பார். அன்று அவன் அவரது திருமண நாள் என்று கேள்விப்பட்டு வந்தான். அவனுக்கு நிறைய உணவு வகைகளும், உடு பிடைவை வகைகளும் பணமும் கொடுத்து அனுப்பினார் கந்தவனம். அவர் அவனுடன் மகிழ்வாகப் பேசவில்லை. அதை அவதானித்த ரகுநாதன் கேட்டார். "யார் இவர்? கந்தவனம் சிரித்து விட்டுச் சொன்னார், "எனது உறவினன். நண்பன் என்று சொல்வான். ஆனால் அன்பில்லை. சூதும் சூழ்ச்சியும் தான் அவனின் மனதை நிரப்பியுள்ளது.அதனால் பொருள் கொடுத்து அனுப்பினேன்"

**46. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**நேராமல் கற்றது கல்வி அன்று.**

மனதில் பதியாமல் எவ்வளவு தான் கற்றாலும் அது கல்வியாகாது.

ஏகாம்பரம் பாடசாலைக்கு வந்த போது அதிபர் சொன்னார், "நாம் எவ்வளவு படிக்கின்றோம் என்பது முக்கியமல்ல. அது போல எதைக் கற்கிறோம் என்பதும் முக்கியமல்ல. கற்றதை நெஞ்சில் நிறுத்தி அதன்படி வாழ்வது தான் கல்வி. நீங்கள் பண்டிதர், கலைப் பட்டதாரி , முது தத்துவமானி, தற்பொழுது கலாநிதித் தேர்வு எழுதியுள்ளீர்கள். இதனால் என்ன பயன். கற்றபடி வாழ்ந்திருந்தால் காவல் துறையினர் உங்களைக் கைது செய்திருப்பார்களா? தீயவன் என்று தெரிந்தும் சுந்தரமூர்த்தியோடு நட்பு வைத்திருக்கிறீர்கள். மது அருந்துகிறீர்கள். இந் நிலையில் நீங்கள் கற்றவர் என்று எப்படிச் சொல்வது.கந்தவனத்தைப் பாருங்கள் அவர் ஐந்தாம் தரம் வரை தான் கற்றவர். கற்றபடி வாழ்கிறார். அதனால் ஊரவர்கள் அவரை மதிக்கிறார்கள். உங்களை ஊரில் உள்ள யார் மதிக்கிறார்கள்? ஓட்டைப் பானைக்குள் விட்ட நீரைப் போன்ற கல்வியால் பயனில்லை.ஆகையால் இனியாவது திருந்தி வாழுங்கள்.உங்களது மாணவர்களும் உங்களைப் பின்பற்றி நடந்தால் என்னவாகும்'' என்று கேட்டார். ஏகாம்பரம் எதுவும் பேசவில்லை

**47. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**வாழாமல் வருத்தியது வருத்தம் அன்று.**

வாழ வேண்டிய காலத்தில் நல்ல முறையில் வாழாதவன் வயோதிபத்தில் வருந்துவதால் பயன் இல்லை”

மனிதன் இளமைக்காலத்தில் வாழும் போது நல்ல முறையில் வாழ வேண்டும். பிறருக்கு உதாரண புரிஷனாக வாழ்ந்து காட்ட வேண்டும். ஒழுக்கமாக வாழ வேண்டும். மற்றவர்களைப் புண்படுத்தாது வாழ வேண்டும்.தான தர்மம் செய்ய வேண்டும். இதை விட்டு விட்டு திமிருடன் வாழக் கூடாது. தீயன செய்து வாழக் கூடாது. நீங்கள் ஓர் ஆசிரியர் .முன் மாதிரியாக நடந்து சமூகத்தைத் திருத்துதல் வேண்டும். கண் கெட்ட பின்பு சூரிய நமஸ்காரம் செய்வது போல உள்ளது உங்கள் நடத்தை. இப்போ மிடுக்கில் எல்லாம் செய்யலாம். வலுவிழந்து வயோதிபனான பின் உங்களால் என்ன செய்ய முடியும் என்று யோசித்துப் பாருங்கள். இந்த ஊரில் பல ஏழை மக்கள் வாழ்கின்றனர். அவர்கள் கல்வியறிவில்லாதவர்கள். இருப்பினும் மனச் சாட்சிக்கும் தெய்வத்திற்கும் பெரியவர்களுக்கும் பயந்தே வாழ்கிறார்கள். ஆனால் பெருங் கல்விமானான நீங்கள் எதற்கும் அஞ்சாது திமிருடன் வாழ்கிறீர்கள். ஆகவே இனியாவது திருந்துங்கள்” என்றார் அதிபர்.

## 48. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் அறத்தாற்றின் ஈயாதது ஈகை அன்று.

அற வழியில் தேடிய பொருட்களைக் கொடுப்பதே கொடை.

கந்தவனத்தின் திருமண நாளன்று காலையில் சிவன் கோவிலில் பூசை நடைபெற்றது. மத்தியானம் மடத்தில் அன்னதானம் வழங்கப்பட்டது.அதன் பின் ஏழை எளியவர்களுக்கு உடு பிடைவைகள் வழங்கப்பட்டது.மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டது. மதிய உணவின் போது ஊரில் உள்ள அனைத்து மக்களும் சாதிபேதம் ,தகுதி ,அந்தஸ்துப் பாராது சம பந்தியில் இருந்து உணவுண்டனர்.

மறுநாள் சுந்தரமூர்த்தி தனது கஷ்டங்கள் நீங்க வேண்டும் என்பதற்காகப் பூசை செய்தான். மதிய வேளையில் எல்லோருக்கும் அன்னதானம் வழங்கப்படும் என்று ஊர் முழுவதும் பிரசாரஞ் செய்வித்தான். மடத்தில் ஆயிரம் பேருக்கு உணவு தயாரிக்கப்பட்டது.

ஆனால் ஒரு சிலரே உணவு உண்பதற்காக வந்திருந்தனர். மடத்தில் நிரந்தரமாகத் தங்கியிருக்கும் பத்துப் பேரில் ஒருவர் கூட உண்பதற்காக வரவில்லை. அவர்கள் அன்று காலையில் புறப்பட்டு ஊரில் உள்ள நல்லவர்களின் வீட்டுக்குச் சென்று விட்டனர். அவர்கள் புறப்படும் போது மடத்துச் சமையற்காரன் கேட்டான், “இன்று பகல் பாயாசம் வடையுடன் சாப்பாடு தயாராகிறது.இருந்து உண்ணாமல் எங்கே செல்கிறீர்கள்?”

“அறவழியில் பொருளைத் தேடி அறவழியில் செலவு செய்பவர்களிடம் தான் இரந்துண்ண வேண்டும். நேற்றுக் கந்தவனம் ஐயாவிடம் வேண்டியுண்டோம் . அதனால்

அவருக்குப் புண்ணியம் கிடைக்கும். எமக்குப் பழி பாவம் சேராது. இன்று அப்படியல்ல தான் செய்த பழியைத் தீர்க்கவே உணவு கொடுக்கப்படுகிறது.அந்தப் பழி எமக்கு வேண்டாம்” என்றார் ஒரு முதியவர்

**49. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**திறத்தாற்றின் நோலாதது நோன்பு அன்று.**

ஒவ்வொருவரினதும் இயல்புக்கேற்றதே கொடை.

“உண்மை தான் ஐயா, மனம் விரும்பிக் கொடுப்பது தான் கொடை. இங்குள்ள பலர் புகழுக்காகவும்,தாம் செய்த பாவங்கள் தீர வேண்டும் என்பதற்காகவும் கொடுக்கிறார்கள். நோன்பு நோற்பவன் தூய்மையான எண்ணங்களை உடையவனாகவும் ,கடவுளை முழுமையாக அறிந்தவனாகவும், கடவுளின் நினைவாக எந்நேரமும் இருப்பவனாகவும், பிரியமானவற்றைப் பெற்ற போதும் ஆணவமில்லாதவனாகவும் ,துன்பம் வந்த போது மனங் குழம்பி அதற்குக் காரணம் தெய்வம் என்று கலங்கி அதற்குப் பிராயச் சித்தமாக அன்னதானம், அபிஷேகம், அர்ச்சனை என்பன செய்யாதவனாகவும் இருத்தல் வேண்டும். நாளைக்கு ஏகாம்பரம் ஆசிரியர் காவடி எடுக்கப் போகிறாராம். நூறு பேருக்கு சமைக்கச் சொல்லி பொருட்களைக் கொண்டு வந்து தந்து விட்டுப் போகிறார். மனம் சுத்தமாக இருந்தால் மந்திரம் சொல்லத் தேவையில்லை என்று சொல்வார்கள்.எதற்கும் தகுதியானவன் தான் அதைச் செய்தல் வேண்டும். தகுதியில்லாதவர்கள் செய்யக்

கூடாது.பெரியவர் கந்தவனம் முன்பு கூலி வேலை செய்யும் போது தினமும் ஒரு பிடி அரிசி மடத்திற்கு தருவார். இப்போ மூட்டை மூட்டையாகத் தருகிறார்” என்றான் சமையல்காரன்.

“தம்பி இன்று விநாயகர் சதுர்த்தி. வழக்கமாக நான் விநாயகர் சதுர்த்தியன்று உணவு உண்பதில்லை. இப்போ இயலாது. தலை சுற்றுகிறது. அதனால் மத்தியானமும் இரவும் எனக்கு உணவு தா. தன்னால் முடியாத நோன்பை நோக்கக் கூடாதென்று பெரியவர்கள் சொல்வார்கள். மனிதனின் இயல்புக்கும் தகுதிக்கும் உட்பட்டவை தான் தவமும் நோன்பும்” என்றார் அந்த முதியவர்.

## 50. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் மறுபிறபபு அறியாதது மூப்பு அன்று

“மறுபிறப்பு உண்டென்பதை ஒருவர் தனது முதுமைக்காலத்தில் உணர்ந்து வாழாவிட்டால் முதுமை சிறப்படையாது.’’

தொடர்ந்து அந்தப் பெரியவர் சொன்னார், “துன்பங்கள் எவ்வளவு தான் வந்தாலும் சிலர் திருந்துவதாக இல்லை.அவற்றிற்குப் பரிகாரமாக ஏதாவது செய்து விட்டு மீண்டும் தீய செயல்களையே செய்கிறார்கள். பூமிக்குப் பருவ காலங்கள் வருவது போல மனிதனுக்கும் பருவ காலங்கள் வரும். இளமைப் பருவத்தில் செய்ய வேண்டியவை எவை,முதுமைப்பருவத்தில் செய்ய வேண்டியவை எவையென்று

பெரியவர்கள் வகுத்து வைத்துள்ளனர். இளமைப் பருவத்தில் அறிந்தோ அறியாமலோ செய்த தீமைகளுக்கு முதுமையில் பரிகாரம் தேடுதல் வேண்டும்.இளமைக் காலம் இரத்தத் துடிப்பான காலம். அதில் நன்மை தீமைகளை உணராது நடந்தவர்கள் முதுமையில் அவற்றை உணர்ந்து அதற்குத் தீர்வு காண வேண்டும். இல்லாவிட்டால் மறு பிறவியில் பெரும் துன்பங்களை அனுபவிக்க வேண்டி வரும்.முதுமைப் பருவத்தில் தீவினைகளை நீக்கி சந்தேகத்தை அகற்றி எல்லா உயிர்களையும் சமமாக மதித்து அவற்றிற்குத் துன்பம் செய்யாது வாழ்ந்தால் தான் மறுமை சிறக்கும். முதுமையில் விருப்பு வெறுப்புக்களிலிருந்து விடுபட்டு, மனதை அடக்கி கடவுளைப் பிரார்த்தித்தல் வேண்டும்.இதைப் பலர் உணர்வதில்லை" என்று பெருமூச்சு விட்டார் அந்தப் பெரியவர்.

**இல்லை பத்து.**

**51. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்
மக்கள் பேற்றின் பெறும்பேறு இல்லை.**

"பூமியில் வாழும் மக்கள் எல்லோரும் அறிவறிந்த மக்களைப் பெறுவதைவிடப் பெற வேண்டிய பெரும் பேறு வேறு எதுவுமில்லை"

“நான் பெரும்பாவி.இளமையில் வசதியாக இருக்கும் போது கடவுளை நினைக்கவில்லை.தான தர்மத்தில் நம்பிக்கை கொள்ளவில்லை. குடும்பத்தினருடனும் உறவினருடனும் நல்ல முறையில் பழகவில்லை. அதனால் மனைவியும் பிள்ளைகளும் வெறுத்தனர். இனத்தவர்களுக்கு என்னைப் பிடிப்பதில்லை. குடும்பத்தைக் கவனிக்காதால் பிள்ளைகள் ஒழுக்கம் தவறினர். மேன்மையான குடும்பத்தனாக வேண்டுமென்றால் பிள்ளைகளை ஒழுக்கமாக வளர்த்தல் வேண்டும். நான் அப்படி வளர்க்காததால் இன்று மடத்தை நம்பி வாழ்கிறேன். நன் மக்களைப் பெற்ற கந்தவனம் குபேரனாக வாழ்வதோடு பிறரையும் வாழ்விக்கிறார். அவரின் கொடையால் தான் நான் உயிர் வாழ்கிறேன்.நல்ல மக்களைப் பெறுதல் நல் வாழ்விற்கு அடையாளம்” என்று கலங்கினார் அந்த முதியவர். அவரின் கதையைக் கேட்க சமையல்காரனுக்குத் துக்கமாக இருந்தது.

## 52. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்
## ஒப்புரவு அறிதலின் தகுவரவு இல்லை.

“உலக நடைமுறைகளின் படித் தமது கடமைகளைச் செய்வதால் வரும் புகழ் வேறு எதிலும் வராது”

“உலக நடைமுறைப்படி நான் எனது இளமைக்காலத்தில் வாழவில்லை.பொய்யும் புரட்டும் களவும் செய்தே வாழ்ந்தேன்.அவை செய்யும் போது பேரின்பத்தைத் தந்தன.

ஒருமுறை சிவன் கோவில் தேர் அன்று குடித்து விட்டு மடத்திற்குச் சாப்பிட வந்து சபையில் சாப்பிட்டுக் கொண்டிருந்த ஒருவனுக்கு அடித்தமையால் சபையே குழம்பியது. அந்த நேரம் அது பெருமையாக இருந்தது. இப்போ நினைத்தால் நெஞ்சு வலிக்கிறது.கந்தவனம் அண்ணை என்னைத் திருத்த முயன்றவர்.அவர் சொன்னதை நான் கேட்டிருந்தால் அவரைப் போலப் புகழுடன் வாழ்ந்திருப்பேன். சாதாரண ஒரு கூலித் தொழிலாளி உலக நடைமுறையின் படி வாழ்ந்தால் குபேரனைப் போலப் பேரும் புகழுடனும் வாழலாம் என்பதற்குக் கந்தவனம் அண்ணை உதாரணம்.அவரைப் பின்பற்றி வாழும்படி தற்போதைய இளைஞர்களுக்குக் கூறவேண்டும்" என்று கலங்கினார் அப் பெரியவர்.

**53. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**வாய்ப்புடை விழைச்சின் நல்விழைச்சு இல்லை.**

"தமக்கென்று உரிமையுடையவரோடு கூடி மகிழும் இன்பத்திற்கு இணையான இன்பம் இவ்வுலகில் எதுவும் இல்லை"

"தனக்கென்று உரிமையுள்ளவர்களோடு கூடி அனுபவிப்பது தான் உயர்ந்த இன்பம். பல்வேறுபட்ட விலை மகள்மாருடன் கூடி இன்பம் அனுபவிப்பதை விடத் தன் மனைவியோடு கூடி அனுபவிப்பது தான் பெரும் இன்பம். அது போலத் தமக்கு உரிமையுள்ள பிள்ளைகளுடன் கூடி மகிழ்வதும் பேரின்பம். இவை எதுவும் எனக்கு இல்லை.எனது உயிர் நண்பனான

கந்தவனத்துடன் சிறிது நேரம் மனம் விட்டுப் பேசுவது தான் இப்போது எனக்குள்ள இன்பம்.அவருக்கு நேரங் கிடையாது. அவரது திருமண நினைவு நாளன்று சென்று சில நிமிடங்கள் பேசி மகிழ்ந்தேன். கவலை உண்டாகும் போது அதை நினைக்க இன்பமாக உள்ளது"என்று கண்களை மூடினார் அப் பெரியவர். கன்னங்களால் கண்ணீர் வழிந்து ஓடியது.அதைப் பார்க்கச் சமையற்காரருக்கு வேதனையாக இருந்தது. "இளமைக்காலத்தைத் தீய வழியில் கழித்து விட்டீர்கள். அதை முதுமையில் உணர்ந்து திருந்தி நடக்கிறீர்கள். உங்களின் மறுமை சிறப்பானதாக இருக்கும்" என்றான் சமையற்காரன். பெரியவர் விரக்தியாகச் சிரித்தார்.

## 54. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் வாயா விழைச்சின் தீ விழைச்சு இல்லை.

"தனக்கு உரிமை இல்லாதவருடன் உரிமையுடன் மகிழ்ந்து பேசினாலும் அது துன்பத்தைத் தான் தரும்"

"உரிமை என்று சொல்லப்படும் அன்பு ,இரக்கம்,கருணை என்பன உள்ளவனுடன் தான் பேசுதல் வேண்டும். நீ இம்மடத்தில் பத்து வருடங்களாக வேலை செய்கிறாய். நீ நல்லவன், ஒழுக்கமானவன், இங்கு தங்கி வாழும் முதியவர்களை உனது தந்தையைப் போலப் பேணுகிறாய். அதனால் தான் உனது குடும்பம் சிறப்பாக வாழ்கிறது. நீ

என்னுடன் பழகும் அன்பினால் தான் நான் உன் மீது உரிமை கொண்டு எனது துயரங்களைக் கூறுகிறேன். அதனால் எனது சுமை குறைகிறது. இளமைக்காலத்தில் சுந்தரமூர்த்தி எனது நண்பன். அவன் எனது உரிமையாளன் என்று நினைத்துப் பழகியமையால் தான் எனது குடும்பம் சீர் கெட்டு அழிந்தது.இப்போது எனது மகன் தான் சுந்தரமூர்த்தியின் கையாள். எனது மகனை நான் பிழை சொல்ல மாட்டேன்.ஏனென்றால் எனக்கென்று உரிமை இல்லாதவனை உரிமையாளன் என்று நான் எனது மகனுக்குக் கூறியதால் தான் சுந்தரமூர்த்தியை நம்பிக் கெட்டான். இப்போ அவனை விட்டு நீங்க முடியாது கஷ்டப்படுகிறான்'' அழுதார் அந்த முதியவர்

## 55. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் இயல்வது கரத்தலின் கொடுமை இல்லை.

“கொடுக்கக் கூடிய ஒரு பொருளைக் கூடக் கொடுத்துதவாத தன்மை, எல்லாத் தீமைகளையும் விடக் கொடிய தீமையாகும்.

“சுந்தரமூர்த்தியிடம் ஒரு பொருளைக் கொடுத்தால் அதைத் திரும்பப் பெறவே முடியாது. அப்படியிருக்க அவன் தனது பொருளைக் கொடுப்பானா என்ன?அந்த வருடம் ஆடி மாதம் மழை,பெய்ததும் விவசாயிகள் எல்லோரும் வயலை விதைப்பதற்காக உழுதனர். சுந்தரமூர்த்தியிடம் மூன்று சோடி உழவு மாடுகள் நின்றன. அவன் வயலை உழுது விதைத்து

விட்டான். நான் எனது வயலை உழுது விட்டேன். வயலை உழுது தந்தவனின் உழவு மாடொன்றை பாம்பு தீண்டி விட்டது.அதனால் சுந்தரமூர்த்தியிடம் வயலை உழுது விதைக்க உழவு மாட்டைக் கேட்டேன். அவன் தர மறுத்து விட்டான். பல முறை கெஞ்சிக் கேட்டும் அவன் உதவவில்லை. எனது நிலையைக் கண்டு பரிதாபப்பட்ட கந்தவனம் அண்ணை தான் நான் கேட்காமலே உழுது விதைத்துத் தந்தார்.அதன் பிறகு தான் நான் சுந்தரமூர்த்தியின் உறவைக் கைவிட்டேன் .செய்யக் கூடியவற்றையே செய்து தர மறுப்பவனின் உறவு உயிருக்கும் ஆபத்தைத் தரும் என்று நினைத்து அவனது உறவைத் துண்டித்தேன். அதனால் தான் நான் அவன் மடத்தில் உணவு கொடுத்த போது உண்ணவில்லை" என்றார் அப் பெரியவர்.

**56. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**உணர்விலன் ஆதலின் சாக்காடு இல்லை.**

"மனிதர்களுக்கு இயல்பாகவே இருக்கும் நல்ல பண்புகள் இல்லாதவன் நடமாடும் பிணத்தை ஒத்தவனாவான்.

"சுந்தரமூர்த்திக்கு மனிதக் குணங்கள் எதுவும் இல்லை. அவன் கோவிலில் நடந்து கொள்ளும் முறை மிருகத் தனமானது. கோவிலுக்குப் பிரசாதம் செய்யக் குருக்கள் கூறும் அளவிற்குக் குறைவாகவே பொருட்களைக் கொண்டு வந்து தருவான். பூசை

முடிந்த பின் பக்தர்களுக்குக் கொடுக்கப் பிரசாதமிராது. அவன் நாம் எடுத்து ஒளித்து விட்டோம் என்று சண்டைக்கு வருவான். இவன் பலரின் முன்னிலையில் எம்மை அவமானப்படுத்தச் சிலர் அதை உண்மையென்று நம்பி விடுவர். அதனால் இவனது பூசையன்று சமையல் வேலை செய்யும் நாம் பொருட்களை வாங்கிப் பிரசாதம் செய்து குருக்களிடம் கொடுப்போம். அப்போ அவன் சொல்வான், "நான் ஏசுவேன் என்று பயந்து தான் இம்முறை பொருட்களை மறையாது நான் கொடுத்த முழுப் பொருட்களுக்கும் பிரசாதம் செய்திருக்கிறார்கள்" என்பான், அதனாலும் எமக்கு அவமானம் ஏற்படும். இவன் மனித உருவில் நடமாடும் உணர்ச்சிகள் இல்லாத பிணம்" என்றான் சமையற்காரன்.

**57. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**நசையின் பெரியதோர் நல்குரவு இல்லை.**

"தீமையைத் தருகின்ற பேராசை தான் தனவந்தர்களின் தீராத வறுமை"

சுந்தரமூர்த்தியிடம் ஏராளமான சொத்திருக்கு, பணம் இருக்கு, பொருள் இருக்கு, தங்க ஆபரணங்கள் இருக்கு, பிறகேன் பேராசைப்பட்டு மானத்தை இழக்கிறான். பூபாலனின் வீட்டில் ஏராளமான தங்க ஆபரணங்கள் திருடப்பட்டன. பூபாலனுக்குச் சுந்தரமூர்த்தி மீது சந்தேகமிருந்தது. அதை அவன் இரகசியமாகக் காவல் துறைக்கு அறிவித்தான்.

யாரிடமிருந்தாவது புகார் வராதா எனக் காத்திருந்த காவல் துறையினர் சுந்தரமூர்த்தியின் வீட்டைச் சோதனை செய்து அங்கிருந்து பொருட்களை மீட்டதோடு சுந்தரமூர்த்தியையும் கைது செய்து சிறையில் அடைத்தனர். அதன் பின்பும் மானங் கெட்டவன் உயிர் வாழ்கிறான்.நானென்டால் நஞ்சு குடிச்சுச் செத்திருப்பன்" என்றான் சமையற்காரன்.

"மகனே, பேராசை கொடியது.பேராசைப்பட்டவன் தான் நினைத்ததை அடையத் தீய வழியை நாடி அவமானப்படுவானே தவிர மானம் போவதைப் பற்றிச் சிந்திக்க மாட்டான். இப்படியானவர்கள் வறியவர்களை விட வறியவர்கள்" என்றார் அந்த முதியவர்.

## 58. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் இசையின் பெரியதோர் எச்சம் இல்லை.

"வாழ்க்கையின் இறுதியில் எஞ்சியிருப்பது புகழ் மட்டும் தான்"

"ஓடுறம், உலாவுறம், உழைக்கிறம் .அதனால் நல்ல படி வாழ்வது எத்தனை பேர். மனிதனின் மனம் எப்போதும் நல்லவற்றையே சிந்திக்க வேண்டும். இந்தக் கிராமத்தில் பிறந்திறந்தவர்கள் எத்தனை இலட்சம் பேர். இதில் வாழ்பவர் யார். நூற்றியம்பது வருடங்களுக்கு முன் வாழ்ந்த கந்தர் வைத்திலிங்கம் என்பவர் தனது நிலத்தில் இந்தச் சிவன் கோவிலையும் கட்டி ,அருகில் இந்தப் பெரிய பாடசாலையையும் கட்டி விட்டார். இங்கு வாழும் சிறு

குழந்தை கூட அவரின் பெயரைச் சொல்லும் .சுந்தரமூர்த்தி போன்றவர்களின் தாயின் பெயரே மக்களில் அனேகருக்குத் தெரியாது.ஒரு செயலைச் செய்வதாக இருந்தால் புகழ் வரும்படியாகச் செய்தல் வேண்டும் இல்லாவிட்டால் செய்யக் கூடாது. ஏனென்றால் புகழ் தான் ஏழேழு பிறவிக்குப் பின்பும் நிலைத்து நிற்கும்" என்றார் அந்தப் பெரியவர்

## 59. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் இரத்தலின் ஊஉங்கு இளி வரவு இல்லை.

"தனது தகுதியை மறந்து இழிந்தவர்களிடம் இரந்து உண்பதைப் போன்ற இழிந்த நிலை வேறு எதிலும் இல்லை"

"ஒரு காலத்தில் நான் மனிதனல்ல,நல்ல சிந்தனைகளுடன் இடையறாது முயற்சித்தால் தனவந்தனாகிப் பிறர்க்கு உதவி செய்யலாம் என்று எமக்கு முன் வாழ்ந்து காட்டிக் கொண்டிருந்த கந்தவனத்தைப் பற்றிச் சிந்திக்காது எனது தகுதியை மறந்து இழிந்தவனான சுந்தரமூர்த்தியிடம் இரந்துண்டேன். அவன் குடித்து விட்டு வைத்த எச்சில் மதுவைக் குடித்தேன். அதை இப்போ நினைத்தாலும் என் இடையில் கட்டிய வேட்டி அவிழ்ந்து நிலத்தில் வீழ்ந்து விட்டதைப் போல இருக்கிறது. அதனால் தான் அன்று சுந்தரமூர்த்தி மடத்தில் உணவு கொடுத்த போது உண்ணாது விட்டேன்.நேற்று அவன் கண்டு, "என்ன எச்சில் சோற்றை உண்டு வாழ்ந்த உனக்கு இப்போ ரோசம் வந்து விட்டதோ?

அப்ப ஏன் மடத்தில் இருக்கிறாய்.பிள்ளைகளோடு போய் இரு" என்றான். அதன் பின் எனது மனம் வேதனையால் துடிதுடிக்கிறது" என்று அழுதார் அந்தப் பெரியவர்.

**60. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**இரப்போர்க்கு ஈதலின் எய்தும் சிறப்பு இல்லை.**

"இரப்பவர்களுக்கு உதவுவதை விடச் சிறந்த குணம் வேறு எதுவும் இல்லை"

"கடல் சூழ்ந்த இந்த உலகத்தில் எல்லோராலும் இரக்காமல் வாழ முடியாது. தன்னைத் தான் கட்டுப்படுத்தாதவன் முயற்சியில்லாதவன் , சோம்பேறி ,வயோதிபன் என்போரில் சிலர் இரந்துண்ணத் தான் வேண்டும்.தம் கண்களைப் போல இரப்பவர்களை மதித்துப் பொருள் கொடுப்போரிடமும் இரத்தல் கூடாது என்று பெரியவர்கள் கூறியுள்ளனர். எனினும் என் போன்றவர் இரக்கத் தான் செய்கிறார்கள். கந்தவனம் இரப்போர் வீடு தேடி வந்து இரப்பது கூடாது என்று நினைத்து இந்த மடத்தைக் கட்டித் தினமும் மூன்று வேளையும் ஏழைகளுக்கு உணவளிக்கிறார். அவர் போன்ற நல்லவர்கள் இல்லாது போனால் எம் போன்றவரின் பசித் தீயை அணைப்பது யார்? கடவுள் தான் கந்தவனம் போன்ற நல்லவர்களைப் படைத்துள்ளார். இரப்பவர்களுக்கு இரங்கிக் கொடுப்பதை விடச் சிறந்த குணம் எதுவும் உலகில் இல்லை என்று பெரியவர்கள்

கூறியிருக்கிறார்கள். அதை நினைத்து ஆறுதல் அடைதல் வேண்டும்'' என்றார் அப் பெரியவர்.

**பொய்ப் பத்து**

**61. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**பேர் அறிவி னோன் இனிது வாழாமை பொய்**

"இந்த உலகில் பெருமைக்குரிய கல்வியைப் பெற்றவர்கள் இன்பமாக வாழ முடியாது என்பது தவறான கருத்தாகும்.

"இந்த ஊரில் படித்தவர்களை விடப் படியாதவர்கள் தான் வசதியாகவும் இன்பமாகவும் வாழ்கின்றனர். நன்றாகப் படித்தேன். உத்தியோகம் கிடைக்கவில்லை.என்னிலும் பார்க்கப் படிக்க முடியாத பலர் ஆசிரியராக இருக்கின்றனர். நான் சமைப்பதற்காகவா இக் கல்வியைக் கற்றேன்." என்று துயரப்பட்டான் சமையற்காரன்.

"கல்விக்கும், பொருளுக்கும், அறிவிற்கும் ,இன்பத்திற்கும் தொடர்பில்லை. படித்த பலர் பணத்தைத் தேடி அனுபவிக்காது வைத்துள்ளனர். அறிவுள்ளவன் சோம்பேறியாக இருக்கிறான். தனவந்தன் கொடுத்துதவாதவனாக இருக்கிறான். அளவுக்கதிகமான பொருளால் என்ன நன்மை உண்டு. எமது தேவைகளைப் பூர்த்தி செய்யும். அறிவாலும் பணத்தாலுமே இன்பத்தை அனுபவிக்க முடியும். ஏகாம்பரம் தனவந்தன். அறிவாளி. அது போலச் சுந்தரமூர்த்தியும் தனவந்தன்.

அறிவாளி, அவர்களுக்கு அறிவும் பணமும் பயன்பட்டு இன்பத்தைக் கொடுக்கிறதா? நீ துயரப்பட்டாய். உனது பிள்ளைகள் மூவரும் மிக உயர்ந்த படிப்பாளிகள். மூத்த மகள் அடுத்த வருடம் வைத்தியராகி விடுவாள்.மகன் பொறியியலாளராகி விடுவான். பிறகென்ன குறை. உனது வேதனம் உனக்குப் போதும் தானே. உனக்கு வயல், தோப்புக்கள் உண்டு. பிறகேன் கவலைப்படுகிறாய். பொன்னம்பலம், தேவராசா, ஆரூரன் ,நீ எல்லோரும் அறிவுள்ளவர்கள் .இன்பமாக வாழவில்லையா? மனம் திறந்து உண்மையைச் சொல்" என்றார் அப் பெரியவர். சமையற்காரன் சிரித்தான்.

**62. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**பெருஞ்சீரோன் தன் வெகுளி இன்மை பொய்.**

"தகுதிக்கு மீறிய அளவில்லாத பொருட் செல்வம் உடையவர்களிடம் சினம் இருக்காது என்பது பொய்யான நம்பிக்கையாகும்.

"மடத்திற்கு வரும் பெரியவர்கள் பெருந் தனவந்தர்கள்.கோபப் பட மாட்டார்கள். அவர்களிடம் அன்பு கருணை இரக்கம் எல்லாம் ஒன்று சேர்ந்திருக்கும் என்பார்கள். அதற்கு உதாரணமாக கந்தவனம் ஐயா, பொன்னம்பலம் ஐயா, தேவராசா ஐயா ஆகியோரின் பெயர்களைக் கூறுவார்கள். நானும் அதை நம்பியிருந்தேன். ஆனால் சுந்தரமூர்த்தியும்

பெரும் தனவந்தன். அவனிடம் அவர்கள் கூறிய நல்ல குணங்கள் எதுவுமில்லை. அவன் கோவிலுக்கு வந்தால் குருக்கள் பயந்து நடு நடுங்குவார். மடத்திற்கு வந்தால் நாம் பயப்படுவோம்.கதைப்பது சினத்துடன் நாம் ஏதாவது பதில் சொன்னாலும் அடிக்க வருவான். பெரும் தனவந்தர் சிலர் அவர் கூறியபடி வாழ்கின்றனர். ஆனால் பலர் கோபங் கொண்டு வார்த்தைகளாலே எம்மைக் கொல்கின்றனர்" என்றான் சமையற்காரன்.

"தனவந்தர்களின் பண்பு பணத்தைப் பொறுத்ததல்ல. அவர்கள் பிறந்த குடியைப் பொறுத்தது"என்றார் பெரியவர்

**63. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**கள்உண்போன் சோர்வின்மை பொய்.**

"கள் அருந்துபவன் சோர்வில்லாமல் கடுமையாக உழைப்பான் என்பது பொய்யானதாகும்."

"பெரியவர்கள் சொல்வது தான் உண்மை. கற்றவனே உலகில் உயர்ந்தவன். கள்ளருந்துபவன் இழிந்தவன் என்றார்கள். ஆனால் ஊரில் உள்ளவர்கள் கற்றவனுக்கப் பிழைக்கத் தெரியாது என்றும், கள்ளுக் குடிப்பவன் தான் உற்சாகமாக வேலை செய்வான் என்று சொன்னதை நம்பி நான் கள்ளைக் குடித்து விட்டு வேலை செய்தேன்.உண்மையில் உற்சாகமாகத் தான் இருந்தது.

அதனால் தினமும் நிறையக் கள்ளைக் குடித்தேன். அதன் பின் வேலை செய்ய முடியவில்லை.மயக்கம் தான் வந்தது. அதனால் வேலை செய்ய முடியவில்லை. பழக்கம் பொல்லாதது என்பார்கள். கள்ளுக்கு அடிமைப்பட்ட நான் உழைப்பது முழுவதையும் கள்ளைக் குடித்து அழித்தேன். அத்துடன் வீட்டில் வாங்கி வைத்திருந்துக் குடித்தேன். அதனால் பிள்ளைகளும் குடிக்கப் பழகி விட்டார்கள். கள் உற்சாகமளிக்கும் என்பது பொய்" என்றார் அப் பெரியவர்.

**64. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**காலம் அறியாதோன் கையுறல் பொய்.**

"காலம் அறிந்து செயலைச் செய்யாதவனின் கருமம் வெற்றி பெறும் என்பது பொய்"

"காலம் அறிந்து தான் நாம் எதையும் செய்தல் வேண்டும். தாராண்மை உள்ள கோடீஸ்வரரானாலும் அவரது மன நிலை குழம்பியிருக்கும் போது உண்ண உணவு கேட்டால் கூடக் கிடைக்காது . இருபது வருடங்களாக இம் மடத்தில் வேலை செய்கிறேன். யார் யாரை எப்படி அணுக வேண்டும் என்று எனக்குத் தெரியும். யாரை எப்படி அணுகினாலும் ஒரு சதம் கூட ஈய மாட்டார்கள் என்றும் தெரியும். யாரைச் சந்தித்தால் எதுவும் கேளாது முகக் குறிப்பை அறிந்து உதவுவார் என்பதும் தெரியும். அதனால் தான் எனது வாழ்வும் சிறப்புப் பெற்றது. எனது உதவியாளன் காலம் அறிந்து

நடவாமையால் தான் துன்பப்படுகிறனான்.சென்ற வாரம் கந்தவனம் ஐயா மடத்திச்றகு வந்தவர். நான் இம்முறை வயலை உழ முடியவில்லை. உழவு இயந்திரம் வைத்திருக்கும் கதிரமலைக்குச் சுந்தரமூர்த்தி எனது வயலை உழுது கொடுக்கக் கூடாதென்று சொல்லி விட்டான்.வந்த கந்தவனம் ஐயா, "கதிரமலையிடம் தானா உழவு இயந்திரம் உள்ளது.எனது உழவு இயந்திரத்தை கொண்டு சென்ற உழு. நான் சாரதிக்குச் சொல்கிறேன்.பருவத்தில் பயிர் செய்ய வேண்டும்.பிந்தினாலோ, முந்தினாலோ விளைச்சல் பாதிக்கப்படும்" என்றார். அவர் எதையும் உரிய காலத்தில் தவறாது செய்பவர். அதனால் தான் இந்த நிலையை அடைந்தார். உழவு இயந்திரம் வைத்திருக்கும் கதிரமலை இன்னும் உழவில்லை. அவன் கூலிக்கு உழுது திரிகிறான். இப்போ அடை மழை தொடங்கி விட்டது. இனி இயந்திரத்தை வயலில் இறக்க முடியாது. அதுபோல நீ அந்தந்தக் காலத்தில் அந்தந்த வேலைகளைச் செய்யாமையால் தான் கஷ்டப்படுகிறாய். உரிய பருவத்தில் செய்யாத கருமம் வெற்றியைத் தராது" என்றான் சமையற்காரன்.

**65. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**மேல்வரவு அறியாதோன் தற்காத்தல் பொய்.**

"வாழுங் காலத்தில் வரும் பொருளைப், போல எதிர்காலத்திலும் பொருள் வரும் என நினைத்து வந்த

பொருளைச் சேமிக்காது விடுபவன் பிற்காலத்தில் தன்னைத் தான் காத்துக் கொள்ளலாம் என நினைப்பது பொய்”

“நான் உழைக்கும் காலத்தில் சேமித்து வைத்தேன். அத்துடன் ஒரு வருடம் வரும் வருமானம் சிலசமயம் அடுத்த வருடம் வராது. நாம் கமக்காரர் . மழை அதிகமாகப் பெய்தாலும் நட்டம் வரும். பெய்யாமல் விட்டாலும் நட்டம் வரும். அதனால் இப்போது வரும் வருமானம் எப்போதும் வரும் என்று நினைத்துச் சேமிக்காது இருக்கக் கூடாது.நட்டம் ஏற்படும் காலங்களிலும், முதுமைக் காலங்களிலும் சேமிப்புத் தான் உதவி செய்யும். நான் அதை உணர்ந்து சேமித்ததால் கஷ்டமில்லாமல் வாழ்கிறேன். நீ நிகழ்கால வருமானம் எதிர்காலத்திலும் வரும் என்று சேமிக்காது வாழ்ந்ததால் கஷ்டப்படுகிறாய்” என்றான் சமையல்காரன்.

“உண்மை தான், நோய், முதுமை என்பவற்றிற்காகச் சேமிக்க வேண்டுமென்றில்லை. இன்று போல என்றும் வருமானம் வரும் என்று நினைத்து சேமிக்காது விட்டது தான் தவறு என்று இப்போது தான் தெரிகிறது” என்றார் அந்தப் பெரியவர்.

**66. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**உறுவினை காய்வோன் உயர்வு வேண்டல் பொய்.**

“கையில் கிடைக்கும் வேலையை வெறுத்து ஒதுக்கி விட்டு மனதிற்குப் பிடித்தமான வேலை கிடைக்குமென்று நினைத்திருப்பது தவறு”

“என்னை எல்லோரும் சமையல் வேலையை ஏன் செய்கிறாய்? உனது படிப்பிற்கு நல்ல வேலை கிடைக்கும் பொறுத்திரு என்றார்கள். பொறுத்திருக்கக் கூடிய நிலையில் குடும்பம் இல்லை. அதனால் சந்தோஷத்துடன் சேர்ந்தேன். அதன் பின்பு எனக்கு வேலைகள் எதுவும் கிடைக்கவில்லை. கோவில் வேலை, பலருக்கு உணவளிக்கும் புனிதமான தொழில் என்று நினைத்து அர்ப்பணிப்புடன் வேலை செய்தேன். பல பெரிய மனிதர்களின் நட்பு ஏற்பட்டது. கடவுளின் அருளும் கிடைத்தது. அதனால் திருமண வீடு போன்ற வைபவங்களுக்குச் சென்று சமைத்தேன்.ஒரு வைபவத்திற்குப் பதினையாயிரம் இருபதினாயிரம் ரூபா கிடைத்தது.பெரியதொரு அரசாங்க உத்தியோகத்தர் மாதா மாதம் பெறும் சம்பளத்திலும் பார்க்க நான் அதிகமாகச் சம்பாதிக்கிறேன். எனது சகோதரன் பட்டணத்தில் ஒரு சாப்பாட்டுக் கடை வைத்திருக்கிறான். அதற்கும் உணவு வகைகள் தயாரித்துக் கொடுக்கிறேன். இதை விட்டு விட்டுப் பெரிய உத்தியோகம் வருமென்று காத்திருந்தால் இவ்வளவு தூரம் முன்னேறியிருக்க முடியாது. அத்துடன் வேலையும் கிடைத்திராது. சிறிய சமையல் வேலை இன்று பெரும் பணத்தைக் கொடுக்கிறது.”என்று சிரித்தான் சமையற்காரன்

## 67. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்
## சிறுமை நோனாதோன் பெருமை வேண்டல் பொய்.

"பழிகள் வந்தால் அதைத் தாங்கும் மன வலிமை இல்லாதவன் பெருமை பெற விரும்புவது பொய்யான செயலாகும்.

"ஒரு வேலை செய்யும் போது குறை நிறைகள் வரும். பழி வரும். அதைத் தாங்கிக் கொள்ளல் வேண்டும். நான் சமையல் வேலை செய்வது எனது குடும்பத்தில் பலருக்குப் பிடிக்கவில்லை. முக்கியமாக எனது மாமாவிற்குப் பிடிக்கவில்லை. சமைப்பதை அவர் மிக மிகக் கேவலமாகக் கருதினர். அவரது மகள் காவேரியை எனக்குத் திருமணம் செய்து வைப்பதாக இரு குடும்பத்தினரும் விரும்பி இருந்தனர். மாமாவும் காவேரியும் என்னைச் சமையல் வேலை செய்ய வேண்டாம் என்றும், அதை விடாவிட்டால் காவேரியைத் திருமணம் செய்து தர மாட்டேன் என்றும் மாமா கூறினார். அதைக் காவேரியும் ஆமோதித்தாள். மாமா மிகவும் வறியவர். வறியவர்கள் மானத்தை விடப் பயப்பட வேண்டுமே தவிரத் தொழிலை விடக் கூடாது என்று கந்தவனம் அண்ணை சொல்வார் அவர்,"வீட்டுக்கு வீடு கூலி வேலை செய்தே நான் பிழைக்கிறேன். எல்லாத் தொழிலும் நல்ல தொழில். ஒழுக்கக் கேடான தொழில் செய்வது தான் கூடாது" என்றார். நான் எனது மனைவியை விரும்பித் தான் திருமணம் செய்தேன். அவள் என்னை உயிராக நேசித்ததோடு எனது வேலைகளுக்கும் உதவியாக

இருந்தாள். இப்போ பட்டணத்துச் சாப்பாட்டுக் கடை அவளது பொறுப்பில் தான் உள்ளது. மாதா மாதம் ஐம்பதினாயிரம் ரூபா இலாபமாகக் கிடைக்கிறது. காவேரியின் கணவன் குடிகாரன். அதனால் அவள் தோட்டங்களில் கூலி வேலை செய்கிறாள். இப்போ அவளுக்கும் நான் தான் உதவி செய்கிறேன்” என்றான் சமையல்காரன்.

## 68. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் பெருமை நோனாதான் சிறுமை வேண்டல் பொய்.

மற்றவர்களின் உயர்வைத் தாங்கிக் கொள்ள முடியாதவன், தனக்கு வரும் கேட்டைத் தாங்கிக் கொள்வான் என்பது பொய்.

“மற்றவர்களுக்கு வரும் உயர்வைத் தாங்கிக் கொள்ளாதவன், தனக்குக் கேடு வந்தால் அதைத் தாங்கிக் கொள்ள முடியாது பொறாமையால் துடிதுடிப்பான் என்பதற்கு எனது மாமாவும் சுந்தரமூர்த்தியும் நல்ல உதாரண புருஷர்களாவர். நான் காணி வாங்கி வீடு கட்டினேன். மாமா குடி புகுதலுக்கு வரவில்லை. சுந்தரமூர்த்தியும் வரவில்லை.பொன்னம்பலம் ஐயா, தேவராசா ஐயா, கந்தவனம் அண்ணை ஆகியோர் வந்து பரிசு தந்து வாழ்த்தினர். ஒரு காலத்தில் நான் கந்தவனம் அண்ணையை விடப் பணவசதி உள்ளவனாக இருந்தேன். அவர் அதற்காக மிகவும் மகிழ்ந்தார். “நீ வசதியாக இருப்பதால் தான்

எனக்கு உதவி செய்கிறாய். இன்னும் வசதியுள்ளவனாக நீ மாற வேண்டும்” என்று மகிழ்வுடன் வாழ்த்துவார்.சமையல் வேலை செய்யும் நான் வசதியாக இருப்பதையிட்டு அவர் பொறாமைப்படவில்லை. தனக்குத் தளர்ச்சியேற்படும் போதெல்லாம் மன உறுதியுடன் தான் அவர் இருந்தார். ஆரூரனுக்குப் பரீட்சைக் கட்டணம் கட்ட முடியாத போது கூட அவர் நம்பிக்கையை இழக்கவில்லை. அதனால் தான் இன்று தனவந்தனாகியுள்ளார். எனது மாமா எனது உயர்வைக் கண்டு பொறாமைப்படுவார்.கஸ்டம் வரும்போது குடித்து விட்டு குடும்பத்தில் கலகம் விளைவிப்பார்.அதனால் தான் அவர் முன்னேறவில்லை’’ என்றான் சமையல்காரன்.

## 69. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் பொருள் நனச வேட்கையோன் முறைசெயல் பொய்.

“பொருளைச் சேர்க்க வேண்டும் என்று பேராசை கொள்பவன், பொருளை நேர்மையாகவும் முறையாகவும் சேர்க்க மாட்டான்.

“பொருளைச் சேர்க்க வேண்டும் என்று நான் விரும்புவேனே தவிர அதை நேர்மையற்ற முறையிலோ முறை கேடாகவோ சேர்க்க விரும்பவில்லை. பட்டணத்தில் பல உணவகங்கள் உள்ளன. ஆனால் எமது உணவகத்திற்குத் தான் மக்கள் கூட்டம் கூட்டமாக வருவார்கள். அதற்குக் காரணம் நாம் பொருளில் ஆசை கொண்டு கலப்படம் செய்வதில்லை. நிறை

குறைத்துச் செய்வதில்லை. ஆசையுள்ளவன் நேர்மையாக நடக்க மாட்டான். அதனால் வருமானம் குறைவாகவே இருக்கும். நேர்மையோடும் முறையாகவும் செய்யப்படாத செயல் ஒரு போதும் வெற்றியளிக்காது. அதை நான் அனுபவ மூலமாக அறிந்துள்ளேன். சுந்தரமூர்த்தி பொருள் சேர்க்கும் பேராசை கொண்டவன். அவன் ஒரு செயலை நேர்மையாகவோ, முறையாகவோ செய்வான் என்பது பொய்யாகும்" என்றான் சமையற் காரன்.

**70. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**வாலியன் அல்லாதோன் தவம் செய்தல் பொய்.**

"தூய அறிவையும் தூய இயல்பையும் பெறாமல் இருப்பவன் தவம் செய்வான் என்பது நம்பமுடியாத பொய்யே.

"தூய அறிவும், தூய இயல்பும் இல்லாதவர்கள் எச் செயலையும் செய்ய முடியாது. நமசிவாயம் சுவாமியார் மேலான தூய அறிவை உடையவர், தூய்மையான மனத்தையும் உடையவர். அதனால் அவர் செய்யும் செயல்களெல்லாம் உயர்ந்தனவாகவே உள்ளன. அவ்வாறு நடப்பதால் அவரது முகமும் கண்களும் எந்நேரமும் எவரையும் கவரும் வசீகரத் தன்மை மிக்கனவாக இருக்கின்றன. அவரது கண்களை ஆசையுடன் பார்த்தால் நினைக்கின்ற நன்மைகள் யாவும் எளிதில் கிடைக்கும். நமசிவாயம் சுவாமியாருக்கு இருக்கின்ற செல்வாக்கைப்

பார்த்துப் பிரமித்த வேற்றூரவன் ஒருவன் தானும் தவம் செய்ய வேண்டுமென்று நினைத்து சுவாமியாரிடம் வந்து ஆசி பெற்றுச் சென்றான். ஆரம்பத்தில் அவரை அவ்வூரவர்கள் போற்றித் துதித்தனர். நாளடைவில் அவனது போக்குச் சரியில்லாததால் அவனை அடித்து விரட்டி விட்டனர். ஒரு தவசியின் அறிவும் இயல்பும் தூய்மையில்லாதவிடத்து அவன் தவம் செய்வதென்பது பொய்யானது. தனது தேவையை நிறைவேற்றுவது" என்றான் சமையற்காரன்.

**எளிய பத்து**

**71. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**புகழ்வெய்யோர்க்குப் புத்தேள் நாடு எளிது.**

"புகழ் தரக் கூடிய நல்ல பணிகளைப் பற்றின்றித் திருத்தொண்டாகச் செய்வோருக்கும் புகழ் எளிதாக வந்தடையும்.

காலையில் மிகவும் அவசரமாகப் புறப்பட்டார் கந்தவனம். அவரின் அவசரத்தைக் கண்ட ஆரூரன் சொன்னான், "அப்பா இள வயதில் நீங்கள் பட்ட கஷ்டத்தை இந்த ஊரில் உள்ள யாரும் பட்டிருக்க மாட்டார்கள். அதனால் இனியாவது சற்று ஓய்வாக இருங்கள். முன்பு போலவே இப்போதும் விடியற் காலையில் எழுந்து சரியாகச் சாப்பிடாமல் புறப்பட்டு விட்டீர்கள். சற்று ஓய்வெடுங்கள்."

“மகனே, வயோபத்திலும் சுறுசுறுப்பாக வாழ்ந்தால் தான் நோய் நொடிகள் வந்து தாக்காது. ஆரோக்கியமாக வாழலாம்.கூடி வாழவிரும்புபவர்கள் முயற்சி செய்தால் தான் பிறருக்கு உதவ முடியும். நீ மகனாக இருந்தாலும் எதற்கும் உனது கையை எதிர்பார்க்க முடியுமா? அருணாசலத்தின் மகனுக்குக் கண்ணில் சத்திரசிகிச்சை செய்தல் வேண்டும். அதற்கு ஒரு இலட்ச ரூபா தேவையென்றவன். இன்று தோப்பில் தேங்காய் பறிக்கிறார்கள்.வியாபாரிகள் வருவார்கள். செல்ல வேண்டும்” என்றார் கந்தவனம்.

அப்போது அங்கே வந்த அருணாசலம் சொன்னான், “நான் முன்பு கந்தவனம் அண்ணையோடு வேலை செய்தனான். அவர் அப்போதும் எனக்கு உதவியவர். இப்போதும் உதவுகிறார். மண் உலகில் பிரதியுபகாரம் கருதாது உதவுபவர்களைத் தேவர்கள் போற்றுவார்களாம். இங்கும் போற்றுகிறார்கள். அங்கும் போற்றுகிறார்கள் என்றால் அவரது தன்நலமில்லாத சேவை தான் காரணம்” கலங்கினான் அருணாசலம்.

## 72. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்
## உறழ்வெய்யோருக்கு உறுசெரு எளிது.

“சிறு சிறு மோதல்களை விரும்பி மேற்கொள்பவர்களுக்குப் பெரும் சண்டைகள் தானாக வந்தடையும்”

“அண்ணை, இராத்திரி சுந்தரமூர்த்தி தோப்பிலிருந்து வரும் போது யாரோ இனந்தெரியாதவர்கள் வழி மறித்துத் தாக்கி விட்டனர். அவன் உயிருக்காகப் போராடியபடி நினைவிழந்து பல மணி நேரம் அடித்த இடத்திலே கிடந்திருக்கிறான். யாரோ வழிப் போக்கர்கள் காவல் துறைக்கு அறிவிக்க, அவர்கள் அவனைக் கொண்டு சென்று வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்” என்றான் அருணாசலம்.

“அவன் சொல்வழி கேளான் .எந்த நாளும் யாரோ ஒருவனுடன் பிரச்சனைப்படுவான். ஊரில் அவன் பிரச்சனைப்படாத ஆளில்லை. நான் அவனுக்கு நெடுகச் சொல்லுறனான், “சுந்தரமூர்த்தி சிறு சிறு மோதல்களை விளையாட்டாக மேற்கொண்டாலும் அது பெரும் கேட்டினைத் தானாகவே கொண்டு வரும்.அதனால் மற்றவர்களை மதித்து நட. இல்லாவிட்டால் துன்பப்படுவாய்” என்றேன். அவன் யாராவது சொன்னால் கேட்பவனா? எல்லாம் தானே தேடிக் கொண்ட வினை.. அனுபவிக்கத் தானே வேணும்?” என்றார் கந்தவனம்.

**73. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**உரம் வெய்யோர்க்கு நசை கொடை எளிது.**

“பயிர்களுக்கு எருவைப் போலத் தாமும் வாழ வேண்டும் என்று விரும்புவோர்க்கு எல்லாருக்கும் உதவுவது மிகவும் எளிதானதாகும்.”

“கந்தவனத்திற்கு லேசாகக் காய்ச்சல் காய்ந்தது. தலையும் வலித்தது. அதனால் மனைவியின் வற்புறுத்தலின் பேரில் அன்று மாலை நடைபெற்ற சிவன் கோவில் பூசைக்குச் செல்லாது படுத்திருந்தார்.பூசை முடிந்ததும் குருக்கள் வந்து சொன்னார், “இன்று மாலைப் பூசைக்கு கந்தவனம் வரவில்லை.அதனால் அவருக்கு ஏதோ பெரியதொரு நோய் வந்திருத்தல் வேண்டும். பயிருக்கு எரு உதவுவது போல இந்த ஊரவர்கள் அனைவருக்கும் அவர் உதவுபவர்.கொஞ்ச நேரம் நில்லுங்கோ அவர் சுகமடைய வேண்டுமென்று சிவனுக்கு அர்ச்சனை செய்து பிரசாதம் கொண்டு வருகிறேன். வீட்டுக்குச் செல்வோம்” என்று கூறி விட்டுக் குருக்கள் கோவிலினுள்ளே சென்றார்.

குருக்களோடு பலர் கூட்டமாகச் செல்வதைக் கண்ட ஊரவர்கள் அனைவரும் விடயத்தை அறிந்து அவர்களின் பின்னால் சென்றனர். தனது வீட்டுக்கு வந்த மக்கள் கூட்டத்தைக் கண்டு திகைத்துப் போனார் கந்தவனம்., “தலை வலிக்கிறது சுக்குத் தேனீர் தா” என்று மனைவிக்குச் சொல்ல அவள் என்னை கோவிலுக்குச் செல்ல விடாது மறித்து விட்டாள்.எனக்கு ஒன்றுமில்லை” என்றார் கந்தவனம்.

“ஊருக்கு உதவும் உங்களுக்கு வருத்தமென்றால் எமக்கும் வருத்தம் தானாக வரும்” என்றான் ஒருவன்.

“நான் தோட்டத்திற்குப் போக வேண்டும்” என்று புறப்பட்டார் கந்தவனம்.

“இன்றைக்காவது ஓய்வெடுங்கள்” என்றான் ஆரூரன்

“மகனே, முயற்சிதான் நோயைக் குணமாக்குவது. மற்றவர்களுக்கு உதவி செய்ய வைப்பது, மற்றவர்களுடன் அன்பாகப் பழக வைப்பது,புகழைத் தருவது. அதனால் தான் ஓயாது முயற்சி செய்கிறேன்” என்று கூறிப் புறப்பட்டார் கந்தவனம்.

**74. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**குறளை வெய்யோர்க்கு மறைவிரி எளிது.**

“திருக்குறளை விரிவாகக் கற்றவர்களுக்கு ஏனைய அறநூல்களை விளக்கிக் கூறுவது எளிது”

“மற்றவர்களைப் பற்றிக் கோள் சொல்பவர்களிடத்திலிருந்து இரகசியங்களை அறிந்து கொள்வது இலகு. என்றும் பொருள் கொள்ளலாம்.”

பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவன் ஒருவன் அருணாசலத்தின் இனத்தவன். அவன் அருணாசலத்தைக் கேட்டான்.”அண்ணை ,எனக்கு நாலடியார் என்ற நூலில் சந்தேகங்கள் உண்டு. அதை யாரிடம் கேட்டு அறியலாம்”

அருணாசலம் சிறிது நேரம் யோசித்தான். பின் “திருக்குறளை நன்கு விளங்கிக் கற்றவர்களிடம் எந்த அறநூலைப் பற்றியும் கேட்கலாம் திருக்குறளைத் தனது உயிரிலும் மேலாக மதிப்பவர் கந்தவனம் அண்ணை. அத்துடன் திருவள்ளுவர் கூறியபடி வாழ்பவர்.அதனால் அவரைக் கேள்” என்றான்.

இருவரும் வரும் போது மடத்து சமையற்காரன் அருணாசலத்தைக் கேட்டான், “அருணாசலம் யார் சுந்தரமூர்த்திக்கு அடித்தது”

“அவன் எல்லோருடனும் பகை. அவன்ரை இளைய மகளை சிவகுருவின்ர மகன் செந்தில் விரும்புகிறான். அது சுந்தரமூர்த்திக்கு விருப்பமில்லை.செந்தில் காடையன். அவன்ரை கூட்டம் தான் அடித்தது” என்று சொல்லி விட்டு நடந்தான் அருணாசலம்.

“சமையற்காரன் திகைத்துப் போனான். அருணாசலம் ஊர்க் கதைகள் கதைப்பதில் வல்லவன். அதனால் தான் கேட்டான் .அதை வெளியே சொல்ல அவனுக்குப் பயமாக இருந்தது.

### 75. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் துன்பம் வெய்யோர்க்கு இன்பம் எளிது.

துன்பத்தை இன்பமாகக் கருதுவோர்க்கு உண்மையான இன்பம் எளிதாகக் கிடைக்கும்.

ஆரூரனுக்கு வெளிநாட்டுப் புலமைப் பரிசில் ஒன்று கிடைத்தது.பல ஆயிரம் பேர் விண்ணப்பித்திருந்தும் அது ஆரூரனுக்கு கிடைத்ததால் மிகவும் மகிழ்ந்த ரகுநாதனும் மனைவியும் மகளும் ஆரூரனைப் பாராட்டிப் பரிசளிப்பதற்காக ஆரூரனின் வீட்டுக்கு வந்தனர்.

“மிகப் பெரிய புலமைப் பரிசில் இது. எத்தனையாயிரம் பேர் விண்ணப்பித்திருந்தனர். இருந்தும் எனது மருமகனுக்கு கிடைத்ததையிட்டு பெரு மகிழ்வடைகிறேன். இன்னும் பல புலமைப் பரிசுகளை நீங்கள் பெற வாழ்த்துகிறேன்” என்று கூறி ஒரு தங்கச் சங்கிலியை அணிவித்தார்.

“மாமா, இதெல்லாம் எனக்கு இன்பமானவை அல்ல. துன்பங்களை இன்பமாக எண்ணுபவனுக்கு இன்பங்கள் எளிதாகக் கிடைக்கும் என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.படிக்கும் போது பல நாள் உண்ணாமல் கஷ்டப்பட்டிருக்கிறேன். உரிய நூல்களை வாங்கக் கஷ்டப்பட்டிருக்கிறேன்.இவையெல்லாம் துன்பங்கள் அல்ல. இன்பங்கள் என்று நினைத்ததால் தான் இந்த நிலையை அடைந்தேன்.தொழிற்சாலையில் கடுமையாக உழைப்பதை இன்பமென்று நினைத்ததால் தான் உங்கள் மாப்பிள்ளையானேன். மீண்டும் கஷ்டப்பட்டுப் படித்ததால் தான் இப் புலமைப்பரிசில் கிடைத்தது.செயல்களைத் துன்பமென்று நினைத்தாலும் ,துன்பங்களைத் துன்பங்கள் என்று

நினைத்தாலும் வாழ முடியாது” என்றான் .அதைக் கேட்டு ரகுநாதன் திகைத்துப் போனார்.

**76. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**இன்பம் வெய்யோர்க்கு துன்பம் எளிது.**

இன்பத்தைக் கண்டு மகிழ்ந்து மேலும் மேலும் இன்பங்கள் வர வேண்டும் என்று எண்ணுபவர்களை எளிதாகத் துன்பங்கள் பற்றிப் பிடிக்கும்”

“மாமா, வாழ்வில் துன்பங்கள் தான் அடிக்கடி வரும், இன்பங்கள் என்றோ ஒரு நாள் தான் வரும். அந்த இன்பத்தைத் தினமும் வர வேண்டும் என்று விரும்பினால் துன்பங்கள் தான் வரும். இது இயற்கையின் நியதி. நான் ஓயாது துன்பங்கள் வருகிறதென்று ஒதுங்கியிருந்தால் இந்தப் பெரும் இன்பம் என்னை வந்தடைந்திராது.அது போல இன்று கிடைத்த இந்தப் புலமைப்பரிசில் ஒரு பெருங் கொடை. ஆயிரத்தில் ஒருவருக்குத் தான் கிடைக்கும்.அந்த ஆயிரத்தில் ஒருவனாக நான் தெரிவாகி விட்டேன்.இப்படியான புலமைப் பரிசுகள் எனக்கு இன்னும் பல கிடைக்க வேண்டுமென்று ஆசைப்பட்டால் ஏராளமான துன்பங்கள் தான் வந்து சேரும்.அதற்காக நான் அதை விரும்பவில்லை என்பது அர்த்தமல்ல. வரும் போது மகிழ வேண்டும் என்றே விரும்புகிறேன்” என்றான் ஆரூரன்.

தகப்பனைப் போல பண்பாகவும் அறிவுபூர்வமாகவும் கதைத்த ஆரூரனின் அறிவை மனதுள் பாராட்டி மகிழ்ந்தார் ரகுநாதன்.

**77. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**உண்டி வெய்யோர்க்கு உறுபிணி எளிது.**

“உணவு வகைகளை விரும்பி அளவுக்கதிகமா உண்பவர்களை நோய்கள் தாக்குவது எளிது.

அருணாசலத்திற்கு ,நெஞ்சு வலி ஏற்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டான். அவனுக்கு வைத்தியர் சொன்னார், “முன்பு உண்ட உணவு சமிபாடு அடைந்த பின்பு ,அளவோடு சத்துள்ள உணவுகளை உண்ணுதல் வேண்டும்.அத்துடன் உடம்பு ஏற்கும் உணவு வகைகளை அறிந்து உண்ண வேண்டும். ஒவ்வாத உணவு வகைகளை ஒதுக்கி, அளவுக்கதிகமாக உண்ணாமல் வாழ்கின்றவனின் உடம்பைக் கொடிய நோய்கள் அணுக மாட்டாது. இப்படி உண்பவனின் வாழ்வில் இன்பம் நிறைந்திருக்கும். கொழுப்பு சார்ந்த உணவுகளை அதிகம் உண்டதால் தான் உங்களுக்கு நெஞ்சுவலி வந்துள்ளது.இனிமேல் இலை, குழை,காய்கறிகள் ,பழங்கள் என்பவற்றைப் பச்சையாக உண்ணுங்கள் .மாமிசம்,முட்டை, பால்,நெய்வகை அதிகம் உண்ணாதீர்கள். அப்படியல்லாது உண்டால் மரணம் எளிதாக நிகழும்”

அதைக் கேட்டுக் கொண்ட நின்ற அவனது மனைவி சொன்னாள், "எந்த நாளும் மீன், முட்டை,இறைச்சி வேண்டும். சமைத்துக் கொடுக்காவிட்டால் கண்டபடி ஏசுவார். அடிப்பார்" என்று அழுதாள்

**78. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**பெண்டிர்வெய் யோர்க்குப் படுபழி எளிது.**

தவறான வழியில் பெண்களை அடைய முற்படுவோரை அழிக்கும் பகையும் பழியும் எளிதாக வந்தடையும்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த சுந்தரமூர்த்தி கந்தவனத்தைப் பார்க்க விரும்பி ஆள் அனுப்பினான். அதனால் கந்தவனம் வைத்தியசாவைக்கு வந்தார். அவரைக் கண்டதும் சுந்தரமூர்த்தி வெகுநேரம் கதைக்க முடியாது விக்கி விக்கி அழுதான். பின் சொன்னான், "இந்த ஊரில் நீங்கள் ஒருவர் தான் நல்லவர். உங்களோடு தான் மனம் விட்டுப் பேசலாம். நீங்கள் முன்பு பல தடைவகள் எனது தீய நடவடிக்கைகளை நிறுத்தும்படி கூறியுள்ளீர்கள். ஆனால் நான் நிறுத்தாததால் இந்தத் துன்பம் வந்தது. நான் உயிர் பிழைத்தது கடவுள் செயல். தவறான தீய உணர்வோடு பெண்களை அடைய விரும்புபவர்களைப் பகை அழிக்கும். பாவம் சூழும் என்று பெரியவர்கள் கூறியதை அறிந்தும் உணர்வுகளின் கொடுமையால் எனது பணியாள் ஒருவனின் மனைவி மீது ஆசைப்பட்டேன். அவள் அதை தனது கணவனுக்குச்

சொன்னதால் தான் இந் நிலை ஏற்பட்டது.அவன் கொடியவன். என்னைக் கொன்று விடுவான். தயவு செய்து என்னைக் காப்பாற்றுங்கள்.உங்கள் ஒருவரால் தான் என்னைக் காப்பாற்ற முடியும்" மேலே பேசமுடியாது அவதிப்பட்டான் சுந்தரமூர்த்தி.

**79. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**பாரம்வெய் யோர்க்குப் பாத்தூண் எளிது.**

பிறரின் துன்பங்களைத் தன் துன்பமாக ஏற்று உதவி செய்பவர்களுக்கு, உள்ளதைப் பகிர்ந்துண்பது எளிது.

கந்தவனத்தை அந்த நேரம் எதிர்பாராத சஞ்சீவன் அதிர்ந்து போனான்."ஏனையா இந்த நேரம் வந்தீர்கள். சொல்லியனுப்பியிருந்தால் நான் வந்திருப்பேன்" என்றான்.

"மிக இரகசியமான விடயம். சுந்தரமூர்த்தி கேவலமானவன். அதற்குத் தண்டனை அளித்து விட்டாய். மேலும் தண்டனை கொடுத்துப் பாவியாகி விடாதே. அவனை அன்று கொன்றிருந்தால் உனது குடும்பம் நடுத்தெருவுக்கு வந்து விடும். இனி நீ அவனிடம் வேலை செய்யாதே. எனது தென்னந் தோப்பில் வேலை செய். அவனோடு பிரச்சனைக்குப் போகாதே. இந்த விடயம் வெளியே தெரிந்தால் உனக்குத் தான் அவமானம்" என்றார் கந்தவனம்.

“ஐயா, கர்ணனைப் போலத் தன்னையும் கொடையாகக் கொடுக்கக் கூடியவர் நீங்கள். நீங்கள் எமக்கு எவ்வளவு உதவிகள் செய்திருப்பீர்கள். அதனால் நான் தங்கள் சொல்லை மீற மாட்டேன்” என்று அவரது கால்களைப் பற்றினான் சஞ்சீவன்.

**80. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**சார்பில் லோருக்கு உறுகொலை எளிது.**

“யாரையும் சார்ந்தோ அல்லது யாரோடும் சேராமலோ ‘தான்’ என்ற ஆணவத்துடன் வாழ்பவன் கொலையும் செய்வான். கொலையும் செய்யப்படுவான்.

“சுந்தரமூர்த்தி உனது இந்த நிலை உன்னால் தேடப்பட்டது.ஒரு பெண் உணர்ச்சி காரணமாகவோ, வேறு காரணங்களுக்காகவோ தன்னோடு கூடியிருக்கும்படி அழைத்தாலும் அதை விரும்பாத மனிதன் தான் உயர்ந்த மனிதன். ,அடக்கமுள்ள மனிதன், ஒழுங்கான மனிதன்,பலர் தமது உணர்வுகளைப் பொருள் கொடுத்துத் தீர்த்துக் கொள்கின்றனர். இது தவறு மட்டுமல்ல, தீராத அவமானமும் ஆகும். ஆனால் நீ ஒரு பெண்ணைத் துன்புறுத்தியிருக்கிறாய். பாலியல் ரீதியாகத் துன்புறுத்துவது அவளைக் கொலை செய்வதற்குச் சமமானது. நீ நீதியாக நடப்பதும் இல்லை. நீதியானவற்றைக் கேட்பதும் இல்லை. எவருடனும் ஒத்துப் போகாது தனித்து ஆணவ மிடுக்குடன்

வாழ்பவன் கொலை செய்ய அஞ்ச மாட்டான். அவனும் கொலை செய்யப்படுவானெனப் பெரியவர்கள் கூறியுள்ளனர். சஞ்சீவனுக்கு எல்லாம் சொல்லியுள்ளேன். அவனோடு இனிப் பிரச்சனைக்குப் போகாதே. அவனுக்குக் கொடுக்க வேண்டியவற்றைக் கொடு" என்று கந்தவனம் கூறிவிட்டுச் சுந்தரமூர்த்தியின் பதிலைப் பாராது எழுந்து நடந்தார்.

**நல்கூர்ந்த பத்து**

**81. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**முறையில் அரசன் நாடு நல்கூர்ந்தன்று**

"நீதி நெறி அறம் அன்பு இல்லாமல் ஆட்சி செய்யும் அரசனின் நாட்டில் வாழும் மக்கள் எல்லாம் இருந்தாலும் எதுவும் இல்லாத வறுமையுடையவர்களாகவே வாழ்வர். இது குடும்பங்களுக்கும் பொருந்தும"

சுந்தரமூர்த்தியின் மனைவியும் பிள்ளைகளும் என்றுமில்லாதவாறு கந்தவனத்தின் வீட்டுக்கு வந்தனர். அவளின் முகத்தில் கவலை,துயரம், வெறுப்பு ஆகியன குடியிருந்தன

"அண்ணை, நீங்கள் தெய்வத்தைப் போல இந்த ஊரில் வாழ்கிறீர்கள். உங்களைப் பின்பற்றிப் பலர் நன்றாக வாழ்கின்றனர். ஆனால் எனது கணவன் உங்களைக் காரணமின்றி அவமதித்த போதும் நீங்கள் பொறுத்துக்

கொண்டீர்கள். எனது கணவர் தீமையின் வடிவம். எல்லாத் தீமைகளையும் அஞ்சாது செய்பவர். இருந்தும் ஒரு பெண் தன் கணவனுக்கு அடங்கி நடக்க வேண்டும் என்பதற்காக இதுவரை பொறுத்திருந்தேன். இவர் சாகும் வரை திருந்த மாட்டார். அரசன் கொடுங் கோலனாக இருந்தால் வளமுள்ள நாடும் சுடுகாடாகவே இருக்கும்என்று படித்துள்ளேன் .அதுபோல அன்பு, கருணை, இரக்கம் ,ஒழுக்கம் இல்லாதவர்களுடன் வாழும் வாழ்வு பாம்புடன் வாழ்வதைப் போன்றது. எம்மிடம் பொருள் இருக்கு. நிம்மதி இல்லை. அதனால் எனது பெற்றோரிடத்தில் செல்கிறேன். அப்பா வசதியானவர். ஒரு நேரக் கஞ்சி குடிப்பவனுக்கும் நிம்மதியான வாழ்வு தான் தேவை. அதனால் தான் செல்கிறேன்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டாள். கந்தவனம் எதுவும் பேசவில்லை.

**82. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**மிகமூத் தோன், காமம் நல்கூர்ந் தன்று.**

"முதுமை அடைந்தவன் பெண்ணாசை கொண்டு அலைந்தால் வறுமையைப் போன்ற துன்பத்தையே அடைவான்"

புறப்பட்டுச் சிறிது தூரம் சென்றவள் திரும்பி வந்து சொன்னாள், "ஐயா, காமத்திற்கு ஒரு வயது இருக்கிறது.

அத்துடன் அது வரையறுக்கப்படல் வேண்டும். இவர் காமப் பேய். முதுமையின் நிலையிலும் தனது பிள்ளைகளை ஒத்த வயதுடைய பெண்கள் மீது மோகங் கொள்கிறார். எமது வீட்டு வேலைக்காரியின் மகளுக்கு வயது பதினெட்டு.வேலைக்காரி அவளை மயக்கித் தன் மகளோடு தொடர்பு வைக்கப் பண்ணியுள்ளாள். அதனால் அவர் பட்டணத்தில் உள்ள பெறுமதி மிக்க வீட்டை அவளுக்கு எழுதிக் கொடுத்து விட்டார். ஏராளமான பணத்தைக் கொடுக்கிறார். ஆபரணங்களை வாங்கிக் கொடுக்கிறார். இப்போ வைத்தியசாலையில் அவர்கள் தான் அவரைப் பராமரிக்கிறார்கள். இந்த நிலை நீடித்தால் நாம் சொத்துக்களை இழக்க வேண்டிய நிலை உருவாகும். அதற்கு முன் உள்ளதைக் காப்பாற்றுவதற்காகத் தான் எனது சகோதரர்களின் உதவியை நாடிச் செல்கிறேன்" என்று அழுதாள் சுந்தரமூர்த்தியின் மனைவி

**83. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**செற்றுடன் உறைவோனைச் சேர்தல்நல் கூர்ந்தன்று.**

"பகைவனோடு உறவு கொண்டிருந்தால், அது வறுமையை விடக் கொடுமைகள் பலவற்றைக் கொடுக்கும்.

அருணாசலம் சஞ்சீவனின் இரத்த உறவினன். அதனால் சஞ்சீவனிடம் வந்து சொன்னான், "நீ செய்தது சரியில்லை, உனக்கு வேலை இல்லை என்று கருதித் தான் கந்தவனம் அண்ணை வேலை தந்திருப்பார்.அவனை யாரோ அடித்து

முறித்துள்ளனர். அவனால் எழுந்து நடமாடப் பல காலஞ் செல்லும்.சிறு வயது முதல் அவனிடம் பணியாற்றி விட்டு அவன் இயலாவாளியாகிய வேளை அவனை விட்டு நீங்குவது நன்றியில்லாத செயல். அதனால் வேலைக்குப் போ"

எனக்கும் சுந்தரமூர்த்திக்கும் சமீப காலமாக உண்மையான பகை ஏற்பட்டு விட்டது. நான் ஒரு மாதத்திற்கு முன்பே வேலையை விட்டு விடுவதாகக் கூறியபடியால் தான் கந்தவனம் ஐயா வேலை தந்தவர். நெஞ்சில் தீராத பகையுள்ளவனோடு உறவு வைத்தால் அது பெரும் துன்பங்கள் பலவற்றைத் தரும். அதனால் என்னை வற்புறுத்தாதே" என்றான் சஞ்சீவன்.

**84. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**பிணிகிடந் தோன்பெற்ற இன்பம் நல்கூர்ந்தன்று.**

"தீராத நோயால் தினமும் பெருந் துன்பம் அனுபவிப்பவன் இன்பம் அனுபவிக்க எண்ணினால் அதுவும் துன்பமாகவே இருக்கும்.

"பிரச்சனையை விட்டு விட்டு மனிதத் தன்மையுடன் சிந்தித்துப் பார். அவன் தீயவன் தான். இருப்பினும் அது தெரிந்து தானே நீ இவ்வளவு நாளும் வேலை செய்தனி" என்றான் அருணாசலம்.

“நீ சொல்வதில் நியாயம் இருக்கிறது.ஆனால் அவனோடு இனி ஒரு காலமும் சேர மாட்டேன். தீராத நோயால் பெருந் துன்பப்படுபவன் இன்பம் பெற நினைத்தால் அதுவும் பெரும் துன்பமாகத் தான் மாறும்.அவனோடு நான் வாழ்ந்த காலம் தீராத நோயாளி படும் துன்பத்தை விடத் துன்பமான காலம். அவனை விட்டு நீங்கினால் தான் இன்பம் கிடைக்கும் என்று நான் நினைத்தால் நீ மீண்டும் அவனிடம் செல் என்கிறாய். அப்படிச் சேர்ந்தால் அது பழைய படி தீராத நோய்க் காலமாகவே மாறும். இதற்கு மேல் பேச எனக்கு விருப்பமில்லை” என்று கூறிவிட்டு எழுந்து சென்றான் சஞ்சீவன்.

**85. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**தன்போற் றாவழிப் புலவி நல் கூர்ந்தன்று.**

“அன்பில்லாத கணவனிடமோ, மனைவியிடமோ ஊடல் கொள்வது வறுமையைப் போன்ற துன்பத்தைத் தரும்.

கந்தவனத்திற்கு அன்று காய்ச்சல். அதனால் அவரது மனைவி பார்வதி மத்தியானம் சோறு கொடுக்கவில்லை. வைத்தியர் இரண்டு நாட்களுக்குச் சோறு கொடுக்க வேண்டாம் என்று கூறியிருந்தார். மனைவி கொடுத்த கஞ்சியை கோபத்துடன் வைத்து விட்டுக் கந்தவனம் தனது வேலைக்காரனை அழைத்துச் சொன்னார், “கடையில் போய்ச் சோறு வாங்கி வா.” வேலைக்காரன் தயங்கினான், “இந்தா

பணம், விரைவாகச் சென்று வாங்கி வந்து கொடு. இனிமேல் தினமும் மூன்று வேளையும் கடையில் வாங்கி வா" என்று கோபமாகக் கூறி விட்டுச் சென்று விட்டார். அவன் சென்ற பின் , "இவ்வளவு காலமும் சொல்லாத சொல்லைச் சொல்லி விட்டேன்" என்று வருந்தினார் கந்தவனம். "சாதாரணமாகக் கோபிக்காதவர் இன்று நோயின் தாக்கத்தால் ஏதாவது சொன்னால் கோபிப்பதா? என்று துயரப்பட்டவாறு சிறிது சோற்றை எடுத்துக் கறியுடன் பிசைந்து கொண்டு வந்து ஊட்டினாள். கந்தவனம் உருகிப் போனார். அவரது கண்கள் கலங்கின.அப்படியான நிலையிலும் அவருக்குச் சிரிப்பு வந்தது. "அன்பு கொண்ட மனைவியோடு ஊடல் கொள்வது பேரின்பம்" என்று நினைத்தார். அவர் கோபித்ததனால் தான்பல நாட்களுக்குப் பின் சோற்றை ஊட்டி விட முடிந்தது" என்று நினைத்து இன்பப்பட்டாள். வேலைக்காரர்களுக்குச் சிரிப்பு வந்து விட்டது. "நானென்றால் மனைவிக்கு அடித்திருப்பேன். அவளென்றால் நீ சாப்பிடாவிட்டால் படு. பின் வலிய வருவாய்" என்பாள். அன்புள்ளவர்களின் குணம் இது. அன்பில்லாத தன்மை எமது தன்மை" என்று நினைத்தான் வேலைக்காரன்

**86. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**முதிர்வு உடையோன்மேனி அணிநல் கூர்ந்தன்று.**

முதுமையுடையோன் அணியும் அணிகலன்கள் வறுமையற்றவர்களைப் போலத் தமது பொலிவை இழக்கும்”

கந்தவனம் அணிகலன்கள் எவையும் அணிவதில்லை. அதனால் பார்வதியும் தாலிக்கொடியையும் ஒரு சோடிக் காப்பையும் தவிர்ந்த நகைகளை அணிய மாட்டாள். ரகுநாதன் தேரின் வடக்கயிறு போல மொத்தமான சங்கிலி அணிந்திருப்பார். எல்லா விரல்களிலும் மோதிரம் அணிந்திருப்பார். அவரது மனைவியும் ஏராளமான நகைகளை அணிந்திருப்பாள். அது போலத் தனது பெற்றோருக்கும் அணிகலன்கள் அணிவித்து அழகு பார்க்க வேண்டும் என்ற எண்ணம் ஆரூரனுக்கு வந்தது.அதைத் தந்தையிடம் சொன்னான். அதற்குக் கந்தவனம் சொன்னார், “மகனே, இளமையில் தான் அணிகலன்களை அணிதல் வேண்டும். முதுமைப் பருவத்தில் பற்றுக்களை ஒடுக்கிக் கடவுளை வணங்குதல் வேண்டும். அணிகலன்கள் ஆசையைத் தூண்டுவிக்கும். வழிபாட்டிற்கு இடைஞ்சலாக இருக்கும். மனதிற்குப் பாரமாக இருக்கும். முதுமையானவர்கள் அணியும் அணிகலன்களின் அழகு கெட்டுவிடும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். சென்ற மாதம் எழுபது வயது முதியவர் சிவன் கோவிலில் கும்பிடும் போது அவரது தங்கச் சங்கிலியைத் திருடர்கள் அறுத்தனர். அறுக்கும் போது அவரது குரல்வளையும் தாக்குப்பட்டதனால் அவர் இன்னும் வைத்தியசாலையில் தங்கியிருக்கிறார். அதனால் எனக்கு

அணிகலன்கள் சூட்ட வேண்டுமென்று ஆசைப்படாதே” என்றார் கந்தவனம்.

**87. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**சொல், செல் லாவழிச் சொலவு நல் கூர்ந்தன்று.**

“ஒருவர் மேடையில் பேசிய பேச்சை இன்னொருவர் பாராட்டிப் பேசாவிட்டால் , அவர் பேசிய பேச்சு வீணாகி விடும்”

அன்று திருஞானசம்பந்தரின் குரு பூசை சன சமூக நிலையத்தில் கொண்டாடப்பட்டது. பூசை முடிய அயலூரைச் சேர்ந்த பண்டிதர் நல்லசிவம் திருஞானசம்பந்தரைப் பற்றி உரையாற்றினார். அவர் உரையாற்றி முடிந்ததும் பொன்னம்பலம் அவரது பேச்சை விமர்சித்துப் பேசினார், “நல்லஅருமையான பேச்சு, சிறுவர்களும் விளங்கிக் கொண்டனர். புலமையுள்ளவன் ,கற்காதவர்களும் விளங்கிக் கொள்ளும் வண்ணம் பேசுதல் வேண்டும். எழுதுதல் வேண்டும் .பண்டைய அருமையான நூல்களிலெல்லாம் இலகுபடுத்திப் பேசாமையாலும் இலகுபடுத்தி எழுதாமையாலும் அவை வழக்கிழந்து வருகின்றன. பண்டிதர் நல்ல சிவம் அவர்கள் இதை உணர்ந்து பேசி வருகிறார், எழுதி வருகிறார். அது சிறப்படைய வேண்டுமென வாழ்த்துகிறேன்” என்றார். நல்லசிவத்தின் முகம் அதைக் கேட்டுப் பூரித்துப் பொங்கியதைக் கந்தவனம் கண்டார்.

பேசியவனின் திறமையைப் பாராட்டாவிட்டால் பேசுபவன் ஆர்வத்துடன் பேசமாட்டான் என்பது பொன்னம்பலத்திற்குத் தெரியும்" என்று நினைத்தார்.

**88. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**அகம்வறியோன் நண்ணல் நல் கூர்ந்தன்று.**

அன்பு, கருணை, காருண்யம் ஆகியன இல்லாது மனம் வறுமைப்பட்டவனோடு கொள்ளும் உறவும் வறுமைப்பட்டதாகவே இருக்கும்.

"சுந்தரமூர்த்தியைப் பார்க்க வைத்தியசாலைக்கு வந்த அருணாசலம் சொன்னான், "நீ தான் அனாதையான சஞ்சீவனுக்குத் தொழில் கொடுத்து ஆளாக்கினனீ. அதை மறந்து அவன் நீ இக்கட்டான நிலையில் இருக்கும் போது நன்றி மறந்து வேலையை விட்டுச் சென்று விட்டான். நான் அவனைச் சந்தித்து, "பாவம் சுந்தரமூர்த்தி, அவன் சுகமடையும் வரை வேலைக்குப் போ என்று கெஞ்சிப் பார்த்தன். கோபமாக என்னை ஏசிப் போட்டான்.." என்று ஆத்திரத்துடன் அருணாசலம் கூறும் போது சுந்தரமூர்த்தி கோபத்துடன் சொன்னான், "நீ ஏன் போனனீ ,ஊரில உள்ளவையை நம்பியே நான் தொழில் செய்கிறன். நீ வந்தால் வந்த வேலையைப் பார்த்திட்டுப் போ.இஞ்சை என்ன நடக்கென்று பார்த்துச்

சந்தியில் இருந்து கேலி செய்து சிரித்துக் கதைக்கவே வந்தனீ”

அருணாசலத்திற்குப் கோபம் வந்தது. அதை அடக்கினான், இவனுக்குச் சஞ்சீவன் செய்தது சரி. மனம் வறுமைப்பட்டவனின் பேச்சும் வறுமைப்பட்டதாகக் தான் இருக்கும்” என்று நினைத்தவாறு வெளியே சென்றான்.

**89. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**உட்கில் வழிச்சின்னம் நல்கூர்ந்தன்று.**

அச்சப்பட மாட்டான் என்று தெரிந்த பின்பும் ஒருவன் மீது கோபம் கொள்வதால் பயனில்லை.

சுந்தரமூர்த்தி கோபா வேஷத்துடன் பேசிய வார்த்தைகள் அருணாசலத்தின் நெஞ்சில் தீயை வார்த்தன. அவனுக்கு அடிக்க வேண்டும் போல இருந்தது. அப்போது அந்த வழியால் சஞ்சீவன் வந்தான். நடந்ததை அருணாசலம் விபரமாகக் கூறினான்.

“அண்ணை, அச்சப்பட மாட்டான் என்று தெரிந்த பின்பு ஒருவனை எச்சரிப்பதால் பயன் இல்லை. சுந்தரமூர்த்தி மானம் இல்லாதவன். மானம் இல்லாதவன் இராசாவிலும் பார்க்க பெரியவன் என்பார்கள். அது போல மானமில்லாதவன் எதற்கும் அஞ்சமாட்டான் .செய்யக் கூடாதவற்றைச் செய்து விட்டுக்

காலைப் பிடிப்பான். அப்படிப்பட்டவனோடு நீ ஏன் கதைக்கப் போனனீ" என்று கேட்டான் சஞ்சீவன். அருணாசலத்திற்கு அவன் கூறியது சரியெனப்பட்டது.

**90. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**நட்பில் வழிச்சேறல் நல்கூர்ந்தன்று.**

நண்பரை மதித்து அன்புடன் பழகாதவனிடம் கொள்ளும் நட்பும் வறுமைப்பட்டது .அதனால் நற்பயன் வரமாட்டாது.

"அன்பு, நட்பு, உரிமை என்பன இல்லாதவனோடு நட்பு கொள்ளக் கூடாது. அத்துடன் அவனது நன்மை, தீமைகளைப் பற்றிப் பேசவும் கூடாது. அதுபோல தர்மமில்லாதவனிடம் வேலை செய்யவும் கூடாது. நீ நட்புக் கொள்ளக் கூடாதவனிடம் நட்புக் கொண்டு வருந்துகிறாய். நான் நற்பண்புகள் எதுவும் இல்லாதவனிடம் வேலை செய்ததால் துன்பப்படுகிறேன். நட்பென்பது ஒருவருக்கொருவர் சிரித்து மகிழவும் தனது மனச் சுமைகளையும் தீய செயல்களையும் சொல்லி பெருமைப்படவும் ஏற்பட்டதல்ல. அது நண்பர் வழி தவறிச் செல்லும் போது கண்டித்துத் திருத்தவும் உதவுவது என்று தெரியாதவர்களோடு நட்புக் கொண்டால் வாழ்நாள் முழுவதும் துன்பம் அனுபவிக்க வேண்டும். இனியாவது உணர்ந்து திருந்து" என்றான் சஞ்சீவன்.

**தண்டாப் பத்து.**

**91. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**

**ஓங்கல் வேண்டுவான் உயர்மொழி தண்டான்.**

உயர்ந்த புகழைப் பெற வேண்டுமென்று நினைப்பவன், அறநூல்களும் ஆன்றோர்களும் கூறும் அறநெறிப்படி வாழ வேண்டும் என்ற நினைவைக் கைவிட மாட்டான்.

“நல்ல ஒரு மனிதன் கோபப்பட்டால் தான் கவலைப்பட வேண்டும்.தீய முரடனான சுந்தரமூர்த்தி எப்போதாவது நல்ல வார்த்தை பேசியுள்ளானா? தனது குல மானத்தைக் காப்பாற்ற வேண்டும். தனது புகழில் மாசுபடக் கூடாது என்று என்னும் பொன்னம்பலம் ஐயாவும், கந்தவனம் ஐயாவும் ஆன்றோர் கூறியபடியும் ,அறநூல்கள் எழுதிய படியும் வாழ்கிறார்கள் .அதனால் தான் அவர்கள் மதிக்கப்படுகிறார்கள். இது தெரிந்தும் ஏன் கவலைப்படுகிறாய்” என்று கேட்டான் சஞ்சீவன்.

**92. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**வீங்கல் வேண்டுவோன் பல்புகழ் தண்டான்**

புகழோடு வாழ்பவர்கள் மேலும் புகழடைய விரும்பினால் மேலும் புகழ் வரக் கூடிய நற்பணிகள் பலவற்றைக் கைவிடாது செய்தல் வேண்டும்.

“உண்மை தான் மேலும் மேலும் புகழடைய வேண்டும் என்று நினைப்பவர்கள் மேலும் மேலும் நற்பணிகளைச் செய்து

கொண்டே இருப்பார்கள்.இப்படியானவர்கள் பழிக்கு அஞ்சுவார்கள். கந்தவனம் அண்ணையை எனக்கு வெகு காலமாகத் தெரியும். அவர் கூலி வேலை செய்வதே புகழுக்காகத் தான். எந்த வீட்டவனும் அவரை நம்பி வீட்டுள் விடுவான். எவ்வளவு பணத்தையும் நம்பிக் கொடுத்துக் கொடுப்பிக்கலாம். தொழிலில் கள்ளம் என்பதே இராது.இப்பவும் அவர் அப்படித் தான் வாழ்கிறார். அதனால் தான் அவருக்குக் கற்றவர்களுக்கு இல்லாத புகழ் இருக்கிறது.புகழின் அருமை தெரியாதவர்கள் தான் நற்பணிகளைச் செய்வதில்லை'' என்றான் அருணாசலம்

**93. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**கற்றல் வேண்டுவான் வழிபாடு தண்டான்.**

"கல்வியில் மேன்மையடைய விரும்புகின்றவன் கற்பிக்கும் ஆசிரியரை மதித்து நடப்பான்.மேலும் கற்க விரும்புவோர் கற்றபடி வாழ்வதைக் கைவிட மாட்டார்.

''பொன்னம்பலம் ஐயா பெரிய கல்வி மான் .இப்போதும் கற்றுக் கொண்டிருக்கிறார். அவர் கற்றது எனது பெரிய தந்தையிடம். அவரைப் பிள்ளைகள் இனத்தவர்கள் மதிப்பதோ, கவனிப்பதோ கிடையாது.ஆனால் பொன்னம்பலம் ஐயா அவரைத் தெய்வமாக மதிக்கிறார். வாரத்தில் ஒரு நாளாவது வந்து சந்திப்பார். முக்கியமான விடயங்கள் பற்றிக் கலந்துரையாடுவார். கல்வியில் மேன்மையடைய விரும்புபவர்கள் ஆசிரியர்களை கடவுளாக மதிக்க வேண்டும்

என்று ஆரூரன் கல்வி கற்கும் காலங்களில் கந்தவனம் அண்ணை கூறுவார். பொன்னம்பலம் ஐயாவைப் போலத் தான் ஆரூரனும் தான் கற்பித்த பொன்னம்பலம் ஐயாவை விழுந்து விழுந்து கும்பிடுவதை நான் பலமுறை கண்டுள்ளேன். அதன்படி நடக்க வேண்டுமென்று நானும் எனது பிள்ளைகளுக்குக் கூறுவேன்'' என்றான் அருணாசலம்.

## 94. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் நிற்றல் வேண்டுவோன் தவம் செயல் தண்டான்

"பிறவாத நிலையை விரும்புவோர் தவம் மேற்க் கொள்வதைக் கை விட மாட்டார்கள்.

நமசிவாயம் சுவாமிகள் ஐந்து தினங்களாகச் சமாதி நிலையில் இருந்தார். அவரைச் சுற்றியிருந்த அவரது பக்தர்கள் தேவார திருவாசகங்களைப் பாடிக் கொண்டிருந்தனர். ஊரே அங்கு திரண்டிருந்தது. ஐந்து நாட்களாகக் கண்களை மூடியபடி இருந்த சுவாமியாரை எல்லோரும் அதிசயமாகப் பார்த்தனர். பொன்னம்பலம் சொன்னார், "சுவாமியார் பற்றற்றவர். எங்கிருந்தோ வந்து எமது கோவிலில் அமர்ந்தவர். அவர் பிறவாத நிலையான முத்தியை நினைத்துத் தவம் செய்கிறார். நீங்கள் யாரும் பயப்படத் தேவையில்லை. சுவாசம் சீராக இருக்கிறது. உணவு உண்ணாவிட்டாலும் முகத்தில் பொலிவு இருக்கிறது. எல்லோரும் பயப்படாது பிரார்த்தனை செய்யுங்கள்" என்றார்.

**95. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**வாழ்க்கை வேண்டுவோன் சூழ்ச்சி தண்டான்.**

"ஒரு செயலில் வெற்றி பெற விரும்பினால் அச் செயலைப் பற்றி முழுமையாக ஆராயத் தவறக் கூடாது.

சஞ்சீவனுக்குக் கந்தவனத்திடம் வேலை செய்யப் பிடிக்கவில்லை. இன்னொருவருக்குக் கீழ வேலை செய்வதை விடத் தனியே ஒரு தொழிலைச் செய்ய விரும்பினான். அதனால் பொன்னம்பலத்திடம் சென்று தனது விருப்பத்தைச் சொன்னான்.

"உனது முடிவு நல்லது. ஒருவரின் கீழ் வேலை செய்வதை விடத் தனித்து ஒரு தொழிலைத் தொடங்கி அதைச் சிறப்புறச் செய்வது சிறப்பானது. முதலில் தொழிலைத் தெரிவு செய்யும் போது அதனால் உண்டாகப் போகும் நன்மை தீமைகளைப் பற்றிச் சிந்தி. தொழிலுக்கான அறிவு, மூலதனம் ,பெரியவர்களின் ஆதரவு என்பன தான் தொழிலைச் சிறப்பிப்பது.என்ன வேலை செய்யப் போகிறாய்?" என்று கேட்டார் பொன்னம்பலம்.

"நான் கா.பொ.த உயர்தர வகுப்புச் சித்தியடைந்தேன். மனைவியும் அதே வகுப்பில் சித்தியடைந்தவள். எமது ஊர்ப் பிள்ளைகள் மேலதிகமாகக் கற்பதற்காக பட்டணத்திற்குச்

செல்கிறார்கள். அதனால் இங்கு ஒரு தனியார் கல்வி நிலையம் நிறுவ யோசிக்கிறேன்" என்றான் சஞ்சீவன்.

"நல்லது, என்றும் எனது உதவி உனக்கு இருக்கும். காலையில் மாணவர்கள் பாடசாலைக்குச் சென்றால் பிற்பகல் இரண்டு மணிக்குத் தான் வருவார்கள். அது வரையும் நீ ஒரு தொழில் செய்யலாம். எனது விவசாய நிலம் செய்கையின்றி இருக்கிறது. அதைச் செய்" என்றார் பொன்னம்பலம்.

"நன்றி ஐயா" என்று கூறி விட்டுச் சென்ற சஞ்சீவன், தனியார் கல்வி நிறுவனமொன்றை நிறுவினான். அதன் மூலம் அவனுக்குப் பெரும் வருமானம் கிடைத்தது. "நீ பொன்னம்பலம் ஐயாவின் ஆசியோடும் ஆலோசனையோடும் செயற்படுவதால் நல்ல நிலையை அடைந்து விட்டாய்" என்றான் அருணாசலம்.

**96. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்
மிகுதி வேண்டுவோன் வருத்தம் தண்டான்.**

"முன்னேற வேண்டும் என்று நினைப்பவன் செயலைச் செய்யும் போது வரும் துன்பங்களைக் கண்டு மனங் கலங்க மாட்டான்"

சஞ்சீவனின் தனியார் கல்வி நிறுவனத்தில் ஆரம்பத்தில் மாணவர்கள் சேர விரும்பவில்லை. அவன் அதை இடையில் விட்டு விட்டால் என்ன செய்வதென்று பல பெற்றோர்

பயப்பட்டனர். பெரும் முதலீடு செய்து தளபாடங்களையும் கற்றல் உபகரணங்களையும் வாங்கிய சஞ்சீவனைப் பலர் பயமுறுத்தினா. அதற்கு அவன் சொன்னான், “எதுவும் ஆரம்பத்தில் இலாபம் தராது. பெரிய முதலீட்டை ஓரிரு வருடங்களில் பெற்று விட முடியாது. கடவுளின் கிருபை எனக்கு இருக்கு. அத்துடன் திடமான மனமும் எனக்கு இருக்கு. நான் தனியே இதை நம்பி வாழவில்லை. பொன்னம்பலம் ஐயாவின் கமத்தில் தினமும் நல்ல வருமானம் கிடைத்து வருகிறது. அது எனக்கு வாழ்க்கைக்குப் போதும் நான் கடன்படவில்லை. பெரியவர்கள் உதவி செய்துள்ளார்கள். அத்துடன் எனது மனைவியின் நகைகளை அடைவு வைத்தேன். ஒரு செயலைத் தொடங்கினால் தான் வெற்றி பெறலாம். தொடங்காமல் இருந்து நட்டம் வருமென்று பயந்தால் முன்னேற முடியாது” என்றான். அவனது மனவுறுதியைப் பொன்னம்பலமும் கந்தவனமும் பாராட்டினர். பொன்னம்பலமும் கந்தவனமும் அடிக்கடி சஞ்சீவனது கல்வி நிறுவனத்திற்குச் செல்வதால் மக்களுக்கு நம்பிக்கை உண்டானது. பிள்ளைகள் சேரத் தொடங்கினர்

### 97. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்
### இன்பம் வேண்டுவோன் துன்பம் தண்டான்.

“உழைத்து இன்பம் பெற விரும்புவோர் செயலின் போது வரும் துன்பங்களை இன்பமாக ஏற்பர்”

“சஞ்சீவனுக்கு உதவியாக ஓர் இலட்சம் ரூபா கொடுத்த துரைசிங்கத்தின் மகளுக்குத் திருமணம் நிட்சயிக்கப்பட்டது.அதைத் துரைசிங்கம் சஞ்சீவனுக்குச் சொல்லித் தனது பணத்தைக் கேட்டார்.

“:நீ எனக்குப் பணம் தரும் போதே சொல்லித் தானே தந்தனீ.அதனால் எப்பாடுபட்டாவது உனது பணத்தைத் தருவேன்” என்ற சஞுசீவன் தனக்குத் தெரிந்தவாகளிடமெல்லாம் சென்று பணத்தைக் கடனாகக் கேட்டான். யாரும் கொடுக்கவில்லை. திருமண நாளும் நெருங்கிக் கொண்டிருந்தது. சஞ்சீவனில் உள்ள நம்பிக்கையில் துரைசிங்கம் அதன் பின் பணம் கேட்கவில்லை. சுந்தரமூர்த்தி சொன்னான், “துரை, சஞுசீவன் கெட்டவன் .நான் வளர்த்து விட எனக்கே சவால் விட்டவன்.நான் இயலாமல் வைத்தியசாலையில் இருந்த போது எனது வேலையை விட்டவன். அவனுக்கு நல்ல மனம் இல்லை. அவன் தரமாட்டான். அவனை நம்பியிருந்தால் உனது மகளின் திருமணம் நடைபெறாது.”என்றான். அவன் சொன்ன பிறகு துரைசிங்கத்திற்குப் பயமாக இருந்தது. அதனால் துரைசிங்கம் சஞ்சீவனிடம் சென்றான். “துரை. நான் சொன்ன சொல் மாற மாட்டேன். இன்று மாலைக்குள் உனது பணத்தைத் தருவேன். உழைத்து முன்னேற விரும்புபவனுக்கு அடிக்கடி துன்பங்கள் பல வரும். அதை அவன் துன்பமென

நினைத்துக் கலங்கினால் முன்னேற முடியாது. முன்னேற விரும்புபவன் வேதனைப்பட மாட்டான்” என்றான் சஞ்சீவன்.

பணம் கிடைக்காததால் சஞ்சீவன் தனது மனைவியின் தாலிக்கொடியை விற்றுத் துரைசிங்கத்திற்குப் பணத்தைக் கொடுத்தான்.

**98. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**துன்பம் வேண்டுவோன் இன்பம் தண்டான்.**

“துன்பத்தை எதிர்கொண்டு மனங் கலங்காதவன் எதிர்காலத்தில் இன்பத்தை அனுபவிப்பான்”

“சஞ்சீவா, நீ இந்தக் கல்வி நிலையத்தை ஆரம்பித்த போது பெரும் துன்பப்பட்டாய். துரைசிங்கத்திடம் பெற்ற கடனைத் தீர்க்க நீ என்னிடம் வந்த போது பணம் இருக்கவில்லை. எனினும் உனது மனத்திடத்தைப் பாராட்டியே தீர வேண்டும். மனைவியின் நகைகள் அனைத்தையும் விற்றாய். தாலிக்கொடியை எல்லோரும் புனிதமான ஒரு பொருளாக நினைத்து பத்திரப்படுத்தி வைத்திருப்பார்கள். பெண்கள் தாலியைக் கழற்றுவது தனது கணவன் இறந்த பின்பு தான். அப்படியிருந்தும் உன்மீது அளவில்லாத பாசம் கொண்ட உனது மனைவி எதுவும் சொல்லாமல் தாலிக்கொடியைக் கழற்றித் தந்து விட்டாள். நான் கூட உனக்குப் பைத்தியம் பிடித்து விட்டது என்று தான் நினைத்தேன். கந்தவனம் அண்ணை, இவன் அகலக் கால் வைக்கிறான் .விரலுக்கு

ஏற்றது தான் வீக்கம். இவனின் செயல் வெற்றி பெறாவிட்டால் இவனால் மீள முடியாது."என்றவர். நானும் பயந்தேன். எனது மனைவி, "அவன் சிறு பிள்ளை.நீங்கள் புத்திமதி சொல்லக் கூடாதா?" என்று கேட்டாள். ஆனால் நீ வரும் துன்பங்களை எதிர்க்கொண்டு வெற்றி காணாவிட்டால் எதிர்காலத்தை இன்பமாக அனுபவிக்க முடியாதென்றாய். அதன்படி நீ கூறியவை தான் சரி. உன்னைத் தவிர வேறு யாராக இருந்தாலும் மனம் சலித்திருப்பார்கள். இனி உனக்குப் பெரு வாழ்வு தான்" என்றார் பொன்னம்பலம்.

**99. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**ஏமம் வேண்டுவோன் முறை செயல் தண்டான்.**

"பாதுகாப்பான வாழ்க்கையை விரும்புவோர், சட்டத்தையும் அறத்தையும் மீறாது வாழ்வர்"

"ஐயா,, முன்னேற நினைப்பவன் சட்டத்தையும் அறத்தையும் உயிராக மதித்து வாழ வேண்டும்"என்று நீங்கள் தானே கற்பித்தீர்கள். நான் அறத்தை ஒரு போதும் மீறியதில்லை. துரைசிங்கம் பணத்தைத் தரும்போது , "சஞ்சீவா, நீ எனது நெருங்கிய உறவினன்.புதிதாக தொழிலை ஆரம்பிக்கப் போவதாகச் சொல்கிறாய். அதற்கு நான் உதவத் தான் வேண்டும்.எனக்கு இருப்பது ஒரே ஒரு மகள்.அவளின் திருமணத்திற்காகக் கொஞ்சம் பணம் சேமித்து

வைத்திருக்கிறேன். அதைத் தருகிறேன். எனது மகளுக்குத் திருமணம் பேசப்படுகிறது. நிட்சயிக்கப்படும் வரை எனது பணத்தைத் தருகின்றேன். எனக்கு வட்டி வேண்டாம்” என்றவர். அதனால் தான் நான் விற்கக் கூடாததை விற்றேன். சுந்தரமூர்த்தி மிகவும் கேவலமானவன். அவன் எனது வேதனத்தை ஒழுங்காகத் தருவதில்லை. எனது சம்பளப் பாக்கியாக இரண்டு இலட்சம் ரூபா தரவேண்டும். அதற்கு ஆதாரமில்லை. அதனால் நான் வழக்குப் போடவில்லை. அறத்தையும் சட்டத்தையும் மதித்து வாழ்பவனுக்கு வாழ்வில் எந்தக் குறைகளும் ஏற்படாது. ஊரில் உள்ள நல்லவர்களின் வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்தேன். அவர்கள் சட்டத்தையும் அறத்தையும் தமது உயிராகப் போற்றுவதைக் கண்டே அதன்படி நடக்கிறேன்” என்றான் சஞ்சீவன்.

## 100. ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் காமம் வேண்டுவோன் குறிப்புச் செயல் தண்டான்.

“தன் மனைவியிடம் இன்பத்தை அடைய விரும்புபவன் அவளின் மனக் குறிப்பை அறிந்து கொள்ளத் தவற மாட்டான்”

சஞ்சீவனின் மனைவி ஆரண்யா பேரழகி. அவளது கண்களைப் பார்த்துக் கொண்டேயிருக்கலாம். சிவந்த கன்னங்கள், அவனின் அருகே வரும் போது மேலும் சிவந்திருக்கும். அவள் காமம் கொண்டு அவனை அணுகும் போது தலையில் நறுமணமுள்ள

பூச் சூடியிருப்பாள்.உதட்டைக் கடித்துச் சிரிப்பாள். கீழுதட்டை நாவால் தடவுவாள். சிணுங்குவாள்.காமம் சம்பந்தமான கதைகளைக் கதைப்பாள். நெருங்கி அமர்வாள். அப்படியான வேளைகளில் அவளை அணைத்தானேயானால் அவளது உடல் கதகதப்பாக இருக்கும் .கூடி மகிழும் போது கிடைக்கும் இன்பம் புதுமையானதாக இருக்கும்.

அன்று அவள் வழமைபோல் வந்து பாலைக் கொடுத்தாள். பாலைப் பெறும் போது அவனது விரல்கள் அவளது கையில் உரசின.அது மரக்கட்டை போல இருந்தது. அவள் மறுநாள் செய்ய வேண்டிய வேலைகளைச் சொல்லி விட்டுப் படுத்த சில கணங்களில் குறட்டை ஒலி கேட்டது. சஞ்சீவன் பெருமூச்சு விட்டு விட்டுப் படுத்தான்.

அதிகாலையில் அவள் அவனின் மேலே கைகளை வைத்திருந்தாள். அதை அவன் விலக்கச் சிணுங்கியபடி அவனைக் கட்டிப்பிடித்தாள். அவளது குறிப்பு விளங்கிய சஞ்சீவன் அவளை இறுக அணைத்தான். அவள் தனது பிடியை இறுக்கினாள். இரவு கை கூடாதது விடியற் காலையில் கை கூடியதால் பெரு மகிழ்ச்சியுற்றான் சஞ்சீவன்.